


பார்த்தால் யாரும் பயந்து பீதி யடைய வேண்டியதுதான்.

லக்ஷ்மணனது பாணங்கள் குதிரை களை ஊடுருவிச் செல்கின்றன. குதிரை களும் திடீரென்று கீழே சாய்கின்றன. குதிரை மேலிருந்த வீரர்கள் தரை யில் நின்றவர்களாய் உடல் பதைக் கிறார்கள்.

யானைமேலிருந்த படைத் தலை வர்கள்,-அப்பாவிகள் யானை உருண்டு விழவும் காலால் நடந்து செல்கிறார்கள்.

பரிபட் டு
விழச்சிலர் நின் று
பதைத் தார்;

கரிபட் டுரு
ளச்சிலர் கால்கொடு
சென் றார்;

தேர்பட் டழி
தேரிடை யேபலர்
நின் றார்—

எரிபட் ட
மனைக்குன் றி ருந்தவர்
என் ன.

[பரி பட்டு விழச் சிலர் நின்று பதைத்தார்: அம்பு துளைத்த காரணமாக குதிரை செத்து விழுந்து. குதிரை வீரர்கள் நின்று பதைத் தார்கள். கரிபட்டு உருளச் சிலர் கால் கொடு சென்றார்: யானை உருண்டு விழவும் அதன்மேல் இருந்தவர்கள் அவமானப்பட்டுக் காலால் நடந்து போனார்கள். வேறு என்ன செய்யமுடி யும் அவர்களால்; தேர்பட்டு அழி தேரிடையே பலர் நின்றார்: தேரின் மேற் கோப்புகள் லக்ஷ் மணனது பெரிய பெரிய பாணங்கள் வந்து தாக்கவும் நொறுங்கிச் சுக்குச் சுக்காய்ப் போய் விட்டன. அப்படிப் போவதைத் தேர்த் தட்டில் நின்ற பலர் பார்த்தார்கள். அவர்கள் நின்ற நிலையை என்ன என்று சொல்ல; எரிபட்ட மனைக்குன் இருந்தவர் என்ன—நின்றார்.]

இப்படிப் பரிதாபமான நிலைக்கு வந்து விட்டார்கள் மிக்க ஆடம்பரத் தோடு குதிரை மேலும், யானை மேலும் தேர்மேலும் இருந்து சவாரி வந்த அரக்க வீரர்கள்.

அபூர்வமான பயங்கர பாவங் கொண்ட செய்யுள்.


யுத்தகளத்தில் நேருக்கு நேர் நின்று பார்த்து அனுபவிப்பது போன்ற காட்சியைத் தருகிறது செய்யுள்.




நீதி ஒரு நீலியின்
புன்சிரிப்புக்கு
நெளிந்துவிட்டது..
தர்மம் தலை
வணங்காமல்
போராட்டம் நடத்தி
வெற்றி கண்டது...
மாடர்ன் தியேட்டர்ஸ்
திகம்பர
சாமியார்
தோற்றுவிக்கும் வடுவூராரின்
கற்பனைக் காவியம்......
விரைவில்
வெளிவருகிறது
டைரக்ஷன்:
டி. ஆர். சுந்தரம்


குழந்தையின் அழுகை ஓயாதென்றே நினைத்தேன்—
....என் தாயார் சொன்ன பிறகு தான் காரணம் விளங்கியது!
குழந்தை இப்பொழுது அழுவதே இல்லை
ஜான்ஸன்ஸ் பேபி பவுடர்
Johnson's BABY POWDER
BABY POWDER
குழந்தைக்குச் சிறந்தது— உங்களுக்கும் சிறந்தது!







தேவகி - கிருஷ்ணமணி

மைசூர் அகௌண்டெண்ட் ஜெனரல் ஸ்ரீ வி. டி. ஸ்ரீனிவாஸன் அவர்களின் குமாரத்தி சௌபாக்யவதி தேவகிக்கும் மதராஸ் சிவில் & சானிடேரி இன்ஜினீயர்கள், மெஸர்ஸ் கிங் & கம்பெனி புரொப்ரைட்டர் ஸ்ரீ எம். வி. சுப்பிரமணிய அய்யரின் மருமானும் லேட். ஸ்ரீ பி. கே. சுப்பிரமணிய அய்யரின் குமாரனுமான சிரஞ்சீவி பி. என். கிருஷ்ணமணிக்கும் சென்ற ஆகஸ்டு 18-ம் தேதி பெங்களூரில் வெகு விமரிசையாக விவாகம் நடந்தேறியது. அன்று மாலை நடந்த வரவேற்பு விழாவின் சமயம் ஸ்ரீ சௌடய்யா வயலின், கல்பாத்தி ஸ்ரீ ராமநாதன் மிருதங்க பக்க வாத்தியங்களுடன் ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மியின் இன்னிசைக் கச்சேரி நடைபெற்றது. விழாவிற்குப் பல பிரபலஸ்தர்களும் நண்பர்களும் வந்து சிறப்பித்தனர்.

கல்கி

பொருளடக்கம்


மலர் 10 இதழ் 7 | செப்டம்பர் 17 | விக்ருதி௵ புரட்டாசி 1

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; சம்பவங்களும் கற்பனையே.

செவிடன் காதில் சங்கு!



பிளாக் மார்க்கெட் ஆபத்தையும் கொள்ளை லாப ஆசையையும் ஒழிப்பதில் சர்க்காருடன் ஒத்துழைக்க வேண்டும் என்று ஜனாதிபதி பாபு ராஜேந்திரப் பிரசாத் டில்லியில் நடந்த வர்த்தகப் பிரதிநிதிகள் கூட்டத்தில் கேட்டுக் கொண்டார்.



காஷ்மீரின் ஒரு பகுதியைப் பிடித்துக் கொண்டிருக்கும் 'ஆஸாத் காஷ்மீர்' சர்க்காருக்குப் பாகிஸ்தான் சர்க்கார் உதவி புரிந்து வந்தார்கள். அது இப்போது மாலுமி சிந்துபாத் துஷ்டக் கிழவனுக்கு உதவி புரியச் சென்ற அரபியக் கதையாக முடிந்திருக்கிறது.

தமிழ்த் திருநாடு தன்னைப் பெற்ற — தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்

மலர் 10 கல்கி இதழ் 7

என்ன சேதி ?

ஐம்பத்தாறாவது காங்கிரஸ்

இந்திய தேசிய காங்கிரஸ் மகா சபையின் 56-வது வருஷக் கூட்டம் நாஸிக்கில் நிர்மாணிக்கப் பட்டுள்ள காந்தி நகரில் இம்மாதம் 20-ந் தேதி ஆரம்பமாகிறது. மேற்படி காங்கிரஸ் அக்ராசனராகத் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ள பாபு புருஷோத்தம தாஸ் தாண்டன் எங்கேயோ பதுங்கிக் கொண்டு தலைமைப் பிரசங்கத்தைத் தயாரித்ததாகக் கூறப்பட்டது. புலி பதுங்குவது பாய்வதற்காகத் தான் என்று சொல்லுவார்கள். அது போல ஸ்ரீ தாண்டன் வெகு நீளமான பிரசங்கத்தைத் தயாரித்து காங்கிரஸ் பிரதிநிதிகள் மீது பாய்ந்தாலும் பாயலாம்! ஸ்ரீ தாண்டனின் பிரசங்கம் சுருக்கமாக இருந்தாலும் இருக்கட்டும் அல்லது நீண்டதாக இருந்தாலும் இருக்கட்டும். மாசு படிந்துள்ள காங்கிரஸ் ஸ்தாபனத்தைத் தூய்மைப் படுத்துவதற்கான யோசனைகள் அவரது பிரசங்கத்தில் அடங்கியிருந்தால் போதுமானது. தற்போது பாரத நாட்டை எதிர் நோக்கி நிற்கும் பல்வேறு பிரச்னைகளையும் தீர்ப்பதற்குற்ற வழி வகைகளையும் ஸ்ரீ தாண்டன் தலைமையில் காங்கிரஸ் வகுத்து ஜனங்களின் நம்பிக்கைக்குப் பூரண பாத்திரமாக விளங்கும் என நம்புகிறோம்.

நடுக்கண்ட நியாயம்

அன்னியர் ஆதிக்கத்தின் கீழ் இருந்த இந்தியாவுக்கும் சுதந்திர இந்தியாவுக்கும் உள்ள வேற்றுமையைப் பாருங்கள். இந்த நாட்டில் பிரிட்டிஷ் ஆட்சி இருந்த காலத்திலே சர்க்காரை எதிர்த்துத் தனி நபர்கள் வழக்குத் தொடருவது அபூர்வமான விஷயம். அப்படியே வழக்குத் தொடர்ந்தாலும் அந்த வழக்கில் நீதி கிடைப்பது அதைக் காட்டிலும் அபூர்வமான காரியம்.


ஆனால், சுதந்திர இந்தியாவிலே சென்ற சில மாதங்களில் எத்தனை பேர் நீதி கோரி சர்க்காருக்கு எதிராக வழக்குத் தொடர்ந்தார்கள்? எத்தனை பேருக்கு நீதி கிடைத்தது? இந்த உண்மையைக் கணக்கு எடுத்துப் பார்த்தால் யாரும் ஆச்சரியப் படாமல் இருக்க முடியாது. தனி நபர்கள் தொடர்ந்த பெரும்பாலான வழக்குகளும் அவர்களுக்குச் சாதகமாகவும் சர்க்காருக்கு விரோதமாகவும் முடிந்தன. ஹைதராபாத்திலிருந்து யாருக்கும் தெரியாமல் மாறுவேடம் பூண்டு வெளிநாட்டுக்கு ஓடிவிட்ட ஹைதராபாத் மாஜி பிரதம மந்திரி லேயிக் அலி முதலிய மற்றும் பலர் மீது நடந்த வழக்கில் சம்பந்தப்பட்ட யாவரும் விடுதலை பெற்று விட்டார்கள்.

ஆனால் இதற்கு விலக்காக இப்போது ஒரு வழக்கு முடிந்திருக்கிறது. ஹைதராபாத்தில் சர்வாதிகாரியாக விளங்கிவரும், இந்திய சர்க்கார் போலீஸ் நடவடிக்கை எடுக்கும்படியான நிலைமையைச் சிருஷ்டித்தவருமான சையது முகமது காஸிம் ரஸ்வி மீது சென்ற ஒரு வருஷத்துக்கு மேலாக நடந்துவந்த வழக்கு விசாரணை இப்போது முடிந்து விட்டது. கொலைக்கு உடந்தையாய் இருந்ததாக அவர் மீதும் மற்றும் இருவர் மீதும் நடந்த வழக்கில் விசேஷக் கோர்ட்டார் அந்த மூவருக்கும் ஜன்ம தண்டனை அதாவது ஆயுள் வரையில் சிறைத் தண்டனை விதித்திருக்கிறார்கள். இதிலிருந்து ரஸ்வி கோஷ்டியினர் எவ்வளவு கடுமையான குற்றங்களைச் செய்திருக்க வேண்டும் என்பது நன்கு தெரிகிறது அல்லவா?

சென்ற மகாயுத்தத்துக்குப் பின் பிரிட்டிஷ், அமெரிக்க சர்க்கார்கள் யுத்தக் குற்றவாளிகள் விஷயத்தில் எவ்விதம் நடந்து கொண்டார்கள் என்பதைக் கவனிப்பவர்களே, ரஸ்வி போன்ற யுத்தக் குற்றவாளிகள் விஷயத்தில் இந்தியா கைக்கொண்ட முறையின் நீதியையும் உயர்வையும் உணர்ந்து கொள்ள முடியும்.

இராஜதந்திர வீரர்

பல வருஷங்கள் தென்னாப்பிரிக்கா பிரதம மந்திரியாக இருந்தவரும் சிறந்த சர்வ தேச இராஜ தந்திரிகளில் ஒருவர்



பாரதியார் சங்கத்தின் ஆதரவில் சென்ற 11ட தியாகராஜநகர் ஸ்ரீ ராமகிருஷ்ணு உயர்-நிலைப் பள்ளி மண்டபத்தில் பாரதியார் விழா சிறப்பாக நடைபெற்றது. பாரதியார் உருவப்படமும் பிரசங்கமேடையும் அழகாக அலங்கரிக்கப்பட்டுத் திகழ்ந்தன. எட்டயபுரத்தில் தலைமை வகித்திருக்கவேண்டிய கனம் டாக்டர் டி. எஸ். எஸ். ராஜன் தலைமை வகித்துப் பாரதியாரைப் பற்றி அரிய சொற்பொழிவு ஆற்றினர். மற்றும் அன்று எட்டயபுரத்தில் பேசுவதற்கிருந்த ஸ்ரீ வி. வா. ஜகன்னாதன், ஸ்ரீமதி சரோஜினி வரதப்பன், முன்னள் மேயர் ஸ்ரீ எஸ். ராமசாமி நாயுடு, ஸ்ரீ ட்ரோஜன் அண்ணுமலைச் செட்டியார் முதலியோர் பாரதியாரைப் பற்றிப் பேசினர்கள். பாரதியார் பாட்டுப் போட்டியில் பரிசு பெற்றவர்களுக்கு வெள்ளிக் கிண்ணங்களும் புத்தகங்களும் பரிசு வழங்கப்பட்டன. விழாத் தலைவருக்கும், சொற்பொழிவாளருக்கும், பரிசுகள் உதவிய ஸ்ரீ சபா. சிதம்பரம் செட்டியாருக்கும், விழாவை முன்னின்று நடத்திக் கொடுத்த ஸ்ரீ சின்ன அண்ணுமலைக்கும் "கல்கி" ஆசிரியர் நன்றி கூறினர்.

என்று பிரசித்தி பெற்றவருமான ஜெனரல் ஸ்மட்ஸ் சென்ற வாரம் தென்ஞப்பிரிக்காவில் காலமாஞர். எண்பது வயதான ஜெனரல் ஸ்மட்ஸின் வாழ்க்கை உலக சரித்திரத்தில் நிகழ்ந்த பல முக்கிய சம்பவங்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டது. ஸ்மட்ஸ் சிறந்த ராஜதந்திரி மாத்திரமல்ல, போர் வீரரும் ஆவார். போயர் யுத்தத்தில் பிரிட்டனுக்கு எதிராகப் போர் புரிந்த ஸ்மட்ஸ் பிறகு பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் உறுதியான நண்பராக விளங்கினர். முதலாவது மகா யுத்தம் நடந்தபோது பிரிட்டிஷ் பிரதம மந்திரியாக இருந்த லாயிட் ஜார்ஜ் ஸ்மட்ஸை வருந்தி அழைத்துத் தம்முடைய யுத்தகால மந்திரி சபையில் சேர்த்துக் கொண்டார் என்ருல், ஸ்மட்ஸின் நிர்வாகத் திறமையையும் ராஜதந்திரத்தையும் ஊகித்துக் கொள்ளலாம்.

காந்தி மகான் தென்ஞப்பிரிக்காவிலே முதன் முதலாகச் சத்தியாக்கிரக இயக்கத்தை ஆரம்பித்தபோது, அவ்விஷயத்தில் ஸ்மட்ஸ் அனுதாபம் காட்டினர். அதன் காரணமாக காந்தி-ஸ்மட்ஸ் ஒப்பந்தமும் ஏற்பட்டது. காந்திஜிக்கும் ஸ்மட்ஸுக்கும் ஏற்பட்ட நட்பு இறுதி வரையில் நீடித்திருந்தது. பின்னர் இந்தியாவின் சுதந்திரப் போராட்டத்திலும் ஸ்மட்ஸ் அக்கறை காட்டி வந்தார். இப்போது தென்ஞப்பிரிக்காவில் அதிகாரத்தில் இருக்கும் கொடிய நிறவெறி பிடித்த டாக்டர் மலான் சர்க்காரையும் கடைசி மூச்சு உள்ள வரையில் கண்டித்து தென்ஞப்பிரிக்காவை எச்சரிக்க ஸ்மட்ஸ் தயங்கவில்லை. அப்படிப்பட்ட சிறந்த தலைவரும் ராஜதந்திரியுமான ஸ்மட்ஸ் மறைந்ததால் உலகத்துக்கு ஏற்பட்ட நஷ்டத்தைக் குறித்து வருந்துகிறோம்.

சத்தியமும் சிறுமீன்களும்!

இங்கிலாந்திலே சில நூற்றாண்டுகளுக்கு முன் எட்டாவது ஹென்றி என்ற மன்னன் ஆட்சிபுரிந்து வந்தான்.

அவனுக்கு வாய்த்த தாமஸ் உல்ஸி என்னும் அமைச்சன் ராஜதந்திரத்திலும் நிர்வாகத் திறமையிலும் மிக்க நிபுணனாக விளங்கி வந்தான்.

ஆனால், அவனது திறமை முழுதும் மன்னன் செய்யும் அக்கிரமங்களுக்கு உடந்தையாக இருப்பதிலேயே உபயோகிக்கப்பட்டு வந்தது.

அதனால் மன்னனின் அதர்மச் செயல்கள் நாளுக்கு நாள் அதிகமாகி வந்தன. இறுதியில் அவை எல்லையற்ற ராஜ விசுவாசம் உள்ள உல்ஸியையே திடுக்கிட வைத்தன.

எனினும் உல்ஸி ஹென்றி மன்னனின் அட்டூழியத்தைக் கண்டிக்கத் துணியவில்லை. அதற்கு மாறாக, அவனது கொடிய கட்டளையை நிறைவேற்றுவதில் சிறிது காலம் கடத்தினான்.

அவ்வளவுதான்! மன்னனுக்கு மூக்குக்கு மேல் கோபம் வந்தது. அந்தக் கோபம் உல்ஸியின் உயிருக்கு உலையாக முடிந்தது.

"உன்னிடம் வைத்த விசுவாசத்தில் பத்தில் ஒரு மடங்கு கடவுளிடம் வைத்திருந்தால், உன்னைப் போல் அவர் என்னை இந்தக் கதிக்கு உள்ளாக்கி யிருக்க மாட்டார்" என்று பரிதாபமாகப் புலம்பினான் உல்ஸி.

பிரிட்டிஷ் சரித்திரத்திலேயே முக்கிய இடம் பெற்றுள்ள மேற்படி சம்பவத்தை ஷேக்ஸ்பியர் முதல் நாடகாசிரியர்களும் சரித்திராசிரியர்களும் உருக்கமாகச் சித்திரித்திருக்கிறார்கள்.

* * *

சென்ற மூன்று வருஷங்களுக்கு மேலாகக் கள்ள மார்க்கெட்காரர்களும் கொள்ளை லாப ஆசை பிடித்தவர்களும் செய்யும் அக்கிரமங்களைச் சுதந்திர இந்திய சர்க்கார் சகித்துக் கொண்டு வருகிறார்கள். அந்த அக்கிரமங்களை அவர்கள் கைவிட்டு விடுவார்கள் என்ற நம்பிக்கையினால் அவர்களை நயந்து அவர்களுக்குச் சலுகை மேல் சலுகை காட்டி வருகிறார்கள்.

"தேசத்தின் நலனை முன்னிட்டு அப்படி யெல்லாம் செய்யாதீர்கள். பாரத நாட்டின் எதிர்கால முன்னேற்றம் உங்கள் கையில்தான் இருக்கிறது" என்று பண்டித ஜவாஹர்லால் நேரு பல தடவைகளிலும் அவர்களுக்கு நல்ல வார்த்தை சொன்னார்.

வெட்டு ஒன்று, துண்டு இரண்டு என்று பட்டவர்த்தனமாக அடித்துப் பேசும் 'இரும்பு மனிதர்' சர்தார் பட்டேல் கூடக் கருப்பு மார்க்கெட் காரர்களைக் கெஞ்சிக் கேட்டுக் கொண்டார் "இது வரையில் நீங்கள் செய்த அக்கிரமங்களை யெல்லாம் பார்த்தும் பாராததுபோல் இருந்து விடுகிறோம். இனி மேலாவது ஒழுங்காக நடந்து கொள்ளுங்கள்" என்று ரொம்பவும் வினயமாக வேண்டிக் கொண்டார்.

சென்ற வாரம் புது டில்லியிலே நடந்த ஏழாயிரம் வர்த்தகர்களின் பிரதிநிதிகள் அடங்கிய கூட்டத்தில் ஜனாதிபதி பாபு ராஜேந்திரப் பிரசாதரும் அவ்வாறே கேட்டுக் கொண்டிருக்கிறார்.

தலை சிறந்த தலைவர்களும் மந்திரிமார்களும் பிரமுகர்களும் சென்ற சில வருஷங்களாகக் கருப்பு மார்க்கெட் காரர்களை எவ்வளவோ கேட்டுக் கொண்டும் கூட இதுவரை எள்ளளவு பலனாவது ஏற்படவில்லை.

கள்ள மார்க்கெட் முன்னம் இருந்ததை விட அதிகமாகி யிருக்கிறது; விலைவாசிகளும் அதிகமாகி யிருக்கின்றன; ஜனங்களின் கஷ்டங்களும் அதிகமாகி யிருக்கின்றன. அவைகளின் உக்ரம் சமீபத்தில் தணிவதற்கான அறிகுறி எதையும் காணோம்.

ஒருவேளை அவர்கள் எல்லோரும் கடவுளை அவ்வாறு வேண்டிக் கொண்டிருந்தால், கடவுளின் கருணைக்குப் பாத்திரமாகி யிருக்கலாம். கல்நெஞ்சர்களான கொடிய கள்ள மார்க்கெட் காரர்கள் தலைவர்களையும் மக்களையும் தேசத்தையும் கை விட்டது போல் கடவுள் கை விட்டிருக்க மாட்டார்!

* * *

"பாரத நாடு விடுதலை பெறுவதற்காக நீங்கள் காட்டிய தியாக உணர்ச்சி யெல்லாம் இப்போது எங்கே போய் விட்டது? பண்டித ஜவாஹர்லால் நேரு, சர்தார் பட்டேல் போன்ற ஒப்பற்ற தலைவர்களின் வேண்டுகோளுக்குக் கூட நீங்கள் செவி சாய்க்காமல் இருப்பதேன்? கள்ள மார்க்கெட் காரர்கள், கொள்ளை லாப ஆசை பிடித்தவர்கள், பதுக்கல் பேர்வழிகள் இவர்களுடைய முதுகெலும்பை முறிப்பதில் நீங்கள் சர்க்கா

ருடன் ஒத்துழைக்க முன் வராததேன்? விடுதலைப் போராட்டம் நடந்தபோது அன்னியத்துணி பகிஷ்கார விஷயத்தில் நீங்கள் காட்டிய உற்சாகமும் உத்வேகமும் இன்று எங்கே போய் விட்டன?''

இவ்வாறு நமது ஜனாதிபதி வர்த்தகர்களுக்குச் சில கேள்விகளைப் போட்டார்.

இப்போது கள்ள மார்க்கெட் மயமாக இருக்கும் வர்த்தகர்களிடையே சில யோக்கியர்கள் இருப்பது போல, விடுதலைப் போராட்டம் நடந்த காலத்திலும் அவர்களிடையே சில தேச பக்தர்கள் இருந்திருக்கலாம்.

எனினும் அந்தக் காலத்தில் பம்பாய், ஆமதாபாத் முதலிய இடங்களிலுள்ள மில் முதலாளிகள் சுதேசியின் பெயரால் தேச நலனுக்கு விரோதமாகக் கொள்ளை லாபம் அடித்ததைக் காந்தி மகான் கண்டித்தது பலருக்கும் ஞாபகம் இருக்கலாம்.

விடுதலைப் போராட்டம் நடந்தகாலத்தில் தியாகம் செய்ததும் தடியடி பட்டதும் சிறை சென்றதும் பாமர மக்களும் நடுத்தர வகுப்பினருமே யன்றி வர்த்தகர்களோ முதலாளிகளோ அல்ல. விடுதலை கிடைத்த பின்னரும் அதே பாமர மக்களும் நடுத்தர வகுப்பினரும் தான் சொல்லொணாத் துன்பத்துக்கு ஆளாகி வருகிறார்கள்.

கள்ளமார்க்கெட் காரர்கள், கொள்ளை லாப ஆசை பிடித்தவர்கள் இவர்கள் விஷயத்தில் சர்க்கார் இதுவரையில் சாம, தான, பேதம் என்ற மூன்று உபாயங்களையும் பிரயோகித்துப் பார்த்து விட்டார்கள். இப்போது அவசரச் சட்டங்கள் ரூபமாக தண்டோபாயத்தையும் பிரயோகிக்க முன் வந்திருக்கிறார்கள். எனினும் மேற்படி பேர்வழிகள் நாலுவித உபாயத்துக்கும் அப்பாற்பட்ட சூரர்களாதலால், சர்க்காரின் பாச்சா அவர்களிடம் பலிக்குமா?

"ஜனங்களின் துன்பத்தையும் கஷ்டத்தையும் ஜீவனமாகக் கொண்டு கொழுத்து உலாவும் சுறா மீன்களைச் சர்க்கார் அனுமதிக்க மாட்டார்கள்" என்று இந்திய சர்க்கார் கைத்தொழில் மந்திரி ஸ்ரீ ஹரிகிருஷ்ண மேதாப் காரசாரமாகப் பேசியிருக்கிறார்.

தலைவர்களும் மந்திரிகளும் எவ்வளவு காரசாரமாகப் பேசினாலும் சிறிய மீன்களைச் சாப்பிட்டு ஏப்பமிடும் சுறா மீன்களைப்போல, பாமர மக்களின், நடுத்தர வகுப்பாரின் உதிரத்தை உறிஞ்சும் கள்ளமார்க்கெட் சுறாமீன்கள் சத்தியத்துக்கும் தர்மத்துக்கும் கட்டுப்படுமா?

எனினும் இத்தகைய விபரீதங்களிலிருந்து ஜனங்கள் விடுதலை பெற வேறு வழி எதுவும் இல்லையா?

வேறு வழி இருக்கத்தான் செய்கிறது.

கள்ள மார்க்கெட்காரர்களுக்கு வேண்டுகோள் விடுப்பதுடன், அதிகாரிகளின் லஞ்ச ஊழலைக் கண்டிப்பதுடன் தலைவர்கள் நின்றுவிடக் கூடாது. கள்ளமார்க்கெட்டுக்கும் லஞ்ச ஊழலுக்கும் இடம் இல்லாமல் செய்ய வேண்டும். அவ்விதம் செய்வதற்கு இரண்டு முக்கிய வழிகள் இருக்கின்றன.

1. உற்பத்தியைப் பெருக்குவதில் சர்க்கார் முழு கவனத்தையும் செலுத்த வேண்டும்.

உணவோ, உடையோ, மற்றச் சாதனங்களோ ஜனங்களின் தேவைக்குப் போதிய அளவு கிடைத்து விட்டால் கள்ள மார்க்கெட் தானாகவே செத்து விடும். கள்ள மார்க்கெட்டை ஒழிக்க அதைத் தவிர வேறு வழி எதுவுமே இல்லை. இந்திய சர்க்காரும் மாகாண சர்க்கார்களும் உற்பத்தி பெருகும் விஷயத்தில் தங்களுடைய முழு கவனத்தையும் சக்தியையும் செலுத்தவேண்டும். பிரசாரத்துடன் நிற்காமல் கிரியாம்சையில் பலனைக் கொடுக்கக்கூடிய முறைகளைத் தாமதமின்றிக் கைக்கொள்ள வேண்டும்.

2. தற்போது செலாவணியில் இருக்கும் அபரிமிதமான கரன்ஸி நோட்டுகளைக் குறைத்துத் தீரவேண்டும்.

ஏற்கனவே நூறு கோடி ரூபாய் வரையில் புழக்கத்தில் இருந்த கரன்ஸி நோட்டுகள் இன்று ஆயிரம் கோடி ரூபாய்க்கு மேல் அதிகமாகியிருக்கின்றன. அதன் புழக்கத்தைச் சுருக்க ஏதாவது வழி செய்தாலன்றி விலைவாசிகள் குறைய வகையில்லை. கரன்ஸி நோட்டுகளின் புழக்கத்தைக் குறைக்காமல் விலைவாசிகள் குறைவதற்கு என்ன வித்தை செய்தாலும் பலன் ஏற்படும் என்று தோன்றவில்லை.

சர்க்கார் தங்களுடைய செலவினங்களைக் குறைத்துத் தீவிரமான சிக்கன முறையைக் கைக்கொள்ள வேண்டும். உற்பத்தி பெருகுவதற்கு அவசியமான திட்டங்களைத் தவிர மற்ற எல்லாத் திட்டங்களையும் காலவரையறையின்றி ஒத்திப் போட்டுவிட வேண்டும். கரன்ஸி நோட்டுகளை ஓரளவாவது சுருக்க அதுதான் வழி.

மற்ற எந்த முறையும் தும்பை விட்டு விட்டு வாலைப் பிடிப்பதாகவே முடியும்.

அக்கப்போர்

"சென்னை மாகாணத்தில் எட்டு ஜில்லாக்களில் குடியானவர்களுக்குப் புதிய விவசாய முறைகளில் பயிற்சியளிப்பதற்காக 27 கௌரவ பிரசாரகர்களைச் சர்க்கார் நியமிக்கத் தீர்மானித்து விட்டனர்." —செய்தி.

மேற்படி பிரசாரகர்கள் குடியானவர்களுக்குப் புதிய விவசாய முறைகளைக் கற்றுக் கொடுக்காவிட்டாலும் பழைய விவசாய முறைகளை மறக்கடித்து விடாமல் இருப்பார்களாக!

★

அயல் நாட்டிலுள்ள ஸ்தானிகர்கள் காரியாலயங்களில் கணக்கு வழக்குகளை பார்வையிடச் சென்ற இந்திய சர்க்காரின் ஆடிட்டர் ஜெனரல் ஸ்ரீ நரஹரிராவ் திரும்பிவந்து விட்டார். பத்திரிகை நிருபர்கள் கூட்டத்தில் அவர் பேசுகையில், "தற்போது ஸ்தானிகாலயங்களில் அமுலிலுள்ள கணக்குப் பரிசோதனை முறைகள் முற்றிலும் திருப்தியளிக்கவுமில்லை; முற்றிலும் அதிருப்தியளிக்கவுமில்லை" என்று கூறினார்.

ஸ்ரீ நரஹரிராவ் கூறுவது நமக்கும் முற்றிலும் விளங்கவுமில்லை; முற்றிலும் விளங்காமலும் இல்லை!

★

"ஆசியாவில் சமாதானம் நிலவவேண்டும் என்னும் ஒரு ஆசையைத் தவிர வேறு ஆசை அமெரிக்காவுக்கு இல்லை." —ட்ரூமன்.

இவ்வளவு பெரிய ஆசை ஒன்றே போதாதா!

★

"ஜனாதிபதி விதித்த விலைக் கட்டுப்பாடு அவசரச் சட்டத்தின் விளைவாக இங்கு க்ஷவர 'பிளேட்' கிடைக்காமல் 'ஸலூனில்' நாவிதர்களுக்கு அதிக வேலையும், 'காஸ்டிக் ஸோடா' உப்பு கிடைக்காமல் சலவைத் தொழிலாளருக்கு வேலையில்லாத் திண்டாட்டமும் ஏற்பட்டு விட்டது." —பாட்னா செய்தி.

எப்படியாவது அதிக விலை கொடுப்பதன் மூலம் பொது மக்கள் 'க்ஷவரம்' செய்யப்படுவது நின்று கறுப்பு மார்க்கெட்காரர்களின் சாயம் வெளுத்தால் போதுமென்று சர்க்கார் நினைக்கிறார்கள் போலும்!

★

பாரிஸில் கூடியிருக்கும் உலக பாங்கின் வருஷாந்திர அறிக்கையில் பின்வரும் விஷயம் காணப்படுகிறது: "கடன் கொடுப்பதில் சில உயர்ந்த கொள்கைகளை நாங்கள் பின்பற்றி வருகிறோம்." —பாரிஸ் செய்தி.

வட்டி ஒன்றைத் தவிர வேறு எது உயர்வாக இருந்தாலும் நமக்கு ஆட்சேபணை இல்லை.

★

இருபது கிராமங்கள் மூழ்கிக் கிடக்கின்றன. பிரோஸ்பூர் ஜில்லா நிலவரம்.
—செய்தித் தலைப்புகள்.

நிலவரம் என்பதைவிட ஜலவரம் என்று சொல்லுவது பொருத்தமாக இருக்குமே!

"உத்தரப் பிரதேசத்தில் சிறைச்சாலை சீர்திருத்தம் நடந்திருக்கிறது. சிறைச்சாலை சுவர்களில் ராமாயண கதாபாத்திரங்களின் படங்களைக்கொண்டு அலங்கரிக்கப் போகிறார்களாம். அத்துடன் கைதிகளின் பொழுது போக்குக்காக ராமாயண உபன்யாஸங்களும் ஏற்பாடு செய்யப் போகிறார்களாம்!"
—லக்ஷ்மணபுரி செய்தி.

ராமாயண உபன்யாசத்தின் முடிவில் சுண்டல் விநியோகம் இருக்கும் என்று நிச்சயமாகத் தெரிகிறது. எப்படி என்றால் "நாங்கள் மேலும் செய்திருக்கும் சில சௌகரியங்களைப் பகிரங்கப்படுத்தினால் சிறைக்கு வரும் கூட்டத்தை எங்களால் சமாளிக்க முடியாமல் போகலாம்," என்று உத்தரப் பிரதேச மந்திரி சட்டசபையில் கூறி இருக்கிறார்.

★

ஐந்து அங்குல நீள அதிசய கோழிமுட்டை.
—ஒரு செய்தித் தலைப்பு.

"இது என்ன அதிசயம்! என்னுடைய பையன் ஒவ்வொரு தினமும் ஸ்லேட்டில் எட்டு அங்குல நீளமுள்ள கோழிமுட்டையைப் பெற்றுக்கொண்டு வருகிறானே!" என்கிறார் ஒரு தகப்பனார்.

★

"இமயமலை கொஞ்சம் கொஞ்சமாகத் தெற்கு நோக்கி முன்னேறி வந்து சமவெளியை விழுங்கிக்கொண்டு வருவதாகச் சிலர் சொல்கிறார்கள். இது தவறு. பார்க்கப்போனால் சமவெளிகளில் உள்ள மனிதர்கள்தான் கொஞ்சம் கொஞ்சமாக மலைமீது ஏறி மலையை ஆக்கிரமித்து வருகின்றனர்." —ஒரு பத்திரிகை நிருபர்.

'மலை விழுங்கிகள்' என்று மனிதர்களுக்கு ஏற்பட்டிருக்கும் பெயர் ஊர்ஜிதமாகிறது!

★

நாசிக் காங்கிரஸ் மகாசபைக் கூட்டத்தின் போது தோட்டிகள் யாரையும் அமர்த்தப் போவதில்லை என்று ஒரு செய்தி கூறுகிறது.

நாசிக் காங்கிரஸ் நடக்கும்போது பிரதிநிதிகள் மூக்கைப் பிடித்துக்கொண்டு வீற்றிருப்பார்கள் போலும்!

★

"முக்கிய ரயில்வே ஜங்ஷனாகிய டேஜோங் ஜூனை கம்யூனிஸ்டுகள் பிடித்துவிட்டால் அமெரிக்கப் படை வாபஸ் பெற முடியாது."
—கொரியா செய்தி.

அமெரிக்கப் படை இனியும் வாபஸ் பெறக் கூடாது என்பதுதானே பலருடைய கோரிக்கை!

★

"குறைந்த செலவில் பொழுது போக்க வசதி தருவது ஸினிமா தியேட்டர்தான்" என்று கனம் பிரதம நீதிபதி சொன்னாராம்.

நிறையச் செலவில் பொழுது போவதற்கு ஹைகோர்ட் இருக்கவே இருக்கிறது!

இலங்கையில் ஒரு வாரம்

— கல்கி —

3

"தமிழ் மணங் கமழ வேண்டும்" என்று மணிரங்கு ராகத்தில் கீர்த்தனம் பாடுகிறார்களே, — உண்மையில் தமிழுக்கு என்று ஒரு தனி மணம் உண்டா என்று கேட்டால், கட்டாயம் உண்டு என்று நான் தயங்காது சொல்வேன். தமிழ் மணம் என்பது புகையிலைச் சுருட்டைப் புகைக்கும் போது உண்டாகும் மணமாகவே இருக்க வேண்டும். யாழ்ப்பாணத் தமிழர்களோடு பழகநேர்ந்தவர்கள் யாரும் இதை எளிதில் கண்டு கொள்வார்கள்.

யாழ்ப்பாணத்துத் தமிழர்கள் இருக்கிறார்களே, — அவர்களுடைய வாய்கள் சிறிது நேரங்கூடச் சும்மா இருப்பதில்லை. ஒன்று அவை அழகிய தமிழில் கதைத்துக் கொண்டிருக்கும்; அல்லது நறுமணச் சுருட்டைப் புகைத்துக் கொண்டிருக்கும். அவர்கள் பேசும் தமிழில் இனிய புகை மணம் கமழும் என்பதைப் பற்றி என்னளவும் ஐயமில்லை.


இப்படிப்பட்ட யாழ்ப்பாணத் தமிழர்களில் — தமிழர் தலைவர்களில் — பேராசிரியர் அருள்நந்தி ஒருவர். கொழும்பு தமிழ்ச் சங்கம் ஆரம்பித்த நாளிலிருந்து இவர்தான் அச்சங்கத்தின் தலைவர். இவர் முன்னாளில் இலங்கை அரசாங்கக் கல்வி இலாகாவில் உத்தியோகம் பார்த்தார். டிபுடி டைரக்டர் என்ற பதவி வரைக்கும் வந்தார். அதற்கு மேலே நியாயமாக டைரக்டர் பதவிக்கும் இவர் வந்திருக்க வேண்டும். ஆனால் இலங்கை சிங்கள சர்க்காரின் வேற்றுமைக் கொள்கை அதற்குக் குறுக்கே வழி மறைத்து நின்றது. நல்ல வேளையாக, இச் சமயத்தில் இலங்கையைச் சுதந்திரம் தேடிக் கொண்டு வந்தது. காந்தி மகானுடைய தவத்தினால் இந்தியாவுக்கு வந்த சுதந்திரம் இந்தியாவோடு நின்றுவிடவில்லை. கடல் கடந்து இலங்கைக்கும் சென்றது. பர்மாவுக்கும் ஜாவா-சுமாத்ராவுக்கும் கூட அல்லவா அதிர்ஷ்டம் அடித்திருக்கிறது!

இலங்கைக்குச் சுதந்திரம் வந்தபோது சிங்கள மந்திரிகள் அதுவரை அரசாங்க உத்தியோகத்திலிருந்தவர்களுக்குச் சுதந்திரம் அளிக்க முன் வந்தார்கள்! "உபகாரச் சம்பளத்துடன் விலகிக் கொள்ள விரும்புகிறவர்கள் விலகிக் கொள்ளலாம்" என்றார்கள். அச் சமயம் பார்த்து உத்தியோக விலங்கை உடைத்துக் கொண்டு வெளியேறியவர்களில் ஸ்ரீ அருள்நந்தி ஒருவர். தற்சமயம் இலங்கை சர்வகலாசாலையில் தத்துவப் போதகராயிருந்து வருகிறார்.

பேராசிரியர் அருள்நந்தி அவர்களை அறிவுக் களஞ்சியம் என்று கூறுவது மிகையாகாது. கவின மேனாட்டுக் கல்வியில் தலை சிறந்த தேர்ச்சி பெற்றிருப்பதுடன் பழந் தமிழ் நூல்களை நன்கு ஆராய்ந்து கற்றவர். எவ்வளவுக்குப் படித்தவரோ, அவ்வளவுக்கு அடக்கம் வாய்ந்தவர். "நிறைகுடம் தளும்பாது" என்பதற்கு ஸ்ரீ அருள்நந்தி பிரத்யட்ச உதாரணமாவார். இவ்வளவு அடக்கம் வாய்ந்தவராயினும், அவருடைய உள்ளத்தில் பொங்கும் தமிழன்பை வெளியிடச் சந்தர்ப்பம் நேரும்போது அவருடைய அடக்கம் பறந்துவிடுகிறது. கொழும்பு தமிழ்ச் சங்க விழா இரண்டு தினங்கள் நடந்து முடியப் போகும் தறுவாயில் இவர் சில வார்த்தைகள் கூறினார். "இளம் பிராயத்தில் நான் ஒரு கவி பாடினேன். அதைக் கேளுங்கள்!" என்று ஆரம்பித்தார். கவி என்ன என்பது எனக்கு ஞாபகம் இல்லை. அதன் கருத்தை மட்டும் சொல்கிறேன்.

ஸ்ரீ அருள்நந்தி இந்த உலக வாழ்க்கையிலுள்ள துன்பங்களைக் கண்டு கலங்கினாராம். மும்மலங்களுக்கு இடமாகிய இந்தப் பிறவியை எதற்காக அளித்தாய் என்று இறைவனிடம் முறையிட்டாராம். எப்படியாவது இந்த மானிட வாழ்க்கையிலிருந்து தம்மைத் தப்புவித்துக் கரைசேர்க்கும்படி கடவுளிடம் மன்றாடிக் கொண்டிருந்தாராம். அச்சமயத்தில் ஒரு கன்னியைச் சந்திக்க நேர்ந்து அவள் பேரில் மோகம் கொண்டாராம். உடனே அவருடைய மனப்பான்மை அடியோடு மாறிப் போய் விட்டதாம்! "தமிழணங்கே! உன்னுடைய காதலின் இன்பத்தை அனுபவிப்பதற்காக இந்தக் கொடிய மும்மலங்களுக்கு இடமாகிய மனிதப் பிறவியைக்கூட நான் சகித்துக் கொள்ளச் சித்தமாயிருக்கிறேன்!" என்று சொன்னாராம்.

தெய்வத் தமிழ் மொழியின் பேரில் ஸ்ரீ அருள் நந்திக்கு அவ்வளவு மோகம். கொழும்பு தமிழ்ச் சங்கத்தின் காரியதரிசி



கொழும்பு தமிழ்ச் சங்கத் தலைவர்
பேராசிரியர் ஸ்ரீ கே. எஸ். அருள்நந்தி

வித்வான் கனகசுந்தரம் அவர்களுக்கோ தமிழில் மோகம் என்பது மட்டுமல்ல; அதன் காரணமாகப் பலர் மீது கோபம். தமிழைக் குறைத்துச் சொல்கிறவர்களின் மீது கோபம். தமிழ்ச் சங்க விழாவுக்கு முட்டுக்கட்டை போட்டதாக அவருக்குத் தோன்றியவர்கள் மீது கோபம். எதிர் பார்த்த அளவு அவருடன் ஒத்துழைத்துத் தமிழ்ப் பணிசெய்யாதவர்கள்மீது கோபம். இவை எல்லாவற்றையும் விட, இலங்கைக்குத் தமிழர்கள் புதிதாக வந்தவர்கள் என்று சொல்கிறார்களே, அவர்கள் மீது அவருக்கு மெத்தக் கோபம்.

"தமிழர்களா புதிதாக இலங்கைக்கு வந்து குடியேறியவர்கள்? ஒரு நாளும் இல்லை. சிங்களவர்கள்தான் அஸ்ஸாமிலிருந்தோ, வங்காளத்திலிருந்தோ, கலிங்கத்திலிருந்தோ வந்து இலங்கையில் குடியேறினார்கள். இப்போது வந்திருக்கும் பூகம்பத்தைப் போல் அந்த நாளிலும் ஒரு பூகம்பம் வந்திருக்கும்; அதற்குப் பயந்து ஓடி வந்தார்கள். தமிழர்களாகிய நாங்கள்தான் இலங்கையின் ஆதி குடிகள். அப்படி நாங்கள் வெளியிலிருந்து வந்திருக்கும் பட்சத்தில் வடக்கிலிருந்து வந்தவர்கள் அல்ல. இலங்கைக்குத் தெற்கே லமூரியா கண்டம் கடலில் மூழ்கியபோது அங்கிருந்து கிளம்பி வந்தோம். சிலர் இலங்கையில் தங்கினோம். சிலர் தமிழகத்துக்குப் போனோம். எப்படியும் முதலில் இலங்கைக்கு வந்தவர்கள் நாங்கள்தான்!" என்று வித்வான் கனகசுந்தரம் சக்கைப் போடு போட்டார். அவரை யார் மறுத்துச் சொல்ல முடியும்? முடியவே முடியாது. லமூரியா கண்டம் இலங்கைக்குத் தெற்கே இந்துமகா சமுத்திரத்தில் இருந்திருக்க வேண்டும் என்பதில் சிறிதும் சந்தேகமில்லை. ஏனெனில் லமூரியா கண்டம் இருந்திரா விட்டால் அது எப்படி முழுகியிருக்க முடியும்? முடியாது தானே! எப்போது லமூரியா கண்டம் கடலில் மூழ்கிற்று என்று ஏற்பட்டதோ, அதற்கு முன்னால் வெளியே அது இருந்திருக்கத்தானே வேண்டும்!

ஆவேசமும் ஆத்திரமும் உள்ளவர்கள் தான் எந்தக் காரியத்தையும் சாதிக்க முடியும். வித்வான் கனகசுந்தரம் அவர்களிடம் இந்தப் பண்புகள் இருக்கின்றன. அதோடு நிர்வாகத் திறமையும் இருக்கிறது. தமிழ்ச் சங்க ஆண்டு விழாவை அவர் இவ்வளவு சிறப்பாக நடத்தியதே அவருடைய திறமைக்குச் சான்றாகும். தமிழ்த்தாயை இலங்கையிலிருந்து ஓட்டி விடலாம் என்று யாராவது கனவு கண்டிருந்தால் அது இனி ஒருகாலும் பலிக்கப் போவதில்லை. ஏனெனில் தமிழ்த் தாய்க்குக் கொழும்பு நகரில் ஒரு நிலையான வாசஸ்தலம் ஏற்படுத்துவதற்கு வித்வான் கனகசுந்தரம் ஏற்பாடு தொடங்கி விட்டார். கடன் வாங்கி நிலம் வாங்கியாகி விட்டது. நிலத்துக்காக வாங்கிய கடனை அடைத்து விட்டுப் பிறகு தமிழ்த் தாய் வசிக்க அந்த நிலத்தில் ஓர் இல்லம் அமைக்க வேண்டும். கொழும்புத் தமிழ்ச் சங்கத்துக்கு ஒரு சொந்தக் கட்டிடம் மட்டும் ஏற்பட்டு விடட்டும்; அப்புறம் "தமிழை இலங்கையிலிருந்து விரட்டுவேன்" என்று எவன் துணிந்து சொல்ல முன் வருவான்? பார்க்கலாம் ஒரு கை!

காரியதரிசி கனகசுந்தரம் அவர்களின் மனோரதம் நிறைவேறுவது அப்படியொன்றும் பிரமாதமான காரியமன்று. விரைவிலேயே அது நிறைவேறிவிடும் என்று நம்புகிறேன். தமிழ்ச் சங்க விழாவில் கூடியிருந்த ஆயிரக்கணக்கான தமிழர்களின் மலர்ந்த முகங்கள் எனக்கு அந்த நம்பிக்கையை அளித்தன. வித்வான் கனகசுந்தரம் இனிய தமிழ் பண்புக்குரிய முறையில் அவர்களுடைய ஒத்துழைப்பைக் கோரிப் பெற்றுத் தமிழ்ச்சங்கக் கட்டிடத்தை நிறுவுவார் என்று நம்புகிறேன்.

தமிழ்ச் சங்க விழாவில் கூடியிருந்தவர்களைப் பற்றிச் சில வார்த்தைகள்

இங்கே கூறியே தீர வேண்டும். தமிழகத்தில் சென்ற ஏழெட்டு ஆண்டுகளாகப் பல தமிழ் விழாக்கள், கவிஞர் விழாக்கள், நடந்திருக்கின்றன. "அந்த விழாக்களில் பலவற்றுக்கும் நான் சென்றிருக்கிறேன். ஆனால் இந்தச் சபையைப் போலப் பார்த்ததில்லை" என்று கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் சொன்னேன். அதையேதான் இங்கேயும் சொல்கிறேன். அங்கே ஒன்றும் இங்கே வேறொன்றும் சொல்லும் வழக்கம் என்னிடம் கிடையாது. தமிழ் நாட்டில் நடக்கும் தமிழ் விழாக்களில் வெள்ளை வெளேரென்ற ஆடை அணிந்து மலர்ந்த முகங்களுடன் சொற்பொழிவுகளை ரஸித்து அநுபவித்துக் கொண்டிருப்போர் கூட்டத்தைச் சபையில் ஒரு பகுதியில் பார்க்கலாம். அவர்கள் செட்டி நாட்டிலிருந்து வந்த தமிழன்பர்களாயிருப்பார்கள். ஸ்ரீ சா. கணேசன் அவர்களுடைய சட்டையணியாத கரிய திருமேனி மற்றவர்களின் ஆடை வெளுப்பை நன்கு எடுத்துக் காட்டும். கொழும்பில் தமிழ்ச் சங்க விழாவில் கூடியிருந்த கூட்டம் முழுதுமே அப்படியிருந்தது. எல்லாரும் தூய வெள்ளை உடை தரித்தவர்கள். (பெரும்பாலோர் அடையாறு பாணியில் சட்டை அங்கவஸ்திரம் அணிந்தவர்கள்.) அவ்வளவு பேரும் மலர்ந்த முகத்தினர். சொற்பொழிவாளர் கூறும் ஒவ்வொரு வார்த்தையையும் கவனித்து உணர்ந்து அநுபவித்து ஆனந்தப் படுகிறவர்கள். ஒவ்வொரு சமயம் எனக்குத் தோன்றியது. மேடையில் ஏறிச் சொற்பொழிவு ஆற்றுகிறவர்களைக் காட்டிலும் சபையில் அமர்ந்திருப்பவர்கள் அதிகம் படித்து அறிந்தவர்கள் என்று. தமிழனுக்குரிய உயர்ந்த பண்பாட்டின் காரணமாகவும் தமிழன்பு காரணமாகவுமே அவர்கள் அவ்வளவு உற்சாகத்துடன் சொற்பொழிவுகளை ரஸித்து மகிழ்கிறார்கள் என்றும் கருதினேன்.


ஆண் மக்கள் மட்டும் அல்ல; பெண்மணிகள் பகுதியிலும் அப்படியேதான். யாழ்ப்பாணத் தமிழர் குடும்பங்களில் படித்த பெண்மணிகள் அதிகம். இலங்கையின் முன்னேற்றத்துக்குப் பல துறையிலும் காரணபுருஷரான ஸர் பொன்னம்பலம் ராமநாதன் அவர்கள் யாழ்ப்பாணத்தில் பெண்கள் கலாசாலையொன்று நிறுவினார். அதில் படித்த பெண்மணிகள் பலர் இப்போது கொழும்பில் பெரிய குடும்பங்களில் எஜமானிகளாயிருக்கிறார்கள். அவர்கள் "சைவ மங்கையர் கழகம்" என்னும் ஸ்தாபனத்தை நிறுவி நன்கு நடத்தி வருகிறார்கள். அவர்களுடைய கழக மண்டபத்திலேதான் தமிழ்ச் சங்க விழா நடந்தது. இதிலிருந்து தமிழ் விழாவுக்கு வந்திருந்த பெண்மணிகள் எந்தத் தரத்தைச் சேர்ந்தவர்களாயிருப்பார்கள் என்று ஊகித்துக் கொள்ளலாம்.



தமிழரசுக் கட்சித் தலைவர்
ஸ்ரீ எஸ்.ஜே.வி. செல்வநாயகம் கே.ஸி., எம்.பி.

மண்டபத்தில் பாதி இடத்தைத் தாய்மார்களே அடைத்துக் கொண்டார்கள். சில தாய்மார்கள் குழந்தைகளையும் அழைத்துக் கொண்டு வந்திருந்தார்கள். ஆனால் அவர்கள் பகுதியிலிருந்து ஏதேனும் பேச்சுச் சத்தம் அல்லது 'குவா குவா' சத்தம் வரவேண்டுமே? அவ்வப்போது சொற்பொழிவை ரஸித்துச் சிரிக்கும் சத்தத்தைத் தவிர வேறு சத்தமே கிடையாது. சுருங்கச் சொன்னால், அங்கே வந்திருந்த தாய்மார்கள் தங்கள் மகவுகளைக்கூட மறந்திருந்தார்கள். குழந்தைகள் அழுகையை மறந்திருந்தன. ஆண் பிள்ளைகளோ சுருட்டுப் புகைத்தலைக்கூட மறந்து தமிழின்பத்தில் லயித்திருந்தார்கள். சபையிலிருந்தவர் யாருமே சுருட்டுப் புகைக்கவில்லை! ஸ்ரீ அருள்நந்திகூடத்தான்! இந்த விந்தையை என்னவென்று சொல்வது? அவர்களுடைய தமிழன்பை என்ன சொல்லிப் பாராட்டுவது? இயலாத காரியம்.

இத்தகைய அருமையான தமிழன்பர்கள் ஆயிரக்கணக்காக உள்ள நகரத்தில் தமிழ்த் தாய்க்கு ஒரு சிறிய கட்டிடம் கட்டுவதுதானா பெரிய காரியம்? நல்ல முறையில் முயற்சி தொடங்கினால், இலங்கையில் வாழும் பதினைந்து லட்சம் தமிழர்



"சுதந்திரன்" ஆசிரியர் ஸ்ரீ எஸ். டி. சிவநாயகம்

களும் அந்தத் திருப்பணிக்கு உதவி செய்வார்கள் என்பது நிச்சயம்.

•   •   •

"அங்கே ஒன்றும் இங்கே ஒன்றும் சொல்லும் வழக்கமில்லை என்றீரே? சென்ற இதழில் 'ஏழரை லட்சம்' 'தமிழரைப் பற்றிச் சொல்லியிருந்தீர்? இந்த இதழில் 'பதினைந்து லட்சம்' தமிழர் என்கிறீரே! ஏழு நாளைக்குள் ஏழரை லட்சம் தமிழர்கள் அதிகமானது எப்படி?" என்று நேயர்கள் சிலர் கேட்கக் கூடும்.

என் அன்பார்ந்த நேயர்களே! கட்டாயம் நீங்கள் அந்தக் கேள்வியைக் கேட்க வேண்டியதுதான். நான் பதில் சொல்லக் கடமைப் பட்டவன். சென்ற இதழில் நான் கூறியதும் உண்மை; இந்த இதழில் நான் மேலே கூறியிருப்பதும் உண்மை. சென்ற இதழில் குறிப்பிட்ட ஏழரை லட்சம் தமிழர்கள் கடந்த நூறு ஆண்டுக்குள் தோட்டத் தொழிலாளிகளாகவும் வீட்டு வேலைக்காரர்களாகவும் சில்லறை வர்த்தகர்களாகவும் சென்று இலங்கையில் குடியேறியவர்கள். இந்த ஏழரை லட்சம் தமிழர்களின் பிரஜா உரிமைகளைப் பறித்து அவர்களை விரட்டியடித்துவிடத்தான் கருணை மிகுந்த சிங்கள மந்திரிகள் முயன்று வருகிறார்கள்.


இலங்கையில் வசிக்கும் இன்னொரு ஏழரை இலட்சம் தமிழர்களோ பழைய புராதன பூர்வீக இலங்கைக் குடிகள். அவர்கள் இலங்கையில் எப்போது வந்து குடியேறினார்கள் என்பதை வரையறைத்துக் கூற இயலவில்லை. குறைந்தபட்சம் இரண்டாயிர வருஷங்களாக இந்தப் பழந் தமிழர்கள் இலங்கைக் கடற்கரையோரப் பகுதிகளில் வசித்து வருகிறார்கள். தமிழ் நாட்டுக்கும் இவர்களுக்கும் சரித்திர பூர்வமாகத் தொடர்பு நெடுகிலும் இருந்து வந்திருக்கிறது. சமீப காலத்தில் தமிழ் வளர்ச்சிக்குப் பேருதவி புரிந்த பெரியார்களான ஸ்ரீ ஆறுமுக நாவலரும் சுவாமி விபுலானந்தரும் இலங்கையின் பூர்வீகத் தமிழ்ப் பரம்பரையைச் சேர்ந்தவர்களே.

தவிர, இலங்கை பல துறைகளிலும் புத்துயிர் பெறுவதற்குக் காரண புருஷராயிருந்த ஸர் பொன்னம்பலம் ராமநாதன் ஈழ நாட்டுப் பழம்பெருங் குடியைச் சேர்ந்தவர். ஒரு காலத்தில் இலங்கையில் ஸர் பி. ராமநாதனுக்கு இணையில்லாத செல்வாக்கு இருந்தது. பழைய யதேச்சாதிகார பிரிட்டிஷ் ஆட்சி நடந்து கொண்டிருந்த காலத்திலும் அவருக்கு இணையில்லாத மதிப்பு இருந்தது. சர்க்காரும் மதித்தனர்; மக்களும் மதித்தனர். சிங்கள மக்களோ அவருக்கு என்றென்றும் தீர்க்க முடியாத நன்றிக் கடன் பட்டவர்கள்.

முதலாவது மகாயுத்தம் நடந்துகொண்டிருந்த காலத்தில், 1917-18ல், இலங்கையில் ஒரு பெரிய கிளர்ச்சி நடைபெற்றது. இன்றையதினம் இலங்கையின் சர்வ சக்தி வாய்ந்த பிரதமராயிருக்கும் ஸ்ரீ சேனநாயகா அப்போது சாதாரண பிரஜையாக இருந்தார். அவரும் அவருடைய சகாக்கள் சிலரும் மதுவிலக்கு இயக்கத்தில் ஈடுபட்டிருந்தார்கள். இந்த இயக்கத்தின் காரணமாகச் சிங்களவரிடையே புத்துணர்ச்சி ஏற்பட்டது. அது எப்படியோ சிங்களவருக்கும் முஸ்லிம்களுக்கும் அடிதடி கலகமாக முடிந்தது. இன்னும் பெரிய வேடிக்கை என்னவென்றால், மேற்படி சமூக கலவரத்தை அப்போதிருந்த பிரிட்டிஷ் கவர்னர் பிரிட்டிஷ் ஆட்சியைக் கவிழ்ப்பதற்கு எழுந்த பெரும் புரட்சியாக எண்ணி விட்டார். உடனே ஸ்ரீ சேனநாயகா, பேரன் ஜயதிலகா முதலிய பல முக்கியமான சிங்களத் தலைவர்களைப் பிடித்துச் சிறையில் அடைத்தார். சிங்கள மக்கள் பீதி யடைந்து செய்வதறியாது திகைத்திருந்தனர். அச்சமயம் ஸர் பொன்னம்பலம் ராமநாதன் "நான் இருக்கிறேன். அஞ்ச வேண்டாம்!" என்று அபயப் பிரதானம் அளித்தார். "இங்குள்ள அதிகாரிகளிடம் முறையிட்டுப் பயனில்லை. இங்கிலாந்து சென்று உண்மையை எடுத்துக்கூறி நியாயம் பெற்று வருகிறேன்!"

என்று பிரயாணமானார். எம்டன் கப்பல் குண்டு போட்ட காலத்தில், கடற் பிரயாணம் மிக அபாயம் நிறைந்ததாயிருந்த காலத்தில், இங்கிலாந்துக்குக் கப்பலில் பிரயாணமானார். பிரயாணத்தின் போதே இலங்கையின் நிலைமையை விளக்கியும், சிங்களத் தலைவர்களுக்கு இழைத்த அநீதியை எடுத்துக் காட்டியும் ஒரு புத்தகம் எழுதினார். இங்கிலாந்து சேர்ந்ததும் அதை அச்சிட்டுப் பார்லிமெண்டு அங்கத்தினருக்கும் மந்திரிகளுக்கும் கொடுத்தார். பிரதமர் லாயிட் ஜார்ஜையும் மற்ற மந்திரிகளையும் பேட்டி கண்டு பேசினார். அந்த அபாயகரமான யுத்த சமயத்தில் அவர்களுடைய கவனத்தைக் கவர்ந்து கருத்தையும் மாற்றினார். அதன் பலனாகச் சிங்களத் தலைவர்கள் விடுதலை செய்யப்பட்டார்கள். அது மட்டும் அல்ல: மேற்கூறிய அநீதிக்குக் காரண புருஷரான பிரிட்டிஷ் கவர்னர் திருப்பி அழைக்கப் பட்டார். இம்மாதிரி கவர்னரைத் திருப்பி அழைத்தது என்பது அதற்கு முன் எப்போதும் நடந்ததில்லை. அதற்குப் பிறகு, இந்தியாவில் வைஸ்ராய் வேவல் திருப்பி அழைக்கப்பட்ட ஒரு சம்பவம்தான் நிகழ்ந்திருக்கிறது.

ஸர் பி. ராமநாதன் இலங்கை திரும்பி வருவதற்குள் மேற்கூறியவை நடந்து விட்டன. எனவே, ஸர் பி. ராமநாதன் கொழும்பில் வந்து இறங்கியபோது அவருக்குச் சிங்களவர்கள் அளித்த வரவேற்பைப் போல் அதற்கு முன்னும் இலங்கை பார்த்ததில்லை; அதற்குப் பிறகும் பார்த்ததில்லை. குதிரைகள் பூட்டிய ரதத்தில் அவரை வைத்துக் கொழும்பு வீதிகளில் ஊர்வலம்விட்டார்கள். ஆயிரமாயிரம் மக்கள் வீதிகளில் இருபுறமும் நின்று ஜய கோஷம் செய்தார்கள். ரதம் ஒரு முக்கியமான நாற் சந்திக்கு வந்ததும் குதிரைகளை ரதத்திலிருந்து அவிழ்த்து விட்டு விட்டுச் சிங்களத் தலைவர்கள் தாங்களே ரதத்தை இழுத்தார்கள். ஸர் ராமநாதனிடம் தங்களுடைய அன்பையும் மரியாதையையும் நன்றியையும் காட்டுவதற்காகத்தான்.



"வீரகேசரி" ஆசிரியர் ஸ்ரீ கே. பி. ஹரன்

இதெல்லாம் பழங் கதைதான். 'கதையா? கனவா?' என்றுகூடச் சந்தேகம் தோன்றும் வண்ணம் தற்சமயம் இலங்கையில் காரியங்கள் நடந்து வருகின்றன. சிங்கள மந்திரிகளின் மனப்போக்கு அவ்வளவு தூரம் மாறி யிருக்கிறது. புதிதாக வந்த இந்தியர்களின் பிரஜா உரிமைகளைப் பறிக்கப் பார்ப்பது போல், யாழ்ப்பாணத் தமிழர்களின் பிரஜா உரிமைகளைச் சிங்கள மந்திரிகள் பறிக்க முடியாது. அவர்களை இலங்கையை விட்டுத் துரத்தி விடலாம் என்று கனவு காணவும் முடியாது.

ஆயினும் ஏழரை லட்சம் யாழ்ப்பாணத் தமிழர்களின் மனதில் இன்று அமைதி இல்லை; நாளை என்ன நேரிடுமோ என்ற கவலை குடிகொண்டிருக்கிறது. இன்று ஏழரை லட்சம் புதிய இந்தியர்களைத் துரத்தப் பார்க்கிறவர்கள் நாளைக்கு ஏழரை லட்சம் பழைய தமிழர்களை எப்படி நடத்துவார்கள் என்று யாருக்குத் தெரியும்? இலங்கையின் மொத்த ஜனத்தொகை 67 லட்சம். பழைய தமிழரும் புதிய தமிழரும் சேர்ந்தால் பதினைந்து லட்சம். இந்தப் பதினைந்து லட்சத்தில் ஏழரை லட்சம் பேரை உரிமை அற்றவர்களாக்கிவிட்டால் மிச்சமுள்ள ஏழரை லட்சம் தமிழர்கள் மிகச் சிறுபான்மையாகி விடுவார்கள் அல்லவா?

யாழ்ப்பாணப் பழந் தமிழர்களில் பெரும் பணக்காரர்களோ, தோட்ட முதலாளிகளோ அதிகம் பேரில்லை. பெரும்பாலும் நடுத்தர வகுப்பினர். படிப்பு, சர்க்கார் உத்தியோகம், வக்கீல் வேலை, உபாத்தியாயர் வேலை முதலியவற்றில் ஈடுபட்டிருப்பவர்கள். வருங் காலத்தில் இவர்களுடைய நிலைமை என்ன ஆகும்? எனவே, பழந் தமிழர்களில் தீர்க்க திருஷ்டி உள்ளவர்கள் எல்லாரும் புதுத் தமிழர்கள் நடத்தும் பிரஜா உரிமைப் போராட்டம் வெற்றி பெற வேண்டும் என்று மனமார விரும்புகிறார்கள்.

யாழ்ப்பாணத் தமிழர்களுடைய தமிழன்பைக் குறித்து முன்னம் மகிழ்ச்சியுடன் கூறினேன். இனியும் அதைப் பற்றிச் சொல்ல வேண்டியதாயிருக்கும். ஆனால் அவர்களுடைய அரசியலைப் பற்றி அவ்வளவு மகிழ்ச்சியுடன் சொல்வதற்கில்லை. அதைப்

பற்றிச் சோகரசம் கலவாமல் சொல்லவோ எழுதவோ இயலாதுதான்.

எனக்குத் தெரிந்தவரையில் இலங்கைத் தமிழர்களிடையில் நாலு அரசியல் கட்சிகள் இருக்கின்றன. ஒன்று, பழைய விதானக் கட்சி; இரண்டு, தமிழ்க் காங்கிரஸ் கட்சி என்னும் புதிய ஒத்துழைப்புக் கட்சி; மூன்றாவது, தமிழரசுக் கட்சி அல்லது சமஷ்டிக் கட்சி; நாலாவது, சுதந்திர காந்தியக் கட்சி.

பழைய விதானக் கட்சியைச் சேர்ந்தவர்கள், ஸர் பி. ராமநாதனுடைய மாப்பிள்ளை ஸ்ரீ எஸ். நடேசன், ஸர் அருணாசலத்தின் குமாரர் ஸர் ஏ. மகாதேவா முதலியவர்கள். இவர்கள் தமிழர்களுடைய உரிமைகளுக்காகப் போராடுவதில் பின்வாங்கியவர்கள் அல்ல. சிங்கள மந்திரிகளுக்கு இவர்களிடம் மரியாதை உண்டு. அவசியமானபோது ஒத்துழைத்தும் அவசியமானபோது போராடியும் வந்தார்கள்.

இவர்களுக்குப் போட்டியாகத் தமிழ்க் காங்கிரஸ் கட்சி ஏற்பட்டது. இதன் தலைவர் ஸ்ரீ பொன்னம்பலம் என்பவர். பத்து வருஷத்துக்கு முன்னால் நான் இலங்கை சென்றிருந்தபோது இவரை 'இலங்கையின் எரிமலை' என்று பலரும் சொன்னார்கள். தீப்பொறி பறக்கும்படி சிங்கள மந்திரிகளைத் தாக்கியும் தமிழர் உரிமைகளைத் தாங்கியும் பேசுவார். இவர் போகுமிடங்களுக்கெல்லாம் நெருப்பணைக்கப் பின்னோடு ஒரு 'பயர் என்ஜின்' போகும் என்று வேடிக்கையாகச் சொல்வார்கள்.

இத்தகைய வீராவேசத்துடன் ஸ்ரீ பொன்னம்பலம் கட்சியார் சென்ற தேர்தலில் போட்டியிட்டுப் பழைய பிரமுகர்களைத் தோற்கடித்தார்கள். சில நாள் வரையில் இலங்கைப் பார்லிமெண்டில் போராடியும் வந்தார்கள். பிறகு ஒரு நாள் ஸ்ரீ பொன்னம்பலம் ஸ்ரீ சேனநாயகாவின் மந்திரி சபையில் மந்திரியாகி விட்டார்! மந்திரி வேலை நன்றாகவே பார்த்து வருகிறார். பேச்சும் முன்னைவிடத் தீவிரமாகவே பேசி வருகிறார். — எனினும், இது அவருடன் சேர்ந்திருந்தவர்களிலேயே சிலருக்குப் பிடிக்கவில்லை.

அப்படிப் பிடிக்காமல் தமிழ்க் காங்கிரஸ் கட்சியை விட்டு வெளியேறிச் சிலர் 'தமிழரசுக் கட்சி' என்ற புதிய கட்சியை அமைத்திருக்கின்றனர். இந்தக் கட்சியின் தலைவர் ஸ்ரீ செல்வநாயகம். தமது கட்சியைப் பிரசாரம் செய்வதற்காகச் "சுதந்திரன்" என்னும் தினப் பத்திரிகையை இவர் ஆரம்பித்து நடத்தி வருகிறார். அதில் பொருள் நஷ்டமும் அடைந்து வருகிறார் என்று கேள்விப்பட்டேன்.

"சுதந்திரன்" ஆசிரியரும், மற்றும் அங்குள்ள உதவி ஆசிரியர் சிலரும் என் நண்பர்கள். எனவே, அவர்களைச் சந்திக்கச் "சுதந்திரன்" காரியாலயத்துக்குப் போனேன். அங்கே ஸ்ரீ செல்வநாயகம் இருந்தார். அப்போதுதான் என்னுடைய பெருமை எனக்குத் தெரிந்தது! குறைந்த பட்சம் பதினாயிரம் பேருக்குச் சமம் நான் என்று அறிந்து கொண்டேன். ஏனெனில், பதினாயிரம் பேர் அடங்கிய கூட்டத்தில் பிரசங்கம் செய்வதுபோல் ஸ்ரீ செல்வநாயகம் அவர் தமது கட்சியை எனக்குச் சொற்பொழிவாகவே ஆற்றினார்!


இது ஒரு பழைய சம்பவத்தை எனக்கு ஞாபகப் படுத்திற்று. இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் மாதம் மும்மாரி பொழிந்து தேசம் சுபிட்சமாயிருந்த காலத்தில் மகாத்மா சுயராஜ்ய இயக்கத்தை ஆரம்பித்தார். சுயராஜ்ய மந்திரத்தைக் கிராமம் கிராமமாகப் போய்ச் சொல்ல வேண்டுமென்று தொண்டர்களுக்குக் கட்டளையிட்டார். நானும் சில கிராமங்களுக்குப் போனேன். ஒரு கிராமத்தில் தம்பட்டம் அடித்து, கிராமச் சாவடிக்கு முன்னால் மாபெரும் கூட்டம் நடைபெறும் என்று அறிவித்த பிறகு, குறிப்பிட்ட நேரத்தில், கையில் ஒரு ஹரிகேன் லாந்தருடன் சாவடிக்குப் போய்ச் சேர்ந்தேன். அங்கே ஒரே ஒரு மனிதர்தான் ஆஜராயிருந்தார். அந்த ஒருவராவது வந்திருக்கிறாரே என்ற நன்றி உணர்ச்சியுடன் பிரிட்டிஷ் சர்க்கார் இந்தியாவில் செய்து வரும் அட்டூழியங்களைப் பற்றி, சாங்கோபாங்கமாகக் கேட்பவரின் இரத்தம் கொதிக்கும்படியாக, ஒன்றேகால் மணி நேரம் பிரசங்கம் செய்தேன். நானே வந்தனோபசாரமும் சொல்லிக் கொண்ட பிறகு சபையோராகிய அந்தத் தனி நபரைப் பார்த்து, "ஐயா! தங்கள் தேசபக்தி என்னைப் பரவசப்படுத்துகிறது. தாங்கள் யாரோ! எந்த ஊரோ?" என்றேன்.

அதற்கு அந்தப் புண்ணியவான், "என்னைத் தெரியவில்லையா, ஸாமி! நான் உம்மைத் தொடர்ந்து கோபிசெட்டிபாளையத்திலிருந்து கரூர் வரையில் வந்திருக்கிறேனே? நான் சி. ஐ. டி. க்காரன்! உங்களைக் கண்காணிப்பதற்காக என்னைப் போட்டிருக்கிறார்கள்!" என்றான்.

நல்லவேளையாக நான் சி. ஐ. டி. க்காரன் அல்ல. மற்றப்படி ஸ்ரீ செல்வநாயகம் என்னை ஒரு பெரிய பொதுக் கூட்டமாக நினைத்து சக்கைப்போடு போட்டுவிட்டார்.

ஒரு இலட்சியத்தில் ஆவேசம் உள்ளவர்கள்தான் இப்படியெல்லாம் செய்யக் கூடும். ஸ்ரீ செல்வநாயகத்துக்கு ஆவேசம் இருக்கிறது. அத்துடன் வாதத்திறமையும் அபாரமாயிருக்கிறது. இலங்கையில் தமிழர்கள் வசிக்குமிடங்கள் ஒரு தனி

அரசு ஆக்கப்பட வேண்டும் என்று அவர் சொல்கிறார். தனி அரசு என்றால் பாகிஸ்தானைப் போன்ற தனி அரசு அல்ல. உள்நாட்டுக் காரியங்களில் சர்வாதிகாரம் உள்ள தனி அரசும், வெளிநாட்டு அரசியல், போக்குவரவு, சைன்யம் முதலியவற்றுக்கு இலங்கையுடன் இணைப்பும் இவர்கள் கோருகிறார்கள். இதைச் சமஷ்டி அரசியல் என்றும் ஸ்ரீ செல்வநாயகம் கோஷ்டியார் சொல்கிறார்கள்.



தமிழரசுக் கோரிக்கைக்கு எவ்வளவு நியாயம் இருக்கிறது என்பதை நிரூபிக்கும் பொருட்டு இலங்கையில் தமிழர்கள் மிகப் பெரும்பாலாராய் வசிக்கும் இடங்களையெல்லாம் குறிப்பிட்டு ஸ்ரீ செல்வநாயகம் ஒரு படம் தயாரித்திருக்கிறார். அதை இங்கே காணலாம். கடற்கரை யோரமாகக் கோடு போட்டுக் குறிப்பிட்ட இடங்கள் எல்லாம் தமிழர் வாழும் பிரதேசங்கள். இலங்கையின் நடுமத்தியில் குறிப்பிட்ட பிரதேசம் புதிதாக வந்த தமிழ்த் தொழிலாளிகள் வசிக்கும் தோட்டப் பிரதேசங்கள். ஸ்ரீ செல்வநாயகம் திட்டத்தின்படி இலங்கை விஸ்தீரணத்தில் மூன்றில் ஒரு பகுதி தமிழரசாக மாற வேண்டும். இந்தக் கட்சிக்கு இலங்கையில் எவ்வளவு ஆதரவு இருக்கிறது என்பதைக் கவனிக்க எனக்கு அவகாசம் இல்லை. ஸ்ரீ செல்வநாயகத்தின் அந்தரங்க சுத்தியான ஆர்வத்தைக் காண மட்டுமே முடிந்தது.

"சுதந்திரன்" ஆசிரியர் ஸ்ரீ சிவநாயகம் நல்ல மறுமலர்ச்சி எழுத்தாளர். அத்துடன் சிறந்த பேச்சாளர். தமிழ்ச்சங்க விழாவில் இவர் நன்கு ஒத்துழைத்து ஓர் அரிய சொற்பொழிவும் ஆற்றினார்.

ஒரு பத்திரிகையைப் பற்றிச் சொன்ன பிறகு கொழும்பில் நடந்து வரும் இன்னும் இரு தினப் பத்திரிகைகளைப் பற்றியும் சொல்லிவிட வேண்டியது தான்.

இலங்கையில் இன்று மிகப் பிரபலமாக விளங்கும் தினத் தமிழ்ப் பத்திரிகை "வீரகேசரி." முப்பதினாயிரம் பிரதிகளுக்குமேல் இந்தப் பத்திரிகை விநியோகமாகி வருகிறது. பலவிதக் கஷ்டங்களுக்கு உள்ளாகிவரும் இந்தியர்களின் கட்சியை எடுத்துச் சொல்லி "வீரகேசரி" தீவிரமாகப் போராடி வருகிறது. யாழ்ப்பாணத் தமிழர்களின் நலன்களையும் பாதுகாக்க முயன்று வருகிறது. ஆகவே இலங்கையிலுள்ள எல்லாத் தமிழர்களின் அபிமானத்தையும் பெற்றிருக்கிறது. இவ்வளவுடன், எந்தக் கட்சியையும் நேர்மையுடன் எடுத்துச் சொல்லிப் போராடுவதினால் இலங்கை சர்க்காரும்—சிங்கள மந்திரிகளும் கூட "வீரகேசரி"யை மதித்து நடந்து கொள்ளுகின்றனர். "வீரகேசரி" ஆசிரியர் ஸ்ரீ கே. பி. ஹரன் பரம சாத்வீ

கரான மனிதர். உயர்ந்த இலட்சியங்கள் படைத்தவர். சிறந்த ஆஸ்திகர்; பக்திமான். பத்திரிகைத் தொழிலுக்கு அடுத்தபடியாக ஆஸ்திக முயற்சிகளில் அவருக்குச் சிரத்தை. கொழும்பு நகரில் ஸ்ரீ சுந்தரம் பிள்ளை, ஸ்ரீ கதிர்வேலு செட்டியார் போன்றவர்கள் செய்யும் கோயில் திருப்பணிகள் — கூட்டுப் பிரார்த்தனைகள் ஆகியவற்றில் கலந்துகொண்டு ஊக்கத்துடன் உதவி செய்து வருகிறார்.

"வீரகேசரி"யின் செய்திப் பகுதி ஆசிரியர் ஸ்ரீ கே. வி. எஸ். வாஸ் அஸகாய சூரர். அறுபதுடன் ருஷிய டாங்கி ஒன்றிடம் உள்ள வேகமும் ஆற்றலும் வாய்ந்தவர். இலங்கையில் அவருக்குத் தெரியாத பிரமுகர் அநேகமாக யாரும் இருக்க முடியாது. ஆனால் பெரும்பாலோருடைய முகம் அவருக்குத் தெரியாது. குரல் மட்டும் தெரியும். ஸ்ரீ கே. வி. எஸ். வாஸ் டெலிபோனில் கூப்பிடுகிறார் என்றால், எப்பேர்ப்பட்ட பிரமுகரும்

விலை ஏறுது!



பத்திரிகை படிப்பவர்:— ஸார்! ஆந்திர நாட்டிலிருந்து ஒரு சிலர் தான் நாஸிக் காங்கிரஸ்"க்குப் போகப் போகிறார்களாம்!

மற்றவர்:—இதைக் குறித்து நாஸிக் நகர மக்கள் சந்தோஷப் படவேண்டியதுதான்!

பத்திரிகை படிப்பவர் (ஆச்சரியத்துடன்):—ஏன்?

மற்றவர்:—நாஸிக்கில் மிளகாய் விலை மேலும் ஏறுதல்லவா?

மற்றக் காரியங்களை நிறுத்தி வைத்து விட்டு டெலிபோனிடம் செல்வார்கள்.

தமிழ்ச் சங்க விழா உண்மையில் "வீரகேசரி"யின் விழா என்று சொல்லும்படியாக விழாவின் நடவடிக்கைகளை அந்தப் பத்திரிகையில் பிரசுரித்திருந்தார்கள். ஸ்ரீ கே.வி எஸ். வாஸ் ஒவ்வொரு கூட்டத்திலும் ஆஜராயிருந்தார். அவருக்குத் தமிழ்ச் சுருக்கெழுத்துத் தெரியாது. ஆனால் அவ்வளவு பிரசங்கங்களையும் எப்படித்தான் வார்த்தைக்கு வார்த்தை சரியாயிருக்கும்படி பத்திரிகையில் பிரசுரித்தார் என்பது மிக்க வியப்பளித்தது.


ஸ்ரீ கே. வி. எஸ். வாஸ், "வீரகேசரி"யின் செய்தி ஆசிரியர் என்பதைத் தவிர இந்தியாவிலும் மலேயாவிலும் உள்ள பல பத்திரிகைகளுக்கு இலங்கை நிருபராயிருந்து வருகிறார். "வீரகேசரி" வேலைகளுக்குக் குந்தகம் நேராமல் மற்ற வேலைகளைப் பார்க்கிறார்.

ஒரு பொதுக் கூட்டத்தில் மாலை ஒன்பது மணி வரையில் ஆஜராயிருந்துவிட்டு, வீடு சென்று "வீரகேசரி"க்கு விவரமாக எழுதிக் கொடுத்து விட்டு, பிறகு பம்பாய்-மலாய் — சென்னைப் பத்திரிகைகளுக்கு எழுதி ஆகாசத் தபாலில் சேர்ப்பித்து விட்டு, இரவு மூன்று மணிக்கு ஸ்ரீ கே. வி. எஸ். வாஸ் தூங்கப்போவார் என்று அறிந்தேன். அவர் வாழ்க!

ஸ்ரீ கே. வி. எஸ். வாஸ் இலங்கையின் பிரஜையாகத் தம்மைப் பதிவு செய்து கொண்டிருக்கிறார். இது இலங்கைக்கு லாபம்; இந்தியாவுக்கு நஷ்டம். நாம் கொடுத்து வைத்தது அவ்வளவுதான்!

கொழும்பில் நடந்துவரும் மற்றொரு தினப்பத்திரிகை "தினகரன்". பொதுவாக இது இலங்கை சர்க்காரை ஆதரிக்கும் பத்திரிகை. தமிழ்ச் சங்க விழா சம்பந்தமாகத் "தினகரன்" ஒத்துழைக்கவில்லையென்றும், செய்திகளையே போடவில்லையென்றும் சில தமிழன்பர்கள் குறிப்பிட்டார்கள். விழா நடந்த மறு தினம் பார்த்தால், "தினகரன்" மற்றப் பத்திரிகைகளைக் காட்டிலும் ஒரு படி அதிகமாகவே தமிழ்ச் சங்க ஆண்டு விழாவுக்கு முக்கியத்துவம் கொடுத்துப் பல பத்திகள் பிரசுரித்திருந்தது.

இதிலிருந்து ஒன்று நிச்சயமாயிற்று. இலங்கையிலுள்ள தமிழர்கள் அரசியல் முதலிய துறைகளில் எவ்வளவு மாறுபட்டிருந்தாலும் தமிழ் மொழியைப் போற்றுவதில் அனைவரும் ஒன்றுபடுவார்கள் என்பது தான். ஸ்ரீ தூரனுக்கும் எனக்கும் இது எவ்வளவு மகிழ்ச்சி அளித்திருக்கும் என்று சொல்லவும்வேண்டுமா? (தொடரும்)



ஆரோக்கிய ரகசியம்

வி. என். குமாரஸ்வாமி

6. என்றும் இளமை

ஆசனங்களைப் படுத்தபடி செய்வது, உட்கார்ந்து செய்வது, நின்று செய்வது, பாதத்தை மேல் தூக்கிச் செய்வது என்று நான்கு விதமாகப் பிரிக்கலாம்.

இதில் படுத்துச் செய்யும் ஆசனங்கள் மிக பலஹீனர்களும், ரொம்ப தளர்பட்ட நோயாளிகளும் செய்யக் கூடியவை. பாதத்தை மேல் தூக்கிச் செய்யும் ஆசனங்களில் சிலவற்றைப் பலஹீனர்களும் செய்யலாம். ஆனால் எல்லாவித ஆசனங்களையும் எல்லோரும் பயிற்சி செய்து நோயின்றி ஆரோக்கியமாக வாழலாம்.

ஆசனங்களை வரிசைக் கிரமமாகப் பழக வேண்டும். சரீர சாஸ்திர முறைப்படி ஆசனங்களை வரிசைப் படுத்தியிருப்பதால் ஆசனங்களை மாற்றி மாற்றிப் பழகக் கூடாது. ஆசனங்களின் நோக்கம் இளமையும் ஆரோக்கியமுமே. அவை முதுகுத் தண்டில்தான் அமைந்திருக்கிறது. முதுகுத் தண்டு எந்தப் பக்கமும் நன்றாய் வளைய வேண்டும். அப்படி யார் ஒருவருக்கு வளைகிறதோ, அவரிடம் இளமையைக் காணலாம்.

ஐம்பது அறுபது வயதானாலும் வயதானவர்களுக்கு உள்ள சோம்பல், பலஹீனம் முதலியவைகள் இல்லாமல் வாலிபர்களைப் போல எந்த வேலையிலும் சுறு சுறுப்பாக இருப்பார். ஆனால் இருபது வயதுடைய ஒரு வாலிபருக்கு முதுகு எலும்பு வளையாமல் விறகுக் கட்டைப் போல் இருந்தால் அவர் வயது சென்ற கிழவருக்குச் சமானமே. அவரிடம் சுறு சுறுப்போ, ஆரோக்கியமோ காண முடியாது.

ஆசனங்களில் எதை எடுத்துக் கொண்டாலும், முதுகெலும்பின் ஏதாவது ஒரு பாகத்துக்குப் பயிற்சி கொடுப்பதாய்த் தான் இருக்கும்.

"ஏன் ஸார்! கையையும், காலையும், உடலையும் வளைத்து முறுக்கிக் கொள்ள வேண்டும். கஷ்டமாய்த்தானே இருக்கிறது! அப்படி ஏதாவது வியாதிகள் வந்தால், மருந்து சாப்பிட்டுச் சுகமாக்கிக் கொள்ளலாமே?" என்று விதண்டா வாதம் புரிவோர்களும் இருப்பார்கள்.

அப்படியே மருந்துகளினாலே நம் நோய்கள் தீருவதாய் இருந்தால் இன்று எல்லோரும் சுகமாகவல்லவா இருக்க வேண்டும்? அப்படி இருக்க ஏன் மீண்டும் நோய் வாய்ப்படுகிறார்கள்?


உதாரணமாக சாதாரண ஜுரத்தை எடுத்துக் கொள்ளுவோம். ஜுரக் கிருமிகள் ரத்தத்தில் உற்பத்தியாகி வருகிறது. அதற்கு அக் கிருமிகளைக் கொல்லக் கூடிய மருந்தை ஊசி மூலமாக நம் ரத்தத்தில் செலுத்தியோ அல்லது வாயின் மூலமாகச் சாப்பிட்டோ ரத்தத்தில் கலக்கும்படி செய்கிறோம். அந்த மருந்தைப் பல தடவை உட்கொண்ட பின் அம் மருந்தின் வேகத்தினால் ஜுரக் கிருமி என்னவோ அழிந்து விடுகிறது. ஜுரமும் குறைந்து விடுகிறது. ஆனால் உட்கொண்ட மருந்து ஜுரக் கிருமிகளை மட்டும் கொல்லவில்லை. அதன் வேகம் இன்னும் பல விதத்தில் வேலை செய்கிறது. சிலருக்குத் தலை வலி, சிலருக்கு இருமல், சிலருக்கு உடம்பு நமைச்சல் இம்மாதிரி பல புது வியாதிகள் உண்டாகி விடுகின்றன. திரும்பவும் அதைப் போக்க வேறு மருந்துகள் சாப்பிடவேண்டும். பிறகு அம்மருந்தினால் வேறு ஏதாவது ஒரு புது வியாதி வரும். அதற்கும் மருந்து சாப்பிட வேண்டும். இந்த மாதிரி



மருந்தின் துணையினாலேயே வாழ்வது ஒரு வாழ்க்கையா?

இவைகளை, மருந்தின்மேலோ டாக்டர்களின் மேலோ வெறுப்பினால் சொல்லுவதல்ல. சாதாரணமாய் ஒரு சிறு குழந்தைக்கு ஜுரம் என்று ஒன்று வந்துவிட்டால் போதும். அது போய் இருமல், சீதபேதி முதலிய வியாதிகள் மாறி மாறி வருவதைப் பார்க்கிறோமல்லவா?

மேல்நாடுகளில் உள்ள பல பெரிய டாக்டர்கள் "மருந்துகளினால் வியாதிகள் குணமாவதில்லை. இயற்கையே குணமாக்குகிறது" என்று சொல்லி வருகிறார்கள்.



இப்பொழுது அமெரிக்காவில் நோயில்லாமலேயே வாழ முடியும் என்று தீர்மானித்து நியூயார்க் ஆஸ்பத்திரியில் உள்ள ஒரு பிரபல டாக்டர் நியூஸ்டோன் என்பவர் ஐந்நூறு குடும்பங்களைத் தேர்ந்தெடுத்திருக்கிறாராம். அவர்களுக்கு இலவசமாக யோசனை சொல்லவும் அவர்களுடைய உடல் நலனைக் கவனித்துக் கொள்ளவும் சுமார் முந்நூறு டாக்டர்களை நியமித்திருக்கிறார். அவர்களெல்லாம் டாக்டர்கள் சொல்லும் யோசனைப்படி உணவு தயாரித்துச் சாப்பிட வேண்டும். குழந்தைகளைப் பெறும் விஷயத்திலும் அவர்கள் திட்டப்படி நடக்கவேண்டும். இன்னும் அவர்கள் சொல்லும் தேகப் பயிற்சிகளைத் தவறாமல் செய்ய வேண்டும். இம்மாதிரி திட்டங்கள் மூலம் மேற்படி ஐந்நூறு குடும்பத்தில் உள்ளவர்களுக்கு நோய் வராமல் இருக்க முயற்சி செய்து வருகிறார்கள். அவர்கள் தேகப் பயிற்சிகளில் யோகாசனம் கலந்திருந்தால் நாம் ஆச்சரியப்படுவதற்கில்லை. யோகாசனத்தைத் தவிர வேறு எதற்கு அந்தச் சக்தி யிருக்கப் போகிறது?

இம்மாதிரி நமது கலையாகிய ஆசனங்களை அவர்கள் போற்றுகிறார்கள். திட்டமிட்டுப் பயிலுகிறார்கள். நமக்கு அக்காலம் என்று வருமோ?

நமது தலைவர்களின் வாழ்க்கை முறைகளைக் கவனிக்கும்போதும் அவர்கள் இந்த யோகாசனங்களில் சிலவற்றையாவது பயிலுகிறார்கள் என்று தெரிகிறது.

நமது பிரதம மந்திரி பண்டிட் ஜவாஹர்லால் நேரு அவர்களுக்கு அறுபது வயது ஆகிவிட்டது. ஆனாலும் வாலிபரைப் போலவே ஒய்வு ஒழிவின்றி வேலை செய்கிறார். அவருக்கிருக்கும் சுறுசுறுப்பும், ஊக்கமும் மற்ற தலைவர்களிடம் காண்பது அரிது. அவருக்கு மற்ற தலைவர்களைப் போல நோய்கள் வருவதில்லை. காரணம், அவர் நாள் தவறாமல் சிரசாசனம் செய்து வருகிறார். அவர் சிறைவாசத்தில் இருக்கும்போது 'காலைக் கதிரவனை நான் சிரசாசனத்தில் வரவேற்பேன்' என்று தம் சுய சரித்திரத்தில் எழுதியிருக்கிறார். அத்துடன் அநேக சிக்கலான பிரச்னைகள் எனக்குச் சிரசாசனத்தில் தீரும் என்று சொல்லியிருக்கிறார்.

நம் மாகாணத்தில் ஸர் சி. பி. ராமஸ்வாமி அய்யரைத் தெரியாதவர்கள் இருக்க மாட்டார்கள். அவர் 'இந்த வயதிலும் யோகாசனங்களைப் பயிலுகிறார் என்றால் ஆச்சரியப் படுவீர்கள். அவர் திருவனந்தபுரத்தில் திவானாக இருந்தபோது, யோகாசனங்களைக் கற்க ஆச்ரமம் ஒன்று ஏற்படுத்தி அதன் மூலம் அக் கலையைப் பரப்பினார்.

இவ்வாறு பல அறிஞர்களும் தலைவர்களும் ஆசனம் செய்து கொண்டுதா னிருக்கிறார்கள். ஆனால் பிரசார ரூபத்தில் செய்வதில்லை. சிலருக்கு, மற்றவர்கள் என்ன நினைப்பார்களோ என்று எண்ணம் இருக்கலாம். பெரிய தலைவர்கள் அவகாச மில்லாமையினால் வெளிப்படையாய்ச் சொல்லாமல் இருக்கலாம்.

ஆனால் பல வருஷங்களாக நமது தமிழ் நாட்டில் சில பெரியோர்களின் முயற்சிகளினால் யோகாசனம் என்றால் என்ன? அதைக் குடும்பஸ்தர்களும் செய்யலாம். அதனால் தீராத நோய்கள் எல்லாம் தீரும் என்ற உண்மை தெரிய வந்திருக்கிறது.

இதை மற்ற நாட்டாரும், நம்மைவிடத் தீவிரமாகப் பயில ஆரம்பித்திருக்கிறார்கள். வின்ஸர் கோமகன் தம்பதிகள்கூட ஆசனம் பயிலுகிறார்கள் என்று சமீபத்தில் தெரிய வந்தது.

ஒரு பிரபல நாடக நடிகை வின்ஸர் கோமகனின் மனைவி ஸ்ரீமதி வாலிஸ் சிம்ஸனைச் சந்தித்துப் பேசும்போது, "என்னுடைய எடை நாளுக்கு நாள் அதிகமாகிக் கொண்டு வருகிறது. இதற்கு என்ன செய்வது என்று தெரியவில்லை" என்று மிகவும் வருத்தத்துடன் சொன்னாராம். அதற்கு ஸ்ரீமதி சிம்ஸன் "எங்களைப் போல நீங்களும் யோகாசனப் பயிற்சி செய்யுங்கள். என்றும் இளமையுடன் இருக்கலாம்" என்று யோசனை கூறினாராம். இதை நம் நாடக, சினிமா நடிகர்கள் கவனிப்பார்களா? (தொடரும்)

ஸ்ரீமான் மைத்துனர்

சென்ற வாரம் நகர அபிவிருத்தி டிரஸ்ட் மசோதா சட்டசபையில் விவாதத்துக்கு வந்தது. இந்த டிரஸ்டில் மெம்பர்களாக இருப்பவர்கள் என்னென்ன செய்யலாம், என்னென்ன செய்யக்கூடாது என்பதைப் பற்றி ஒரு ஷரத்தில் கண்டிருந்தது. உதாரணமாக, ஒரு மெம்பர் ஒரு கம்பெனியின் சொந்தக் காரராக இருக்கிறார் என்று வைத்துக் கொள்ளுங்கள். இந்தக் கம்பெனிக்கு காண்டிராக்ட் கொடுக்கலாமா, கூடாதா என்ற பிரச்னை மேற்படி டிரஸ்டில் பரிசீலனைக்கு வரும் போது மேற்குறித்த மெம்பர் நடுநிலைமை வகிக்க வேண்டும். இந்த ஷரத்தைக் கொஞ்சம் மாற்ற வேண்டுமென்று ஒரு அங்கத்தினர் திருத்தம் ஒன்று கொண்டு வந்தார். "தாம் நடத்தும் கம்பெனியாயிருந்தாலும் சரி, தம் மைத்துனர் நடத்தும் கம்பெனியாக இருந்தாலும் சரி, காண்டிராக்ட் விஷயம் விவாதத்துக்கு வரும்பொழுது டிரஸ்டு போர்டு மெம்பர் நடுநிலைமை வகிக்க வேண்டும்" என்பதுதான் அந்தத் திருத்தம். இப்படியாகத்தானே மகா-ா-ா-ஸ்ரீ மகாகனம் பொருந்திய மைத்துனர் சட்டசபைக்குள் பிரவேசித்தார்!

அவரைக் கண்டதும் அங்கத்தினர்கள் கண்கள் சிவந்தன. மீசை படபடவென்று துடித்தது. "இவன் அபாயமான ஆள். பிரதி தினமும் இவன் நிர்வாகத்தில் தலையிட்டு நாசம் செய்கிறான். இவனைத் தள்ளுங்கள் வெளியில்" என்று ஆரவாரித்தார் ஒரு அங்கத்தினர். "தள்ளு! மென்னியைப் பிடித்துத் தள்ளு!" என்று மற்ற அங்கத்தினர்கள் கோஷித்தனர்.

இந்த மைத்துனர் ஒரு பொது உடைமை வாதியா அல்லது நாசவேலைக்காரரா என்று சந்தேகம் உண்டாகிறதல்லவா? ஆமாம். ஸ்ரீமான் மைத்துனர் நம்முடைய சொத்தெல்லாம் தம்முடையது என்று உரிமை கொண்டாடுகிறவர்தான். நமது தாம்பத்ய உறவையும் மன சமாதானத்தையும் நாசம் செய்கிறவர்தான். கம்யூனிஸ்டைவிட அபாயமான மனிதர் இந்த மைத்துனர்.

இவ்வளவு ஆபத்தான மனிதரின் கழுத்தைப் பிடித்துத் தள்ளச் சொன்ன சட்டசபை அங்கத்தினர்களின் தைரியத்தை மனமாரப் பாராட்ட வேண்டும். சட்டசபையின் நாலு சுவர்களுக்குள் ஒரு அங்கத்தினர் என்ன வேண்டுமானாலும் பேச உரிமையிருக்கிறது. இந்தத் தைரியத்தில்தான் இந்த அங்கத்தினர் மேற்கண்டவாறு பேசியிருக்கிறார். சட்டசபைக்கு வெளியே மைத்துனரைப் பற்றி இவர் இவ்வளவு கேவலமாகப் பேசியிருக்க முடியுமா?

எம். எல். ஏ.க்கள் மைத்துனரைத் தள்ளச் சொன்னதும் கனம் மந்திரி மாதவ மேனன் ஷரத்தில் சில வரிகளைப் படித்துக் காட்டி. "இதிலிருந்து மைத்துனர், மைத்துனி, மாமியார் எல்லோரையுமே மறைமுகமாக மென்னியைப் பிடித்துத் தள்ளி விட்டோம் என்பது தெரியவில்லையா? மைத்துனர் ஒழிந்தார். பயப்படாதீர்கள்!" என்று அபயஹஸ்தம் கொடுத்தார். கனம் மந்திரி நேர்முகமாக ஸ்ரீமான் மைத்துனரைத் தள்ள முன் வராததில் ஆச்சரியமில்லை.

ஏனெனில் மைத்துனர் விஷயம் வரும் போது மறைமுகமாகத்தான் எல்லாம் செய்ய வேண்டியிருக்கிறது! மைத்துனரே மறைமுகமாகத்தான் வருவார், மறைமுகமாகத்தான் போவார். நமது சகதர்மிணி திடீரென்று கண்ணைக் கசக்கிக் கொண்டு 'பொல பொல' வென்று கண்ணீர் உகுப்பாள். அவள் கண்ணீருக்குக் காரணம் நமது நான்காவது மைத்துனருக்கு நாம் இன்னும் வேலை வாங்கிக் கொடுக்காதது தான் என்பது தெரியவரும். இவ்வாறு



"என்ன ஸார்! தாடி வளர்க்க ஆரம்பித்து விட்டீர்கள்? பிளேடுகளின் விலை உயர்ந்திருப்பதை உத்தேசித்து 'ஸ்டிரைக்' செய்து விட்டீர்களோ?"

அ. இ. கா. க. மெம்பர் :— இல்லை ஸார்! அடுத்த தடவை காங்கிரஸ் தலைவர் தேர்தலுக்கு நிற்பதென்று தீர்மானித்து விட்டேன்!

ஸ்ரீமான் மைத்துனர் மறைமுகமாகத்தான் கப்பீது ஆட்சி செலுத்துகிறார்.

ஸ்ரீமான் மைத்துனர் எப்படியிருப்பார்? 'ஜம்' மென்று ஸில்க் ஜிப்பா போட்டுக் கொண்டிருப்பார். அப்பொழுதே சலவை செய்த தூய வேஷ்டி அணிந்திருப்பார். சற்று உற்றுக் கவனித்தால் அவைகள் எல்லாம் உங்களுடையதாகவே இருக்கும். அப்படித் தெரிந்தாலும் பார்த்தும் பார்க்காதது போலத்தான் இருக்கவேண்டும்.

ஸ்ரீமான் மைத்துனர் எங்கிருப்பார் என்று அறிவது கஷ்டமில்லை. அங்கிங் கெனாதபடி எங்கும் இருப்பார். சமையற் கட்டுக்குள் எட்டிப் பார்த்தால் உங்கள் மனைவியுடன் மந்திராலோசனை நடத்திக் கொண்டிருப்பார். உங்களைக் கண்டதும் பேச்சை நிறுத்தி விட்டு சீதோஷ்ண நிலையைப் பற்றிப் பேசுவார். கன்னத்தில் அறைந்து அவரை வெளியே தள்ள வேண்டும் போலிருக்கும். ஆனால் பாவம், உங்களால் ஒன்றும் செய்ய முடியாது. நீங்கள் மந்திரியாக இருந்தால், ஸ்ரீமான் மைத்துனர் உங்கள் அந்தரங்கக் காரியதரிசியாக இருப்பார். நீங்கள் ஒரு கம்பெனி முதலாளியாக இருந்தால் உங்கள் காஷியராக விளங்குவார். நீங்கள் உயர்தர சர்க்கார் உத்தியோகஸ்தராக இருந்தால் உங்கள் ஆபீஸில் அவர் குமாஸ்தாவாகச் சேருவார். பிறகு மளமளவென்று பெரிய பதவிக்கு வந்து உங்கள் பக்கத்தில் உட்கார்ந்து விடுவார். உங்களுக்கு ஒரு வேலையுமே இல்லை என்று வைத்துக் கொள்ளுங்கள் — ஆனால் மைத்துனர் உள்ள வரை ஒரு வேலையுமே இல்லாமல் நீங்கள் இருக்க முடியாது — அவரிடமிருந்து உங்கள் உயிரைக் காப்பாற்றிக் கொள்ளும் வேலையாவது கட்டாயம் இருக்கும்!

இந்த சர்வ வல்லமை பொருந்திய மைத்துனரை நீங்கள் அலட்சியம் செய்ய முடியுமா? அவரிடமிருந்து தப்பத்தான் முடியுமா? முடியாது. கம்யூனிஸத்தை நாட்டை விட்டுத் துரத்திவிடலாம். மைத்துனரிஸத்தை விரட்ட முடியாது. அஸ்ஸாம் வெள்ளம் மலைகளைத் தகர்ப்பதைப் போல், சட்ட திட்டம் கட்டுப்பாடு எல்லாவற்றையும் தகர்த்தெறிவார் ஸ்ரீமான் மைத்துனர். கேவலம், நகர அபிவிருத்தி மசோதா 21-வது ஷரத்தினால் மைத்துனரையோ, மைத்துனரிஸத்தையோ என்ன செய்ய முடியும்?

இவ்வளவு தைரியமாக மைத்துனரைப் பற்றி எழுதியதில் உங்களுக்கு ஆச்சரியம் உண்டாகலாம். இந்தக் கட்டுரையை எழுதிக் கொண்டிருக்கும்போது எனது ஸ்ரீமான் மைத்துனர் என் காதைப் பிடித்துத் திருகுவது எனக்குத் தெரியாமல் இல்லை. இதோ பேனாவைப் பிடுங்கிக் கொள்ளப் பார்க்கிறார் ...... இவருக்கு வயது இரண்டுதான். ஆனாலும் எப்படியோ தெரிந்து கொண்டு விட்டார். இதோ நிறுத்தி விடுகிறேன், ஸ்ரீமான் மைத்துனரே!

— வி. என். ஆர்.

அட்டைப்பட விளக்கம்

தமிழ் நாட்டின் ஆதி மகா கவியான வள்ளுவர் பெருமானின் திருவுருவக் கற்பனைச் சித்திரத்தை இந்த இதழின் அட்டையில் வெளியிட்டிருக்கிறோம்.

வள்ளுவர் காலத்தில் கல்வியும் கைத்தொழிலும் தனித்தனி நிற்கவில்லை. ஜீவனோபாயத்துக்காக மக்கள் கல்வி கற்கவும் இல்லை. நெசவுத் தொழில் செய்துகொண்டே ஒப்பற்ற தமிழ் மறையைப் பாடியவர் திருவள்ளுவர் பெருமான் என்பதையும் அட்டைச் சித்திரத்தில் குறிப்பிட்டிருக்கிறது.

வள்ளுவர் தம் உள்ளொளியால் உண்மைகளைக் கண்டார். கண்ட உண்மைகளை உலக அநுபவத்தோடு சேர்த்து இரண்டுவரிப் பாடல்களாக இயற்றி யருளினார். அவ்விதம் வள்ளுவர் அருளிய பாடல்களில்,

> "குழல் இனிது யாழ் இனிது என்ப—தம் மக்கள்
> மழலைச் சொற் கேளாதவர்!"

என்பது பலரும் பல தடவை கேட்டறிந்த பாடல். எத்தனை முறை கேட்டாலும் படித்தாலும் இன்னும் அது சுவையாகத்தா னிருக்கிறது. புதிய புதிய கருத்துக்கள் அதில் ஒவ்வொருவருக்கும் தோன்றுகிறது. தம் மக்கள் மழலைச் சொல்லைவிட இனியது ஒன்று உண்டு என்றால், அது இந்தக் குறள்தான் என்று சொல்லலாம். அத்தகைய அழகிய குறளின் கருத்தையும் அட்டைப் படத்தில் பின்னணியில் தீட்டியிருக்கிறது.

திருவள்ளுவரின் இந்த உருவப் படத்தை இவ்வாண்டு பாரதி விழாவின்போது எட்டயபுரம் பாரதி மண்டபத்தில் திறந்து வைப்பதற்காக நம் சித்திரக்காரர் "சந்திரா" மிக்க முயற்சி எடுத்துப் பெரிய அளவில் இயற்றினார். எட்டயபுரத்தில் பாரதி விழா தள்ளிப் போடப்பட்டதை நேயர்கள் அறிவார்கள். மற்றொரு தக்க சந்தர்ப்பத்தில் வள்ளுவர் பெருமானின் உருவப்படம் பாரதி மண்டபத்தில் திறந்து வைக்கப்படும்.

விடுதலை

[இருபத்திரண்டு ஆண்டுகள் அரவிந்த ஆசிரமத்தில் வசித்திருந்த யோகி சுத்தானந்த பாரதியார் ஆசிரமத்திலிருந்து வெளிவந்த அன்று பாடியது.]

1. காற்றைப்போல விடுதலை
   கட்டில்லாத விடுதலை
   ஆற்றையுண்டு நடனம் ஆடும்
   ஆழிபோல விடுதலை
   நேற்றைக் கவலை ஏனினி?
   நெற்றிக்கண்ணன் அருளுவான்!
   கூற்றை எற்றி மிதித்தபாதங்
   கும்பிட்டோர்க்கு விடுதலை!



2. விந்தை விந்தை மாந்தர்கள்
   விந்தை விந்தைக் காட்சிகள்
   வந்து செல்லும் உலகிலே
   வர்ணஜால உலகிலே
   பந்துபோல விண்குலம்
   பரவியாடும் உலகிலே
   சிந்தைக் கனவிலே லயித்து
   ஜெகத்தைக் கவிதையாக்குவோம்.


3. தங்கச் செருக்கை வணங்கிடோம்
   தடபுடலுக் கஞ்சிடோம்
   சிங்கவீர நெஞ்சுடன்
   செயல் செழித்த கையுடன்
   பொங்கும் அருணப் புன்னகை
   பொலியநிமிர்ந்து முன்செல்வோம்
   எங்கும் இன்பங் கூடிடும்
   இதயசாந்த உதயமே!

4. அரசன் ஒருவன் ஆண்டவன்;
   அடிமை என்பதில்லையே
   நர சமூகம் ஒருகுலம்
   நானிலம் ஒரே மனை
   சரி சமான ராகவே
   சண்டையின்றி வாழுவோம்
   பரமசக்தி யருளினால்
   பாரில்அமர ராகவே.

காற்றைப்போல விடுதலை
கட்டில்லாத விடுதலை!



மூன்றாவது தேவை

● ● ● அழகிய கடற்கரையினால் சிறந்து விளங்கும் சென்னை நகரம் இப்போது இன்னொரு புதிய அழகைப் பெற்றிருக்கிறது. அடையாற்றின் தென்கரையில் "காந்தி நகர்" என்னும் புனிதமான பெயருடன் ஒரு புதிய நகரம் தோன்றியிருக்கிறது. நேர் நேரான விசாலமான வீதிகளையும், பிறைச் சந்திரன் வடிவமான வளைந்த வீதிகளையும் கொண்டு, தற்கால வாசத்துக்குரிய வசதிகள் எல்லாவற்றையும் பெற்று, எடுப்பான முன் தோற்றமுடைய வீடுகளுடன் விளங்குகிறது. இந்தப் புது நகரத்தின் இரு வீதிக் காட்சிகளை மேலே காணலாம்.

● ● ● மக்களுக்கு இன்றியமையாது வேண்டியவை உண்ண உணவு, உடுக்க உடை, தங்க இடம் என்னும் மூன்று தேவைகளாகும். இந்த மூன்றும் இப்போது நாட்டில் அவசியத்துக்குக் குறைவாக இருக்கின்றன. மூன்றாவது தேவையை ஓரளவு பூர்த்தி செய்யும் திருப்பணியைச் சென்னைக் கூட்டுறவு வீடு கட்டும் சங்கம் நடத்தி வருகிறது. இந்தச் சங்கத்தின் தலைவரான ஸ்ரீ கே. வேங்கடசாமி நாயுடு, எம். எல். ஸி., மற்றும் பலருடைய ஒத்துழைப்பையும் பெற்று, மக்களின் மூன்றாவது தேவையைப் பூர்த்தி செய்யும் தொண்டு புரிந்துவருகிறார். சென்னையில் சென்ற வருஷத்தில் கட்டப்பட்டவை மொத்தம் 700 வீடுகள். இவற்றில் காந்தி நகரில் மேற்படி சங்கம் கட்டியிருக்கும் வீடுகள் 335 என்றால், இந்தக் கூட்டுறவு முயற்சி எவ்வளவு முக்கியமானது என்பதை நன்கு அறியலாம்.

● ● ● காந்தி நகரை நிர்மாணித்த அதே கூட்டுறவுச் சங்கத்தார் அயனாவரத்தில் சிறிய குடித்தனக்காரர்களுக்குத் தகுதியான 'வெங்கடேசபுரம்' என்னும் நகரின் நிர்மாணத்தைத் தொடங்கியிருக்கின்றார்கள். இந்தப் புது நகருக்குப் பிரதம மந்திரி அஸ்திவாரமிட்ட விழாவில் சில காட்சிகளை இங்கே காணலாம்.



பொழுது போக்கு

“ தும்பி ”

“யார் சொன்னது சென்னையில் அரிசிப் பஞ்சம் என்று! சென்னை மாகாணத்தில் அரிசிப் பஞ்சமே இல்லை!” என்று கனம் முன்ஷி சமீபத்தில் சென்னைக்கு விஜயம் செய்துவிட்டு டில்லிக்குத் திரும்பிய பிறகு சொன்னாராம். அதேபோல அவர், “பீஹாரிலும் உணவுப் பஞ்சமேயில்லை! இங்கு இறந்தவர்களெல்லாம் பசியால்தான் இறந்து போனார்களே தவிர உணவுப் பஞ்சத்தால் இறக்கவில்லை!” என்று சொன்னால் நாம் அதையும் கேட்டுக்கொண்டுதான் இருக்கவேண்டும்!

இந்த ‘இல்லை, இல்லை’ என்ற பஞ்சப் பாட்டை மாஜி இந்திய மந்திரி அமெரிக்குப் பிறகு நம் தலைவர்கள் அல்லது தலைவர்கள் என்று சொல்லிக் கொள்கிறவர்கள் ராகம், தானம், பல்லவியுடன் பாடுகிறார்கள்.

“இந்தியாவில் உணவு உற்பத்திக்குக் குறைவில்லை, துணி உற்பத்திக்குக் குறைவில்லை” என்று பெரிய தலைவர்கள் கர்ஜிக்கிறார்கள். “இந்தியாவில் ஒன்றுக்குமே குறைவில்லை” என்று சிறிய தலைவர்கள் உறுமுகிறார்கள். (“இந்தியாவில் தலைவர்களுக்குக் குறைவில்லை!” என்ற கோஷமும் நடுவில் கேட்கிறது.)

“சென்னை மாகாணத்தில் அரிசிப் பஞ்சமில்லை” என்று சொல்லும் முன்ஷி இன்னும் கொஞ்ச நாளில், “இந்தியாவில் சென்னை மாகாணமே இல்லை!” என்று சொன்னாலும் சொல்லுவார். பிறகு “உலகத்திலேயே இந்தியா இல்லை” என்று கூறிக் கடைசியாக, “உலகம் என்று ஒன்று இல்லவே இல்லை” என்று சாதித்தாலும் சாதிப்பார்.

இதைத்தான் மாயை என்று வேதாந்திகள் சொல்லுவார்கள். அத்வைத சித்தாந்தத்தில் ஒரு கொள்கை யிருக்கிறதாம். ஒவ்வொரு பொருளையும், ‘இது இல்லை, அது இல்லை’ என்று கழித்துவிட்டுக் கடைசியாக எது மிஞ்சுகிறதோ அதுதான் கடவுள் என்று அறிய வேண்டும் என்பார்கள். நம் முன்ஷியின் வேதாந்த விசாரணையும் கிட்டத்தட்ட மேலே சொன்னமாதிரிதான் இருக்கிறது.

‘அரிசிப் பஞ்சம் இல்லை’ ‘சென்னை இல்லை’ ‘இந்தியா இல்லை’ ‘நான் இல்லை’ ‘நீ இல்லை’ ‘உலகம் இல்லை’ என்று ஒவ்வொன்றாகக் கழித்துக்கொண்டே போய் கடைசியில் எது மிஞ்சுகிறது என்று பார்த்தால் பசிதான் மிஞ்சுகிறது!

கடவுளை யறியும்போது நம்முடைய மாயையெல்லாம் மறைகிறது. அதேபோல இந்தப் பசி நம் வயிற்றைக் கிள்ளும்போது மாயை பறந்தோடி விடுகிறது. ஆகையால் கடவுள்தான் பசி; பசிதான் கடவுள் என்ற கொள்கையை ஏன் ஏற்றுக் கொள்ளக் கூடாது!

பசி (என்ற வார்த்தையை) எடுக்கும்போது சட்டென்று ஓட்டல்களின் ஞாபகம் வருகிறது. சில ஓட்டல்களில் பசி யில்லாமல் இருக்கும்போதுகூடச் சாப்பிடும்படி தோன்றுகிறது. சில ஓட்டல்களில் சாப்பிடும்போது இருக்கும் பசியும் போய் வயிற்று வலியும் தொடர்கிறது.

இதைக் கவனித்துத்தானோ என்னவோ நமது காருண்ய மத்திய மந்திரிகளுள் ஒருவர் “ஓட்டல்கள் தங்கள் தரத்தை உயர்த்தாவிட்டால், சர்க்காரே அவைகளை எடுத்து நடத்தும்” என்று பயமுறுத்தி யிருக்கிறார்.

அவர் ஓட்டல்களை நடத்துபவர்களைத்தான் பயமுறுத்தினாலும், உண்மையில் ஓட்டல்களில் சாப்பிடுபவர்களான நமக்குத்தான் அதிக பயமாகவும் கவலையாகவும் இருக்கிறது. பயம் எதற்கென்றால் மத்திய சர்க்காருக்குத் தலைக்கு மேல் பல ஜோலிகள் இருக்கும்போது இந்தத் தொழிலைக் கவனித்து நடத்தமுடியுமா வென்றுதான். ஆனால் சென்னையைப் பொறுத்த வரையில், பஸ் போக்கு வரத்தை வெற்றிகரமாக நடத்திவரும் நம் மாகாண சர்க்காருக்கு இந்தத் தொழில் ஒன்றும் பிரமாதமில்லை.

இது என் எண்ணம். ஆனால் பொது ஜனங்களுடைய எண்ணம் எப்படியோ! அப்படி அவர்கள் நான் நினைப்பதற்கு விரோதமாக நினைத்தால் அவர்களுக்கு “சர்க்கார் ஓட்டல்களில் சாப்பிட்டால் சாப்பிடுங்கள்! இல்லாவிட்டால் நாங்கள் சாப்பிட்டுக் கொள்ளுகிறோம்!” என்பதுதான் என்னுடைய பதில்!

*

சாப்பிட்ட பிறகு தூக்கம் வருவது சட்டசபை அங்கத்தினர்களுக்கு மாத்திரமல்ல, எனக்கும்தான் வழக்கம்; என் உரிமையும்கூட. ஆனால் அஸ்ஸாமில் பூகம்பம் ஏற்பட்ட நாளிலிருந்து எனக்குச் சாப்பிட்ட பிறகுக் கவலையால் சரியாகத் தூக்கம் பிடிப்பதில்லை. இந்தக் கவலையெல்லாம் அங்கிருக்கும் சட்டசபை அங்கத்தினர்களைப் பற்றி ஒரு விஷயத்தைத் தெரிந்துக் கொள்ளத்தான். “சட்டசபை அங்கத்தினர்களுக்கும் தூக்கத்திற்கும் சம்பந்தமிருப்பதை நாங்கள் ஒத்துக் கொள்ளுகிறோம். ஆனால் பூகம்பத்திற்கும் தூக்கத்திற்கும் என்ன சம்பந்தம்?” என்றுதானே நீங்கள் கேட்கிறீர்கள். அதைத்தான் சொல்ல விரும்புகிறேன்.

“குழந்தையைத் தொட்டிலில் போட்டுத் தாலாட்டுவதுபோல அஸ்ஸாமை தினசரி பூகம்பம் ஆட்டிவருகிறது” என்ற செய்தியைத் தினசரி பத்திரிகைகளில் நீங்கள் படித்திருப்பீர்கள். என் கவலையெல்லாம், “அஸ்ஸாமில் இம்மாதிரி தாலாட்டுப் பூகம்பம் ஏற்பட்டபோது சட்டசபை நடந்துகொண்டிருந்ததா? தாலாட்டாமலேயே தூங்கும் அங்கத்தினர்கள் இம்மாதிரி தாலாட்டுப் பூகம்பம் ஏற்பட்டபோது சாதாரணமாகத் தூங்கினார்களா! அல்லது குறட்டைவிட ஆரம்பித்தார்களா!” என்றுதான். தூக்கத்திலிருந்து விழித்ததும் “இவ்வளவு பெரிய பூகம்பம் நான் தூங்கிக் கொண்டிருக்கும்போது ஏற்பட்டதா!” என்று கேட்கும் சட்டசபை அங்கத்தினர்கள் யாரும் இருக்க மாட்டார்களென்று நம்புகிறேன்!



ஸ்ரீராமகிருஷ்ண உபநிஷதம்


27. பக்தன்

சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார்

ஆயிரம் ஆண்டு தண்ணீரில் கிடந்தாலும் வெளிச்சக் கல்லில் உள்ள நெருப்பு அணைந்துபோகாது. எஃகாணி தாக்கினதும் அதிலிருந்து பொறி கிளம்பும். பல்லாயிர வருஷம் நீரில் அமிழ்ந்து கிடந்தாலும் உள்ளே மறைந்து நிற்கும் அக்னியின் வேகம் கொஞ்சமும் சேதப்படாமல் வெளியாகிறது. நல்ல பக்தனுடைய பக்தியும் இத்தகையதே. உலகத்திலுள்ள அழுக்கு அவனுடைய உறுதியான பக்தியைப் பழுது படுத்தாது. என்ன துன்பம் நேரிடினும் அவனுடைய நிலை மாறாது. ஆண்டவனிடம் அவனுக்குள்ள அன்பு வெளிச்சக்கல்லின் நெருப்பு போல் ஒரு அழியாத பொருள். எஃகு பட்டதும் கல்லினின்று தீப்பொறி பறப்பது போல் ஆண்டவனுடைய நாமம் கேட்டதும் அவன் உள்ளத்தினின்று பக்தித் தீப்பொறி பறக்கிறது.

துன்பமும் பழியும் வந்து பக்தனைத் தாக்கும். ஆனால் உறைகல்லில் தங்கத்தைத் தேய்ப்பதுபோல் அதுவெல்லாம் பரீக்ஷையேயன்றி துன்பமல்ல. பக்தனுடைய பக்தி அந்தச் சோதனைகளில் எல்லாம் வெற்றி பெற்று உறுதியடையும்.

புலன்களின் வழியால் அடையும் போகங்களின் மோகத்தை ஒருவன் எப்படித் தப்புவது? ஆண்டவன் நினைவிலும் தியானத்திலும் ஆனந்தம் கண்டு வழக்கப்படுத்திக் கொண்டால், புலன்களின் அபாயம் ஒழியும். சிற்றின்பத்தின் வலையினின்று தப்ப வேண்டுமானால், பகவத் தியானத்தில் மகிழ்ச்சி காணப் பயிலுவதே வழி. பெரு மகிழ்ச்சி கண்டதும் சிறு மகிழ்ச்சியின் சக்தி குறைந்து போகும். ஆண்டவனை நுகர்ந்து ருசிகண்ட பக்தன், க்ஷண மாத்திரம் ஆரம்பத்தில் சுகம் தந்து பின்பு துன்பமாக முடியும் புலன் நுகர்ச்சி இன்பங்களைத் தேடி அலைய மாட்டான். அலைச்சலைத் தவிர அவற்றில் உண்மைச் சுகமில்லை என்பதை அறிந்தபின் தன்னைத்தானே ஒருவன் துன்பப்படுத்திக் கொள்ளமாட்டான். கற்கண்டை அறிந்தவன் குப்பையும்



மண்ணும் நிறைந்த கருப்புக்கட்டியை மதிக்க மாட்டான். அரமனையில் கட்டிலில் படுத்துத் தூங்கியபின் அழுக்கு நிறைந்த சேரிக் குடிசையைத் தேடி ஒருவன் மண்ணில் படுத்துத் தூங்குவானா? கடவுளைக் குறித்து ஆனந்தம் கண்ட பக்தன் கள்ளுக்கு ஆசைப் பட மாட்டான்.

சிற்றின்ப எண்ணங்களை உண்டாக்கும் சந்தர்ப்பம் ஏதேனும் நேரிட்டால், உடனே உள்ளத்தை ஆண்டவன்பால் செலுத்து. இதைப் பழக்கப் படுத்திக் கொண்டால் எல்லா அபாயமும் தாண்டிப் போகலாம். எங்கேயும் ஈசுவரி உன் பக்கத்தில் நிற்கிறான் என்பதை நினைவில் வைத்துக்கொள். தனியான இடத்தில் யாரும் உன்னைப் பார்க்காத சந்தர்ப்பத்திலும் அவன் உன் பக்கத்திலேயே நிற்கிறான். இதை உணர்ந்து விட்ட பக்தனுக்கு அபாயம் ஏது? எந்தப் பண முடிப்பும் எந்தப் பெண்ணழகும் அவனுக்கு ஆபத்தாகாது.

புகழுக்காகப் பக்தியும் பூஜையும் செய்பவனுடைய பக்தியும் பூஜையும் உண்மை பக்தியல்ல; உண்மைப் பூஜையும் அல்ல. மௌனமும் தனிமையுமான பக்தியே பக்தி. ஆரவாரமும் ஆகுலமும் கூடிய பகவதாராதனம் எல்லாம் பயனற்ற வேஷமாகும்.

மலையருவியானது பாறைகளிடையில் குதித்து ஓடி, பிறகு கம்பீர நதியாக அகன்று செல்கிறது. பக்தன் இதயமும் அவ்வாறே. துன்பமும், தடையும், ஐயமும் தாண்டிப் பிறகு உறுதி நிலை அடைகிறது. அவ்வப்போது நேரிடும் கவலையும் கலக்கமும் எளிதில் தீர்ந்துபோய் சமநிலை அடைகிறது. பக்தனுடைய நெஞ்சில் உண்டாகும் கலக்கங்கள் க்ஷண மாத்திரமே துன்பம் உண்டாக்கும். உடனே பக்தி நிலையின் ஆனந்தத்தில் அவை கரைந்து போகும்.

பக்தன் பகவானுடைய குழந்தை. அவன் கண்களில் வடியும் கண்ணீரே அவன் பலம். ஹரியின் பெயர்களில் ஒன்றைக் கேட்ட மாத்திரத்தில் மயிர்க் கூச்செடுப்பதும் கண்களில் நீர்வடிவதும் பக்தனுக்கு அடையாளம். அக்குறிகள் உண்டானால் 'இதுவே உன் கடைசிப் பிறப்பு, சம்சாரத்தினின்று மோக்ஷம் அடுத்தாற்போல் இருக்கிறது' என்பதை அறிவாய்.

வளர்த்த பாசம்

தத்தாத்திரி

'பூம்......பூம்......பூம்......' என்ற மோட்டார் ஹார்ன் சத்தம் கேட்டு, அந்த அகதி முகாமிலுள்ள குழந்தைகளெல்லாம் ஓடிவந்து 'கேட்'டைத் திறந்தன. திறந்தவுடன் நீல நிறக் கார் ஒன்று வெகு நாசூக்காக உள்ளே நுழைந்து வீட்டு வாசற்படியண்டை போய் நின்றது. அந்தக் காரிலிருந்து ராமநாதனும் அவரது மனைவி விமலாவும் இறங்கினர். குழந்தைகள் அவ்விருவரையும் ஆச்சரியத்துடன் கண்கொட்டாமல் பார்த்தவாறு நின்றனர். அவர்களிருவரும் வீட்டினுள் நுழைந்து வாசற்படியண்டை நின்று கொண்டிருந்த 'சப்ராசி'யைக் கூப்பிட்டு ஏதோ கேட்டனர். அவன் ஏதோ முணுமுணுக்கவே, ராமநாதன் சட்டைப் பையிலிருந்து தனது 'விஸிட்டிங் கார்டை' எடுத்துக் கொடுத்தார். அவன் அதை எடுத்துக் கொண்டு உள்ளே சென்றான். உடனே உள்ளேயிருந்து ஒரு குமாஸ்தா வெளியே வந்து, தலைவி இன்னும் அரை மணி நேரத்தில் வந்து விடுவார்கள் என்றும், அதுவரை அவர்கள் ஆபீஸ் அறையில் வந்து உட்காரலாம் என்றும் சொன்னான்.

"அதற்கென்ன? பரவாயில்லை! நாங்கள் இங்கேயே உட்கார்ந்திருக்கிறோம்" என்று சொல்லி ராமநாதன், அங்கே கிடந்த சோபா ஒன்றில் அமர்ந்து, அன்று வந்த ஆங்கில தினசரியைப் படிப்பதில் ஆழ்ந்து விட்டார். அவரது மனைவி விமலாவோ, அங்குள்ள காட்சியைப் பார்த்தபடியே வராந்தாவில் உலாவ ஆரம்பித்தாள்.

ராமநாதன் தில்லியில் உள்ள மத்ய சர்க்கார் காரியாலயத்தில், ஓர் பொறுப்புள்ள உத்தியோகம் வகிப்பவர். அவருடைய மாத வருமானம் ஆயிரத்தை எட்டிப் பிடித்துக் கொண்டிருந்தது. இன்னும் 'பிரமோஷ'னுக்கும் 'சான்ஸ்' இருந்தது. அவருக்கு வயது சுமார் நாற்பத்தைந்து தானிருக்கும். விமலாவுக்கு வயது முப்பத்தைந்து. இருவருக்கும் விவாகமாகிப் பல வருஷங்கள் ஆகியும், குழந்தைச் செல்வமில்லை. குழந்தைப் பேறைப் பெறுவதற்காக விமலா வேண்டாத தெய்வங்கள் இல்லை; பார்க்காத ஊர்கள்—கோயில்கள் இல்லை; குளிக்காத நதிகள்—குளங்கள் இல்லை; கேட்காத ஜோஸ்யர்கள் இல்லை. இன்னும் அனுஷ்டிக்காத விரதங்களில்லை. ஆயினும் பாவம்! அவளுக்குக் குழந்தைப் பேறு உண்டாகவில்லை.

மனம் நொந்து, வாழ்க்கை கசந்து போய்க் கொண்டிருக்கும் சமயத்தில்தான், அவளது சிநேகிதி சுமித்ராதேவி ஒரு யோசனை சொன்னாள். அகதி முகாமிலிருந்து உனக்குப் பிடித்தமான ஒரு குழந்தையை 'தத்து' எடுத்துக்கொண்டு வளர்ப்பதுதானே?" என்று அவள் சொன்ன அந்த யோசனை விமலாவுக்கும் சரியென்றே பட்டது. ஆகவே, தன் கணவரையும் அழைத்துக் கொண்டு ஊரின் எல்லையிலுள்ள அந்த அகதிக் குழந்தைகள் முகாமுக்கு வந்தாள்.

விமலா வராந்தாவின் வலது கோடித் திருப்பத்தில் ஏதோ யோசித்தவாறே உலாவிக் கொண்டிருந்தாள். ஏதோ சத்தம் கேட்டு மேலே அண்ணாந்து பார்த்தாள். அங்கே இரண்டு பட்சிகள் தன் குஞ்சுகளுடன் கொஞ்சிக் குலாவுவதைப் பார்த்தவுடன், தாய்மைக்காக ஏங்கித் தவித்துக் கொண்டிருந்த அவளது உள்ளம் குமுறியது. அவளை அறியாமலே பெருமூச்சு ஒன்று வந்தது. திடீரென்று தனது வலது காலை ஏதோ பற்றிக்கொண்டது போன்ற உணர்ச்சியுண்டாயிற்று. குனிந்து பார்த்தாள். சுமார் இரண்டு வயதுள்ள ஓர் ஆண் குழந்தை தனது வலது காலைப் பிடித்துக்கொண்டு நிற்க முயற்சிப்பதைக் கண்டாள், உடனே குனிந்து அந்தக் குழந்தையை வாரி யெடுத்தாள். அந்தக் குழந்தையின் நிஷ்களங்கமான முகத்தைக் கண்டாள். அதன் கண்களில் தாயின் அணைப்புக்காக ஏங்கிக் கொண்டிருந்த ஏக்கத்தின் சாயையையும் கண்டாள். அதன் சுருண்ட மயிரைக் கோதி விட்டுக் கொண்டே, ராமநாதன் உட்கார்ந்திருந்த இடத்துக்கு வந்தாள்.

ராமநாதன் அப்பொழுது வேறு ஒரு ஸ்திரீயுடன் பேசிக் கொண்டிருந்தார். விமலா, அவள்தான் அந்த முகாமின் தலைவியாயிருக்கவேண்டும் என்று தீர்மானித்தாள். உடனே அவள் தன் கணவரின் அருகில் சென்று, "இந்தக் குழந்தையை எடுத்துக் கொண்டுபோய் வளர்க்

கலாம் என்று நினைக்கிறேன். எனக்கு இந்தக் குழந்தை மிகவும் பிடித்து விட்டது. நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?" என்று கேட்டான்.

"நான் என்ன சொல்வது? உனக்குப் பிடித்தால் எனக்கும் பிடித்த மாதிரி தான். நல்ல பொக்கிஷம் கிடைத்தது நமது பாக்கியம்!" என்று சொல்லி ராமநாதன் என்ன என்ன, எங்கெங்கே எழுத வேண்டும் என்று சொன்னார்களோ, அவ்வளவையும் இன் முகத்தோடு பூர்த்தி செய்து கையெழுத்திட்டுக் கொடுத்தார். பிறகு அந்தக் குழந்தையை அன்புடன் மனைவியிடமிருந்து வாங்கிக் கொண்டு கார் அருகே சென்றார். வரும் பொழுது இருவரை மட்டுமே அழைத்து வந்த அந்தக் கார், போகும்போது இன்னொரு ஆத்மாவையும் அழைத்துச் செல்லுகிறோம் என்ற பெருமிதத்தோடு சென்றது. வீட்டுக்குப் போகும் வழியிலேயே, அவர்கள் அந்தக் குழந்தைக்கு வேண்டிய துணி மணிகள், வேடிக்கைச் சாமான்கள் முதலியவற்றை வாங்கிக் காரில் நிரப்பிக் கொண்டு சென்றனர்.

அநாதையாக, அகதியாக, அதிர்ஷ்டமற்றதாக இருந்த அந்தக் குழந்தைக்கு அதிர்ஷ்டம் அடித்தது; ஆனந்த வாழ்க்கை கிட்டியது. கணவனும் மனைவியும் அந்தக் குழந்தையை மிகவும் ஆதரவுடன் கண்ணின் மணியெனப் போற்றி வளர்த்து வந்தனர். செல்வச் செருக்கிலே அது மிகவும் செல்லமாக வளரலாயிற்று. அந்தக் குழந்தைக்கு அவர்கள் அன்புடன் குமார் என்ற பெயரைச் சூட்டியிருந்தனர்.

குமார் அவர்களுடைய வீட்டுக்கு வந்து இரண்டு வருஷங்களுக்கு மேல் ஆகி விட்டது. குமாரின் குறுகுறு வென்றிருக்கும் களை பொருந்திய முகம், சுருட்டை மயிர், கேட்கக் கேட்க இனிக்கும் மழலைச் சொற்கள் முதலியவை அவ்விருவருடைய மனதையும் கொள்ளை கொண்டு விட்டன.

★

அன்று ஞாயிற்றுக்கிழமை. பகல் ஒரு மணியிருக்கும். பகல் போஜனம் முடிந்ததும் விமலா வராந்தாவுக்கு வந்து ஈஸிசேரில் படுத்துக் கொண்டாள். கருணையேயில்லாமல் காய்ந்து கொண்டிருந்தான் கதிரவன். அவளுக்குத் தூக்கம் கண்ணைச் சுற்றியது.

பல வருஷ காலமாகக் கருத்தரிக்காமல் இருந்த விமலா அப்பொழுது மூன்று மாத கர்ப்பிணியாக இருந்தாள். அந்தச் சமயத்தில், "அம்மா, அம்மா!" என்று சொல்லிக் கொண்டே வந்து அவளுடைய இடுப்பைப் பற்றிக் கொண்டான் குமார். ஏதோ காரணம் தெரியாத எரிச்சல் கொண்டாள் விமலா.



"தூரப் போடா! வெய்யில் கொளுத்துகிறது. நீ வேறு சனியன் மாதிரி படுத்துகிறாய்!" என்று சொல்லிக் கொண்டே அவனைத் தள்ளினாள். கீழே விழுந்த குமார் அதிர்ச்சி பொறுக்க மாட்டாமல் கதறினான். "காத்தாயி, இங்கே வந்து இந்தச் சனியனைக் கொஞ்சம் அழைத்துக்கொண்டு போ!" என்றாள் விமலா.

"ஏன் அம்மா, குமாரை அடித்தீர்கள்! வா, கண்ணு!" என்று அவனை அழைத்துச் சென்றாள் வேலைக்காரி காத்தாயி. குழந்தை குமாரும் முகத்தைத் தொங்கப் போட்டுக்கொண்டு விசித்தவாறே அவளுடன் சென்று விட்டான்.

விமலாவையும் ராமநாதனையும் ஒருங்கே மகிழ்விக்க, ஓர் ஆண் குழந்தை பிறந்தது. அதற்கு விஜயன் என்று பெயரிட்டு அவர்கள் அதை வெகு அருமையாக வளர்த்து வந்தனர்.

நாட்கள் மாதங்களாகி, மாதங்கள் வருஷங்களாகி உருண்டோ

டின. விஜயனுக்கு வயது மூன்று. குமாருக்கு வயது ஏழு. விமலாவிடம் தற்போது வெவ்வேறு உணர்ச்சிகள் தோன்ற ஆரம்பித்து விட்டன. காரணமில்லாமல் குமாரைக் கோபிப்பாள்; சில சமயம் அடிப்பாள். காரணந் தெரியாத பகைமையுணர்ச்சி அவளுக்குக் குமார் மீது ஏற்பட்டது. குமாரிடமிருந்த அன்பு படிப்படியாகக் குறைய ஆரம்பித்தது. பாவம்! அந்தக் குழந்தை யாரிடம் சொல்லுவான்? ராமநாதனும் விமலாவிடம் எவ்வளவோ சொல்லிப் பார்த்தார். ஆனால் அவள் அதையெல்லாம் கேட்டால்தானே? விஜயனைப் போற்றுவாள். குமாரைத் தூற்றுவாள்.

இருந்தாற்போலிருந்து ஒருநாள் விஜயனுக்கு ஜுரம் கண்டது. தினம் தினம் ஜுரத்தின் வேகம் அதிகரித்து வந்தது. கவலையே உருவாகி, அவன் படுத்திருந்த கட்டிலின் அருகிலேயே உட்கார்ந்து, விமலா அவனுக்கு மருந்து கொடுத்து வந்தாள். தெய்வங்களையெல்லாம் வேண்டினாள். ஆயினும் ஜுரம் கொஞ்சமும் குறைந்த பாடில்லை!

பகல் சுமார் இரண்டு மணியிருக்கும். வெய்யில் மிகவும் உக்கிரமாகக் காய்ந்து கொண்டிருந்தது. டாக்டர் அன்று காலை தன் கணவரிடம் சொன்ன வார்த்தைகள் விமலாவின் காதில் மீண்டும் ஒலித்தன. "என்ன செய்வது, சார்?...... நானும் ஒரு டாக்டர் தானே! எவ்வளவு தூரம் என்னால் வைத்திய உதவி செய்ய முடியுமோ, அவ்வளவும் செய்து விட்டேன். இனிமேல் எல்லாம் வல்ல இறைவன் செயல்! அவரை நம்புங்கள்!" என்று சொல்லிவிட்டார்.

கட்டிலின் எதிரே பராசக்தியின் படம் இருந்தது. விமலா கட்டிலை விட்டு எழுந்தாள். பயபக்தியுடன் கைகூப்பிக் கொண்டு படத்துக்கருகே சென்று, "அம்மா, தாயே! என் குழந்தைக்கு உயிர்ப் பிச்சை கொடு. பச்சிளங் குழந்தை. எங்களுடைய மனதை நோகச் செய்யாமல் எங்கள் செல்வத்தைக் காப்பாற்று!" என்று வேண்டினாள்.

'ஹஹ்ஹஹ்ஹ!' என்ற சிரிப்பொலி எங்கிருந்தோ கேட்டது.

"உயிர்ப் பிச்சையா கேட்டாய்? ஒரு சின்னஞ் சிறு குழந்தையை வாட்டி வதைக்கிறாயே!—உனக்கா உயிர்ப்பிச்சை கொடுப்பது? தாய் தந்தையற்ற ஒரு குழந்தையை என்ன பாடு படுத்துகிறாய்? உன் மனம் நன்றாக இருக்கிறதா' என்று நீயே யோசித்துப் பார்!" என்று அசரீரி போன்ற குரல் ஒலித்தது. அதைக்கேட்ட விமலா நடுநடுங்கிப் போனாள்.

"அம்மா! ஏதோ அறியாமல் தவறு இழைத்து விட்டேன். மன்னிக்கவேண்டும். தாயே! குழந்தை குமாரை இனிமேல் நன்றாகக் கவனித்துக் கொள்கிறேன். விஜயனைக் காப்பாற்று! காப்பாற்று!" என்று கதறினாள் விமலா.

"மன்னிப்பா? அதுவும் உனக்கா? நீலிக்கண்ணீரை ஏன் வீணில் செலவிடுகிறாய்? ஒரு பிஞ்சு மனதை வாட்டிக் கசக்கின உனக்கா மன்னிப்பு?" என்று மீண்டும் அந்தக் குரல் கேட்டது.

"தாயே! நீ மன்னித்துத்தான் ஆக வேண்டும். இனிமேல் குமாரை என் மூத்த பிள்ளையாகவே பாவிப்பேன். இருவரை



யும் கண்ணின் இமைகளைக் காத்து வளர்ப்பேனே. என் விஜயனைக் காப்பாற்று. தாயே! பராசக்தி! உன்னை அன்றி எனக்கு வேறு யார் கதி? ஏதோ தெரியாமல் செய்த தவறை நீ மன்னித்துத்தான் ஆகவேண்டும். உலகத்துக் கெல்லாம் தாயாகிய நீ மன்னிக்கா விட்டால், வேறு யார் மன்னிக்கப் போகிறார்கள்? ஏழை மீது இறங்கி என் விஜயனை நீ காப்பாற்றித்தான் ஆகவேண்டும். அம்மா, தாயே! எனக்கு நீ எப்படியும் உயிர்ப்பிச்சை கொடுத்துத்தான் ஆகவேண்டும்" என்று கதறியவாறே கீழே விழுந்தாள்.

★

ராமநாதன் ஓடோடியும் வந்து, அவளைத் தூக்கி, ஈஸிச் சேரில் படுக்க வைத்து, தனது சவுக்கத்தால் விசிறினார். விமலா கண் திறந்து மிரள மிரள விழித்தாள். "விஜயன் இப்போது எப்படி இருக்கிறான்? பராசக்தி அவனைக் காப்பாற்றுவாள் அல்லவா?" என்று கேட்டாள்.

ராமநாதன் ஆச்சரியத்துடன், "விஜயனா? யார் அது? நீ என்ன சொல்லுகிறாய்?" என்று கேட்டார்.

"நம் குழந்தை விஜயனைத்தான் சொல்லுகிறேன். அவனுக்கு உடம்பு சரியாக இல்லை யல்லவா? குணம் ஆகுமா என்று தான் கேட்கிறேன்!" என்று விமலா மேலும் தொடர்ந்தாள்.

"நீ கனவு-கினவு கண்டாயா, என்ன?" என்று அதட்டிக் கேட்டார் ராமநாதன்.

"கனவா?" என்று கேட்கும்பொழுதே அவளுக்குத் தூக்கக் கலக்கம் கலைந்து விட்டது. இதயத்தின் ஆழத்திலே அமுங்கிக் கிடக்கும் இச்சைதான் இப்படி ஒரு கனவாகப் பரிணமித்திருக்கிறது என்பது தெரிந்ததும் விமலா வெட்கித் தலை குனிந்தாள்.

"நமக்கு நிஜமாகவே குழந்தை பிறந்தாலும் குமாரை நான் விடமாட்டேன். அவன் நம்முடனேயே இருக்கவேண்டும். என்ன சொல்லுகிறீர்கள்?" என்று கேட்டாள் விமலா.

"உனக்கு இன்னும் தூக்கக் கலக்கம் தெளியவில்லை போலிருக்கிறது! நன்றாக முகத்தைக் கழுவிக்கொள். பகல் கனவு காணத் தொடங்கிவிட்டாயே! குமார்! குமார்! ஒரு டம்ளர் அம்மாவுக்குத் தண்ணீர் கொண்டுவந்து கொடு!" என்றார் ராமநாதன்.

தான் கண்ட கனவின் நினைவாகவே இருந்த விமலாவுக்கு, ஒரு தடவை குமாரைக் கண்குளிரப் பார்க்கவேண்டும்போலிருந்தது. ஆகவே, அவளும் அவருடன் சேர்ந்து கொண்டு "குமார்! குமார்!" என்று கூப்பிட்டாள். அவளது குரலில் தாய்மை கலந்து ஒலித்தது. சிரித்த முகத்துடன் குமார் ஓடிவந்து விமலாவின் மடியில் ஏறி உட்கார்ந்து கொண்டான். அவனை இறுகத் தழுவிக் கொண்டே அவனது தலையைக் கோதிவிட்டாள் விமலா. பிறகு அவனது இரு கன்னங்களிலும் மாறி மாறி முத்த மிட்டாள். வளர்த்த பாசம் மேலோங்கி நின்றது. அவளது உள்ளம் தாய்மையின் பூரணத்வத்தை அடைந்தது.

○ ● ○



மதுரைமாநகரின் பிரபலஸ்தரும், தொழில் நுணுக்க அறிபரும், பாண்டியன் பாங்கு மானேஜிங் டைரக்டருமான ஸ்ரீ என். என். கே. சுந்தரம் சென்ற 26-8-50ல் விமான மூலம் மேல் நாட்டிற்குப் பிரயாணமானார். எகிப்து, இத்தாலி, ஸ்விட்சர்லாந்து, டென்மார்க், ஸ்வீடன், நார்வே, பிரான்ஸ், இங்கிலாந்து முதலிய பல நாடுகளில் சுற்றுப் பிரயாணம் செய்து பாங்கு சம்பந்தமான விஷயங்களையும், தொழில் நுணுக்கங்களையும் அந்தந்த நாடுகளில் எவ்வாறு நடத்துகின்றனர் என்பதை ஆராய்ச்சி செய்துவிட்டு இந்த வருஷக் கடைசியில் இந்தியாவுக்குத் திரும்புவார். அவருடைய மேல்நாட்டு விஜயம் வெற்றி பெறுமாக.


நான்கு நன்மணிகள்
மேட்டூர்
சந்தன
சோப்
பரிமளமிக்கது, பரிசுத்தமானது
கவர்ச்சிமிக்க காந்தி அளிப்பது
ரூப்
டாய்லெட் சோப்
காவேரி
ஸூபர்
சோப்
'சால்மூக்ரா' எண்ணெய் சேர்ந்தது
சுகாதாரத்திற்கு இன்றியமையாதது
சுத்தமான சலவைக்கு உத்தமமான
காவேரி
பார் சோப்
மேன்மையான 'மேட்டூர் கெமிகல்ஸ்' தயாரிப்புகள்
மேட்டூர் கெமிகல் & இண்டஸ்ட்ரியல் கார்ப்பொரேஷன் லிமிடெட்
மேட்டூர் அணை - சேலம்
பூரண விற்பனை ஏஜண்டுகள்:
அலைட் இண்டஸ்ட்ரியல் டிஸ்ட்ரிப்யூடர்ஸ் லிமிடெட்
120, அரண்மனைக்காரத் தெரு, சென்னை & கிளைகள்

மகிழபுரி மன்னன்

பி.எஸ். மணி



1. தீனக் குரல்

“தீரா! தீரா!” என்று கூப்பிட்டான் வீரன். குடிசைக்குள்ளிருந்த தீரன், “என்ன அப்பா! என்ன வேணும்?” என்று கேட்டுக் கொண்டே வெளியில் வந்தான்.

“இல்லை! நான் வேலைக்குப் போகிறேன். குடிசையை விட்டு வெளியிலே எங்கும் புறப்பட்டுப் போய் விடாதே! குடிசையிலேயே விளையாடிக் கொண்டிரு!” என்று கூறி விட்டு அவனிடமிருந்து பிரியா விடை பெற்றுச் சென்றான் வீரன். தீரன் தன் தகப்பன் போன திசையையே பார்த்துக்கொண்டு நின்றான். பிறகு குடிசைக்குள் சென்று விளையாடலானான்.

வீரன் ஒரு விறகு வெட்டி. அவன் மிகவும் ஏழை. தினந்தோறும் கிராமத்தை அடுத்த காட்டுக்குச் சென்று விறகு வெட்டி வருவான். அதை விற்றுக் கிடைக்கும் ஊதியத்தில் வாழ்ந்து வந்தான். அவனுக்கு ஒரே மகன்; அவன் பெயர்தான் தீரன். வீரன் அவனைத் தன் இரு கண்ணிமைகளையும் போல் பாதுகாத்து வந்தான். ஒவ்வொரு நாளும் வீரன் காட்டுக்குச் செல்லும்பொழுது மேலே கூறியபடி எச்சரித்து விட்டுப் போவது வழக்கம். தீரனும் தன் தந்தையின் வார்த்தையைத் தட்டாமல் குடிசையிலேயே விளையாடிக் கொண்டிருப்பான்.

தீரன் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வந்தான். அவனுக்கும் வாலிப வயது வந்தது. அப்பொழுதுதான் அவனுக்குத் தன் தகப்பன் தனக்காகப் படும்

கஷ்டம் தெரிந்தது. தன் தந்தைக்கு இனியாவது உதவி செய்ய வேண்டும் என்று எண்ணினன். ஆனல் வீரனே அவனை இன்னும் சிறு குழந்தையாகவே மதித்து வந்தான்.

ஒரு நாள் வீரன் காட்டுக்கு விறகு வெட்டப் புறப்பட்டான். அச்சமயத்தில் தீரன் அவனிடம் வந்து, "அப்பா! நானும் உங்களுடன் காட்டுக்கு வந்து உதவி செய்கிறேனே?" என்று ஆவலுடன் கேட்டான். தீரனின் கேள்வி வீரனுக்கு மிகுந்த ஆச்சரியத்தையும், திகைப்பையும் அளித்தது. இதற்கு முன்பு ஒரு தடவை கூடத் தீரன் அவனை அவ்வாறு கேட்டதில்லை.

"தீரா! விறகு வெட்டுவது என்பது மிகவும் கஷ்டமான வேலை. உன்னல் அந்தக் கஷ்டமான வேலையைச் செய்ய முடியுமா? நீ இங்கேயே இருந்து குடிசையைக் கவனித்துக் கொள். அதுவே போதும்" என்ருன் வீரன். ஆனல் வீரனின் வார்த்தைகள் தீரனின் காதில் ஏறினல்தானே? அவன் தானும் வரத்தான் வருவேன் என்று மிகவும் பிடிவாதம் பிடித்தான்..

"தீரா! நீ பிடிவாதம் பிடித்து என்ன பயன்? என்னிடம் ஒரே ஒரு கோடாலிதானே இருக்கிறது? இன்னொரு கோடாலிக்கு எங்கே போவது?" என்று கேட்டான் வீரன்.

"அப்பா! அதைப்பற்றி நீங்கள் கவலைப்பட வேண்டாம். நான் பக்கத்து வீட்டுக்காரரிடம் போய் அவர் கோடாலியைக் கொஞ்ச நாட்களுக்கு இரவலாக வாங்கி வருகிறேன்" என்ருன் தீரன்.

அதைச் சொன்னதுதான் தாமதம்; ஓரே ஓட்டமாக ஓடிப் போய்ப் பக்கத்து வீட்டுக் காரனிடமிருந்து தீரன் கோடாலியை இரவலாக வாங்கி வந்து விட்டான்.

வீரன் தன் கோடாலியைத் தோளில் போட்டுக் கொண்டு காட்டை நோக்கிப் புறப்பட்டான். தீரனும் குதித்துக் கொம்மாள மடித்துக் கொண்டு அவனுடன் சென்ருன்.



வீரன் வழக்கமாக விறகு வெட்டும் இடத்துக்குத் தன் மகனுடன் வந்து சேர்ந்தான். ஒரு பெரிய மரத்தைத் தேர்ந்தெடுத்து அதை வெட்ட ஆரம்பித்தான். தீரன் சும்மா யிருப்பானு? அவனும் கோடாலியை எடுத்துக் கொண்டு தகப்பனுக்கு ஒத்தாசையாக மரத்தை வெட்ட முன் வந்தான்.

"தீரா! நீ பேசாமல் உட்கார்ந்து நான் மரத்தை வெட்டுவதைப் பார்த்துக் கொண்டிரு. இப்படியே கொஞ்ச நாட்கள் பார்த்துக் கொண்டிருந்தால் உனக்குத் தானகவே விறகு வெட்டத் தெரிந்து விடும்!" என்ருன் வீரன். ஆனல் தீரன் கேட்டால்தானே? வீரன் மரத்தை வெட்டத் தொடங்கியதும் தீரனும் பல மடங்கு உற்சாகத்துடன் மரத்தை வெட்டத் தொடங்கினன். வீரனுக்கு வேலையே ஓடவில்லை. தீரனுக்குக் கோடாலி பிடிக்கத் தெரியாதே? எங்கேயாவது காலில் கையில் கோடாலியைப் போட்டுக் கொண்டு காயப் படுத்திக்கொண்டு விட்டால் என்ன செய்வது என்று பலவிதமாக அவனுக்கு யோசனைகள் ஓடின. ஒவ்வொரு தடவை தீரன் கோடாலியை ஓங்கும் பொழுதும் அவன் மனம் பயத்தால் நடு நடுங்கியது.

வீரனின் பயத்தைக் கண்டுதானே என்னவோ, சூரியன் அவன்மேல் பரிதாபப்பட்டு வெகு வேகமாகப் பவனி வந்தான். உச்சிவேளை வந்ததும் வீரன் தன் மகனை அழைத்துக் கொண்டு பக்கத்திலுள்ள சிற்ருேடைக்குச் சாப்பிடுவதற்காகச் சென்ருன்.

இருவரும் உட்கார்ந்து கொண்டு சோற்று மூட்டையை அவிழ்த்துச் சாப்பிடத் தொடங்கினர்கள். சாப்பிட்டு முடிந்ததும் வீரன் தீரனைப்

பார்த்து, "தம்பி! இன்று நீ ரொம்பவும் வேலை செய்து விட்டாய். கொஞ்சம் களைப்பாறிக் கொண்டிரு. நான் மரத்தை வெட்டுகிறேன்" என்று சொல்லி மரம் வெட்டச் சென்றான்.

வீரன் சொன்னதுபோல் தீரனால் வெகு நேரம் வரை பேசாமல் உட்கார்ந்திருக்கமுடியவில்லை. தன் தகப்பனிடம் சென்று, "அப்பா! நீங்கள் விறகை வெட்டிக் கொண்டிருங்கள். அதற்குள் இந்தக் காட்டை நான் ஒருதரம் சுற்றிப் பார்த்து விட்டு வந்து விடுகிறேன்" என்றான்.



அதைக் கேட்டதும் வீரனுக்குக் கோபம் பொத்துக்கொண்டு வந்தது. "பார்த்தாயா? இதனால்தான் உன்னை அழைத்துக்கொண்டு வர மாட்டேன் என்று சொன்னேன். இப்படிக்காட்டில் கண்டபடி சுற்றப் போனால் ஏதாவது இங்கு நேர்ந்து விட்டால் என்ன செய்வது?" என்று கேட்டான். அதற்குத் தீரன் பதிலே சொல்லவில்லை.

வீரன் மரத்தை வெட்டுவதில் மூழ்ந்ததும் தீரன் தன் கோடாலியைத் தோளில் போட்டுக் கொண்டு மெதுவாக அங்கிருந்து நழுவினான்.

அடர்ந்த மரங்களும், வாசனை மிகுந்த மலர்களும், இன்னிசை பாடும் குயில்களும் அவன் மனதைப் பெரிதும் கவர்ந்தன. மான்கள் அவனைக் கண்டு மருண்டு ஓடின. அந்த அதிசயங்களையெல்லாம் பார்த்தவாறே தீரன் வெகு தூரம் போய் விட்டான். அவனுக்குப் பொழுதுபோனதே தெரியவில்லை. அவனுக்கு அந்தக் காட்டிலுள்ள அதிசயம் அனைத்தையும் ஒரே நாளில் பார்த்து முடித்து விட வேண்டும் என்று ஆவல். இளங்கன்று பயம் அறியாது என்பது எவ்வளவு உண்மை!

ஆகவே, அவன் சிறிதும் சோம்பலின்றி நடந்து கொண்டேயிருந்தான். வழியில் மிகப் பெரிய ஆலமரம் ஒன்று அவனை மேலே போகவொட்டாமல் தடுத்தது. கண்ணுக் கெட்டிய தூரம் வரை படர்ந்திருக்கும் அந்த மரத்தைக் கண்டு அவன் ஆச்சர்யத்தால் ஸ்தம்பித்து நின்று விட்டான். அந்த மரத்திலிருந்து எண்ணற்ற ஆலம் விழுதுகள் தொங்கிக் கொண்டிருந்தன. அவற்றில் ஒன்றைப் பிடித்துக் கொண்டு சிறிது நேரம் ஊஞ்சலாடினான். ஊஞ்சல் ஆடும் பொழுதுதான் அவனுக்கு என்ன ஆனந்தம்! என்ன மகிழ்ச்சி!

அதே சமயம் எங்கிருந்தோ ஒரு ஈனக் குரல் கேட்டது. ஊஞ்சலாடுவதை நிறுத்தி விட்டுத் தீரன் குரல் வந்த திசையைத் திரும்பிப் பார்த்தான்; ஆனால் அந்தக் குரல் எங்கிருந்து வருகிறது என்பது அவனுக்குச் சரியாகத் தெரியவில்லை. அதை அறியும் பொருட்டு அவன் குரல் வரும் திசையை நோக்கி நடந்தான்.

கொஞ்ச தூரம் சென்றதும் ஒரு பள்ளம் இருந்தது. அதிலிருந்துதான் அந்தக் குரல் வருகிறது என்பதை அறிந்த தீரன் வியப்பு மேலிட அந்தப் பள்ளத்தை நெருங்கினான். "என்னைக் காப்பாற்று! என்னைக் காப்பாற்று! உனக்குக் கோடிப் புண்ணியமுண்டு!" என்று கெஞ்சியது அந்தக் குரல். அந்தப் பரிதாப மொழிகள் தீரனின் நெஞ்சத்தை இளகச் செய்து விட்டன.

தீரன் பள்ளத்தை நெருங்கியதும் அந்தப் பள்ளத்திலிருந்து ஒருவிதப் புகை எழும்புவதைக் கண்டான். கிட்ட நெருங்கியதும் அந்தப் புகையின் நடுவே செந்நாயின் சிவந்த நாக்கைப் போல அக்கினி ஜ்வாலை ஒன்று எழும்பி வருவது தெரிந்தது.

'அதற்குள் யாராவது விழுந்து விட்டார்களா, என்ன?' என்று எண்ணி எட்டிப் பார்த்தான். அந்த அக்கினி ஜ்வாலை அரக்கனின் நாக்காக மாறித்

தீரனை அப்படியே 'லபக்' என்று சுற்றி வளைத்துப் பற்றிக் கொண்டது.

ஐயோ! என்ன கொடுமை! அந்தப் பயங்கர நாக்கு பள்ளத்தின் அருகில் வந்த அவனை அப்படி எதற்காகப் பற்றிக் கொள்ள வேண்டும்? தீரன் கதி கலங்கிப் போய் 'ஹோ'வென்று கதறி விட்டான்.

அதைக் கண்ட அந்தப் பயங்கர நாக்கு, "ஏ மூட மனிதா! நான் பல நாட்களாகப் பட்டினி கிடக்கிறேன். எனக்குப் பசி பிராணன் போகிறது. உன்னை விழுங்கப் போகிறேன்" என்று கூறியது. அதைக் கேட்டதும் தீரனுக்குத் தலை 'கிர்' என்றுசுற்றியது.

உடம்பு பயத்தால் வெடவெடத்தது. அவனது சப்த நாடிகளும் நடு நடுங்கின. செய்வதறியாது பிரமித்து நின்றான். அப்பொழுது தான் அவனுக்கு வீரனின் புத்திமதி ஞாபகத்துக்கு வந்தது. 'தந்தையின் வார்த்தையைத் தட்டிக் கழித்து விட்டு வந்த குற்றம் தான், இப்படி நான் ஆபத்துக்குள்ளாக நேரிடுகிறதுபோலும்!' என்று புலம்பினான். அவனுக்குத் தப்ப வழி ஒன்றும் தெரியவில்லை. அந்தப் பயங்கர நாக்கு அவனை விழுங்குவதற்காகச் சுருட்டி மடக்கியது. அடுத்த கணம் தீரன் தன் நினைவு இழந்து தரையில் சாய்ந்து விட்டான். (தொடரும்).

எத்தனை பழங்கள்?

28 காவல்கள் உள்ள தோட்டம் ஒன்றில் கிருஷ்ணன் பழம் பறிக்கச் சென்றான். ஒவ்வொரு காவலாளியும் பறித்து வரும் பழங்களில் தனக்குப் பாதி வேண்டும் என்றனர். கிருஷ்ணன் அதற்குச் சம்மதித்தான். ஆனால் அவர்கள் தனக்கு ஒரு பழம் மட்டும் திருப்பித் தந்துவிடவேண்டும் என்றான். அவர்களும் சம்மதித்தனர். கிருஷ்ணன் கெட்டிக்காரப் பையன் ஆதலால் பறித்த பழங்கள் ஒன்றுகூடக் குறையாமல் வெளியே எடுத்து வந்து விட்டான். அப்படியானால் அவன் பறித்த பழங்கள் எவ்வளவு?

புத்திசாலி முத்து

முத்து மிகவும் புத்திசாலி. பளிச்சுப் பளிச்சென்று எதற்கெடுத்தாலும் மிகவும் சாதுர்யமாகப் பேசுவான்.

ஒரு நாள்; மார்கழி மாதக் குளிர் வெட வெட என்று நடுக்கியது.

"அப்பப்பா, குளிர் பல்லைக் கிட்டுகிறது. முத்து, பனியிலே அலையாதே!" என்றார் அவனுடைய தாத்தா.

"தாத்தா, ஏன் பொய் சொல்லுகிறாய்?" என்று கேட்டான் கிட்டு.

"யாரடா பொய் சொல்லுகிறது!" என்று வியப்புடன் கேட்டார் தாத்தா.

"தாத்தா! உன் பல்தான் அலமாரியில் இருக்கிறதே!" என்றான் முத்து.

தாத்தாவுக்கு அப்பொழுதுதான் தனக்குப் பல் இல்லை என்னும் விஷயம் நினைவுக்கு வந்தது.

அப்பா "முத்து, எதிர் வீட்டுக்குப் போய்க் கணேசன் இருக்கிறாரா பார்த்து விட்டு வா!" என்றார்.

முத்து உடனே "அவர் வீட்டில் தான் இருக்கிறார், அப்பா!" என்றான் கொஞ்சங்கூடத் தயக்கமில்லாமல்.

அப்பாவுக்குக் கோபம் வந்துவிட்டது. "சோம்பேறி! போய்ப் பார்க்காமல் சொல்லாதே. அவர் இருக்கிறார் என்பது உனக்கு எப்படித் தெரியும்?"

"அப்பா! அவர் பிள்ளை இரட்டைவால் ராமு விளையாடப் போக வேண்டிய நேரத்தில் சமர்த்தாகப் பாடம் படிப்பதிலிருந்தே தெரியவில்லையா?" என்று 'சட்'டென்று கேட்டான்.

அப்பாவினால் அதை ஒப்புக் கொள்ளாமல் இருக்க முடியவில்லை; வந்த சிரிப்பையும் அடக்க முடியவில்லை.

தினந்தோறும் அம்மா கதை சொன்னால்தான் முத்து தூங்குவான்.

அன்று முத்துவுக்கு வெகு நேரம் தூக்கம் வரவில்லை. கதை சொல்லி அம்மா அலுத்துப் போய்விட்டாள்.


"முத்து, எனக்கு உள்ளே காரியம் இருக்கிறது. விளக்கை எடுத்துக் கொண்டு போகட்டுமா?" என்றாள்.

"இருட்டாய்ப் போய் விடுமே, அம்மா! எனக்குப் பயமாயிருக்குமே!"

"பயப்படாதே. அதோ சுவாமி படம் இருக்கிறது, அவர் உனக்குத் துணையிருப்பார்!" என்றாள் அம்மா.

"வேண்டாம், அம்மா! நீ வேண்டுமானால் சுவாமி படத்தைக் கொண்டு போ. விளக்கு இங்கேயே இருக்கட்டும்!" என்றான் முத்து.

அதைக் கேட்டபின் அம்மா சிரிக்காமல் என்ன செய்வாள்? — விஜயம்.


கல்கி
பாப்பா மலர்
திருடிச் செல்லும் முட்டை உடையாமல் இருக்க வேண்டும் அல்லவா? அதற்காக ஒரு எலி மல்லாந்து படுத்து அதைக் கெட்டியாகப் பிடித்துக் கொள்ளும். மற்றொரு எலி அதன் வாலைப் பிடித்து இழுத்துக் கொண்டு போகும். இது அதிசயமாயில்லையா?
நீதான் பெரிய துப்பறியும் புலி ஆச்சே' மேலே உள்ள படத்தில் என்னென்ன மிருகங்கள் இருக்கின்றன என்பதைக் கண்டு பிடியேன், பார்ப்போம்!
நண்டுக்கு நன்றி!
௧
௨
௩
சுவரில் ஆணி அடிக்கும்பொழுது சுவர் பெயர்ந்து விடுகிறதல்லவா? அது பெயராமல் இருப்பதற்கு ஒரு உபாயம் இருக்கிறது. வெந்நீரில் ஆணியைச் சூடாக்கி அடித்தால் பெயராது.

அகில உலகச் சிறுகதைப் போட்டி

★ ★ ★

- இருபத்தொரு தேசங்களைச் சேர்ந்த பிரசித்தமான பத்திரிகைகள் ஒத்துழைத்து அகில உலகச் சிறு கதைப் போட்டி ஒன்று நடத்துகிறார்கள்.
- இந்த முயற்சியை ஆரம்பித்த பத்திரிகை நியூயார்க் ஹெரால்டு டிரிப்யூன்.
- இந்தியா தேசத்தில் மேற்படி சிறு கதைப் போட்டியை நடத்தும் பொறுப்பைப் புது டெல்லி "ஹிந்துஸ்தான் டைம்ஸ்" பத்திரிகை ஏற்றுக் கொண்டிருக்கிறது.
- இந்தியாவின் முக்கியமான பதினொரு பாஷைகளிலாவது ஆங்கிலத்திலாவது மேற்படி போட்டிக்குச் சிறுகதை எழுதலாம்.
- இந்தியாவின் முக்கிய பாஷைகளில் தமிழ் மொழி ஒன்று என்பதைச் சொல்ல வேண்டியதில்லை. ஆகையால் தமிழ் எழுத்தாளர்கள் இந்த அகில உலகச் சிறு கதைப் போட்டியில் கலந்துகொள்ளலாம்.
- இந்தியா தேசத்தில் எழுதப்படும் கதைகளில் சிறந்த எட்டு கதைகளுக்கு "ஹிந்துஸ்தான் டைம்ஸ்" பத்திரிகை மொத்தம் ரூ. 5,250 பரிசு அளிக்கிறது. இதில் முதல் பரிசு ரூ. 1,500.
- அகில உலகச் சிறுகதைப் போட்டிக்கு ஒவ்வொரு நாட்டிலிருந்தும் இரண்டு அல்லது மூன்று கதைகள் பொறுக்கி அனுப்பப்படும். இப்படி மொத்தம் சேரும் 52 கதைகளில் எல்லாவற்றிலும் சிறந்த கதைக்கு "நியூயார்க் ஹெரால்டு டிரிப்யூன்" பத்திரிகை ஐயாயிரம் டாலர் (ரூ. 22,250) பரிசு அளிக்கும்.
- மேற்படி அகில உலகச் சிறு கதைப் போட்டிக்குத் தமிழ் நாட்டிலிருந்து கதைகளைச் சேகரிக்கும் பொறுப்பைக் "கல்கி" பத்திரிகை ஏற்றுக் கொண்டிருக்கிறது.
- சிறு கதைகள் சுமார் மூவாயிரம் வார்த்தைகள் அடங்கியதாக இருப்பது நலம். நாலாயிரம் வார்த்தைகளுக்கு மேலே போகக் கூடாது.
- 1950-ம் வருஷம் செப்டம்பர் மாதம் 30-ந் தேதிக்குள் மேற்படி சிறுகதைப் போட்டிக்குக் கதைகள் அனுப்பப்பட வேண்டும்.
- போட்டிக்கு அனுப்பும் கதைகள் சொந்தக் கற்பனையென்று கதை ஆசிரியரின் உறுதிமொழி சேர்க்கப்படவேண்டும்.
- கதையின் விஷயம் எதைப்பற்றி வேண்டுமானாலும் இருக்கலாம். காதல், குரோதம், நன்றி, வாஞ்சை, தேசபக்தி, தியாகம், லோபம், துரோகம், கலியாணம், மரணம்,— ஆகிய எந்த விஷயமானாலும் சரி; உணர்ச்சிப்பெருக்கு, அமைப்புத்திறன், வாழ்க்கைப் பண்பு, நடையின் சிறப்பு, கதையின் ஓட்டம், — ஆகிய சிறுகதையின் அம்சங்களே முக்கியமாகக் கருதப்படும்.
- ஒரே ஆசிரியர் போட்டிக்கு இரண்டு கதைகள் அனுப்பலாம்.
- தமிழ்க் கதைகளை அனுப்ப வேண்டிய விலாசம்:—ஆசிரியர், "கல்கி", கீழ்ப்பாக்கம், சென்னை.
- தயவு செய்து உறையின் மேல் "அகில உலகச் சிறுகதைப் போட்டி" என்று குறிப்பிட வேண்டுகிறோம்.
- பரிசுக்குரிய கதைகளைத் தேர்ந்தெடுப்பதற்கு "ஹிந்துஸ்தான் டைம்ஸ்" ஆசிரியர் ஸ்ரீ தேவதாஸ் காந்தி தகுந்த நீதிபதிகளை நியமனம் செய்வார்.
- மேற்படி போட்டிக்காக வரும் தமிழ்க் கதைகளை ஸ்ரீ தேவதாஸ் காந்தி நியமிக்கும் நீதிபதிகள் பரிசீலனை செய்து அவற்றில் சிறந்த நாலு கதைகளைத் தேர்ந்தெடுத்து மத்திய பரிசீலனைக் கமிட்டிக்கு அனுப்பி வைப்பார்கள். இந்த நாலு கதைகளுக்கும் "கல்கி" நிர்வாகிகள் ஒவ்வொன்றுக்கு ரூ. 250 வீதம் பரிசு அளிப்பார்கள்.
- அகில இந்தியப் போட்டிக்காகப் பஞ்சாயத்தார் தேர்ந்தெடுக்கும் நாலு கதைகளையும் அவற்றின் ஆசிரியர்கள் தாங்களேயோ, பிறரைக் கொண்டோ ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துத் தரவேண்டும்.
- பரிசுக்காகத் தெரிந்தெடுக்கப்படும் கதைகளைத் தவிர மற்றக் கதைகளில் பிரசுரிப்பதற்குத் தகுதியான கதைகள் "கல்கி"யில் பிரசுரிக்கப்படும். அப்படிப் பிரசுரிக்கப்படும் ஒவ்வொரு கதைக்கும் ரூ. 50 வீதம் சன்மானம் அளிக்கப்படும்.
- பரிசு பெறாத, பிரசுரிக்கப்படாத கதைகளைத் திரும்பிப்பெற விரும்புவோர் கையெழுத்துப் பிரதியுடன் போதிய தபால் தலைகள் அனுப்பவேண்டும். திருப்பி அனுப்புவதாக உத்தரவாதம் செய்ய முடியாது.
- இந்தப் போட்டி சம்பந்தமாக ஏற்படும் சந்தேகங்களில் "ஹிந்துஸ்தான் டைம்ஸ்" ஆசிரியர் ஸ்ரீ தேவதாஸ் காந்தி கூறும் தீர்ப்பே முடிவானது.



பிரதுஷாவின் காதல்

ஆசிரியர் - அசர்சன்

மொழிபெயர்ப்பு - ரா. வீ

11. பனி பெய்தது!

மயூர மாளிகை என்னும் பெயர்பெற்ற தன் மாளிகையிலே தியூனஸ் ஏதோ தீவிரமான சிந்தனையில் ஆழ்ந்திருந்தான். பாதரட்சையின் சத்தம் 'பட், பட்' என்று ஒலிக்கப் பரூன் அவனுடைய அறைக்குள்ளே நுழைந்தான். தியூனஸ் தன்னைச் சரி செய்துகொண்டு நிமிர்ந்து உட்கார்ந்தான். பரூனைப் பார்த்த மாத்திரத்திலேயே, அவன் யுத்த களத்துக்குப் போகப் போகிறான் என்பதை அவன் புரிந்துகொண்டு விட்டான். பரூன் அவன் அருகில் வந்து நின்று கொண்டு, "தியூனஸ்! நீக்ரோவர்களின் சுல்தான் ஷம்லார்க் எகிப்து நாட்டின் மீது படையெடுத்து விட்டான். இந்த விஷயம் உனக்குத் தெரியும் அல்லவா?" என்று கேட்டான்.

தியூனஸ் மிகவும் தயங்கியவாறே, "எதற்காகவாம்?" என்று கேட்டாள்.

பரூன் அதற்கு என்ன பதில் சொல்லுவான் என்பதையும் அவள் அறிந்திருந்தாள். ஆனால் பரூன் அவள் எதிர்பார்த்த அந்தப் பதிலை அளிக்கவில்லை. அதற்கு நேர் மாருக, "அந்த விஷயம் எனக்குத் தெரியாது!" என்று சொன்னான்.

தியூனஸ் மிகவும் மெதுவான குரலில், "ஆனால் எனக்குத் தெரியும்!" என்றாள்.

அவளுடைய அந்த வார்த்தையைக் கேட்ட பரூன் முதலில் திடுக்குற்றான். பிறகு தன்னை மெதுவாகச் சுதாரித்துக் கொண்டு, இலேசாக இளநகை புரிந்த வண்ணம், "உனக்குத் தெரியுமா? உனக்கு என்ன தெரியும்?" என்று கேட்டான்.

"அவன் என்னைத் தன்னிடம் ஒப்படைத்துவிட வேண்டும் என்று கேட்கிறான். என்னை அவன் கையில் ஒப்படைத்து விட்டால் அவனுடைய கோபம் தணிந்து விடும்; இருந்த இடம் தெரியாமல் பறந்து விடும்" என்றாள் தியூனஸ்.

"ஆனால் உனக்கு ஒன்று தெரியுமா? உன்னை ஒப்படைத்து விட்டால் மட்டும் அவனுடைய கோபம் தணிந்து விடாது. உன்னுடைய உதிரம் பூமியில் பெருக்கெடுத்து ஓடுவதைக் கண்ணுற்ற பின் தான் அவன் கோபத்தை மறந்து களிப்புறுவான்!" என்றான் பரூன்.

"அதனால் என்ன? அப்படியேதான் இருக்கட்டுமே! என் ஒருத்தியின் உதிரம் பெருகினால் எகிப்து நாட்டின் எண்ணற்ற மக்கள் எமன் வாயில் விழாமல் தப்புவார்கள் அல்லவா? ஆகவே, தாங்கள் என்னைப்பற்றிச் சிறிதும் கவலைப்படாதீர்கள்! தேசத்துக்கெதிரே நான் ஒரு பொருளே அல்ல. நான் ஒருத்தி சாவதனால், நிகழப்போகும் பயங்கரமான பெரும்

போர் நிற்கும் என்றால், நான் மிகவும் மகிழ்ச்சியுடன் அந்த மரணத்தை வரவேற்கத் தயாராயிருக்கிறேன். அம்மாதிரி மரணத்தைக் காட்டிலும் சிறந்த மரணம் இவ்வுலகில் வேறு ஒன்றுமே இல்லை. தேசத்தின் பொருட்டு இவ்வாறு மரணம் எய்தக் கொடுத்து வைத்திருக்க வேண்டாமா?—அது மட்டும் அல்ல; நான் கேவலம் ஒரு அடிமைப் பெண்தானே? என் உயிரைக் காப்பதற்காகத் தேசத்தின் ஆயிரக்கணக்கான வீரர்கள் உயிரை இழக்க வேண்டுமா? வேண்டாம், வேண்டாம்! என்னைச் சுல்தானிடம் இந்தக் கணமே ஒப்படைத்து விடுங்கள்!" என்று சொன்னாள் நியூனஸ்.

இதைச் சொல்லும்பொழுது அவளுடைய அகன்ற நீண்ட அழகிய விழிகளில் முத்துப்போல் கண்ணீர் கோத்து நின்றது. அதைக் கண்ணீர் என்று சொல்லுவதா? கூடாது, கூடாது! அதைக் கண்ணீர் என்று சொல்லுவது சுத்தத் தவறு. அதை அவளுடைய உள்ளத்திலே கிளர்ச்சி கொண்டெழுந்த உணர்ச்சித் தீயின் உருகிய உருவம் என்று சொல்லுவதுதான் சாலவும் பொருந்தும். பருனும் அதை நன்கு புரிந்து கொண்டு விட்டான். அவன் நியூனஸின் தோள் மீது மிகவும் அன்புடனும் சௌஜன்யத்துடனும் கை வைத்து மெதுவாகத் தடவிக் கொடுத்தான். பிறகு அவனும் உணர்ச்சி வசப்பட்டுத் தழ தழுத்துப்போன தன் குரலில், "நியூனஸ், நீ பருனின் பட்டமகிஷி. நீ இப்பொழுது முன்போல் அடிமைப் பெண் இல்லை. ஆகவே உன்னுடைய கௌரவம்தான் என் நாட்டின் கௌரவம். உனக்கு உண்டாகும் பெருமைதான் என் ஆட்சி முறைக்கும் பெருமை அளிக்கும். உன் கௌரவத்துக்கு ஹானி ஏற்பட்டால் என் நாட்டுக்கும் என் ஆட்சி முறைக்கும் கௌரவக் குறைவு ஏற்படுவதாகவேதான் நான் பாவிப்பேன். ஆகவே, உன் கௌரவத்தை ரக்ஷிப்பது என் கடமை. அது மட்டும் அல்ல; உன் கௌரவத்தை ரக்ஷித்தால்தான் என் கௌரவத்தையும் என் நாட்டின் கௌரவத்தையும் ரக்ஷித்ததாக ஆகும். ஆகவே, நீ இம்மாதிரி யெல்லாம் பேசக்கூடாது" என்றான் பருன்.



அதைச் சொல்லியவாறே அவன் நியூனஸின் தோள்களுக்குக் கீழே சரிந்து விழுந்திருந்த ஆடையைச் சரி செய்து அவளுடைய தோள்கள் மீது போட்டான். பிறகு அவன், இயல்பாகவே எழில் மிகுந்த அவளுடைய முகத்தை—அரசாங்க ஆடைகளும் ஆபரணங்களும் அழகுக்கு அழகு செய்து அழகுத் தெய்வமாகவே ஆக்கி விட்டிருந்த அவளுடைய அந்த அழகிய முகத்தை—தன் கைகளால் பிடித்து நேராக நிமிர்த்தி, தன் பேராசை பிடித்த விழிகளால் அப்படியே அள்ளிப் பருகுபவனைப் போலப் பார்க்கலானான். அதற்குப் பிறகு நியூனஸினுடைய தோள்மீது தன் கைகளைப் போட்டவாறு, "நியூனஸ், நீ என்னுடைய மனைவி. நான் உன்னைக் கைபிடித்துக் கல்யாணம் செய்து கொண்டிருக்கிறேன். நீ என்னுடைய பட்டத்து மகிஷி. நான் என்னுடைய இந்தக் கைகளாலேயே உன் தலையில் பட்டத்து மகுடத்தைச் சூட்டியிருக்கிறேன். உனக்கு என் மீது அன்பு இருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி, உலகம் என்னையும் உன்னையும் கணவன்-மனைவி என்றுதான் சொல்லும். உலகம் மட்டும் என்ன? தெய்வச் சாட்சியாகக்கூட நீயும் நானும் கைபிடித்த கணவன்-மனைவிதான். ஆகவே இதை யாரும் மறுக்கவும் முடியாது; மாற்றவும் முடியாது; அழிக்கவும் முடியாது. உன் இதயத்தின் ஆழத்திலே உள்ள அன்பு எனக்குச் சொந்தமானது. அதை என்னுடையது என்று பாத்தியதை கொண்டாட எனக்கு உரிமை உண்டு. அதை எனக்கு இல்லையென்று சொல்லவோ, எனக்கு இல்லாமலே அடிக்கவோ உன்னால் முடியாது: முடியவே முடியாது. இன்றைக்கு வேண்டுமானால் நீ இல்லையென்று சொல்லிக் கொண்டிருக்கலாம். ஆனால் என்றைக்காவது ஒரு நாள் நீ உன் உள்ளத்து அன்பை என்னுடன் பகிர்ந்து கொண்டு தான் ஆக வேண்டும். நியூனஸ்! நான் உன்னை உயிருக்கு உயிராக நேசிக்கிறேன்; காதலிக்கிறேன். உன் கண்களில் துயர நீர் பெருக்கெடுத்து ஓடுவதைக்காண எனக்கு மனம் சகிக்கவில்லை. உன் கண்களிலிருந்து ஒரு சொட்டு நீர் வந்தால்கூட எனக்கு என் உயிரே போய் விடும் போலத் தோன்றுகிறது. நானும் இவ்வளவு



நாட்களாக, 'இன்று இல்லாவிட்டால் என்றைக்காவது ஒரு நாள் நீயும் என்னைக் காதலிக்கக் கற்றுக் கொண்டு விடுவாய். நான் கொண்டுள்ள அன்பு உன் உள்ளத்தில் வேலை செய்து உன்னை என்பால் அன்பு பூணும்படி செய்துவிடும். உன் இதயத்தில் ஒரு நாள் இல்லாவிட்டால் ஒரு நாள் கட்டாயம் எனக்கு இடம் கிடைத்தே தீரும்' என்று நம்பி எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன். ஆனால் இன்று வரை உன் உள்ளம் கரையவில்லை. ஆகவே, உன் உள்ளத்தில் எனக்கு இன்னும் இடம் கிடைத்தபாடில்லை. இருந்தாலும் என் நம்பிக்கை கடுகளவுகூடக் குறையவில்லை. ஆனால் வானத்துத் தெய்வங்களின் விருப்பம் என்னவோ? அவற்றின் விருப்பத்தை அவற்றைத் தவிர வேறு யார் அறிவார்கள்? நான் போர்க்களத்துக்குப் போய்க் கொண்டிருக்கிறேன். அங்கிருந்து உயிருடன் திரும்பி வருவேனோ அல்லது அங்கேயே உயிர் துறந்து விடுவேனோ, சொல்வதற்கில்லை! அதனால் போர்க்களத்துக்குப் புறப்படுவதற்கு முன்பாக, உன் வாயால் ஒரே ஒரு வார்த்தை கேட்டு விட்டுப் போக விரும்புகிறேன். என் விருப்பத்தைத் தயவு செய்து நீ நிறைவேற்றி வைப்பாயா?" என்று கேட்டான்.

பருனுடைய இவ்வளவு நீண்ட பேச்சுக்கும் தியூனஸ் கொடுத்த பதில் ஒரே ஒரு சின்ன வார்த்தையில் அடங்கி விட்டது. "என்ன?" என்ற கேள்வியைத் தவிர அவளுடைய வாயிலிருந்து வேறு எந்தச் சொல்லும் எழவில்லை.

ஆயினும் பருன் நம்பிக்கை இழக்கவில்லை. "நான் உன்னைக் காதலிக்கிறேன் என்று உன் வாயால் ஒரு வார்த்தை சொல். அதுவே போதும். அந்த ஒரு வார்த்தை போர்க்களத்தில் என் தோள்களுக்கு வலி ஊட்டும். என் மனதுக்குச் சக்தி அளிக்கும். உன் அந்த ஒரு வார்த்தையின் பலத்தைக் கொண்டு நான் போர்க்களத்தில் மிக மிக உற்சாகத்துடன் போர் புரிவேன். எப்பேர்ப்பட்ட வீரனும் என்னை எதிர்த்து நிற்க முடியாது. நான் வீரப் போர் புரிந்து எதிரிகளைப் புறமுதுகிட்டு ஓடச்செய்வேன். என் எதிரே நிற்க எந்தப்பயலுக்கும் துணிவு உண்டாகாது. தயவு செய்து அந்த ஒரே ஒரு வார்த்தையை உன் வாயால் சொல்ல மாட்டாயா?" என்று கெஞ்சமாட்டாக் குறையாகக் கேட்டான்.

தியூனஸின் வாயிலிருந்து ஒரு விதமான பதிலும் எழவில்லை. அவளால் பதில் சொல்லவும் முடியவில்லை. அவள் பதில் சொல்ல விரும்பவும் இல்லை. எப்படியோ பொழுது ஓடிப்போய்விட வேண்டும். தர்மசங்கடமான இந்த நிலையிலிருந்து, தான் தப்பிவிட வேண்டும் என்று அவள் எல்லாம் வல்ல இறைவனை வேண்டிக் கொண்டிருந்தாள். பருன் மணமான பின்பு அவளிடம் அவளுடைய மனம் கோணும்படியாக நடந்து கொண்டதேயில்லை. அவளுடைய மனம் புண்படும்படியான வார்த்தைகள் சொன்னதேயில்லை. குறைகூறுவதற்கான சந்தர்ப்பம் அவளுக்கு அவன் வைத்ததில்லை. பருன் அவளிடம் காட்டிய அன்பையும் ஆதரவையும் யாரும் கண்டும் இருக்க முடியாது; கேட்டும் இருக்க முடியாது. உலகத்திலே கணவனாய்ப் பிறந்த எவனும் தன் மனைவியிடம் பருன் தியூனஸிடம் காட்டிய அளவு அன்போ ஆதரவோ காட்டியிருக்க மாட்டான் என்பது மட்டும் சர்வ நிச்சயம். தியூனஸ் தன் மனதில் அவனுடைய அந்த அன்பையும் ஆதரவையும் எண்ணிப் பார்த்தாள். ஆராயாமல் ஏதாவது ஒன்றுக் கொன்று விபரீதமாக வார்த்தைகளைக் கொட்டி அவனுடைய மனதைப் புண்படுத்துவது மிகவும் தவறு என்பது அவளுக்கு நன்றாகத் தெரிந்திருந்தது. ஆகவே, அவள் தன்னால் கூடுமான வரை அவனுக்கு நன்மை பயப்பதான, மனதுக்கு மகிழ்ச்சியை தருவதான காரியத்தையே செய்ய வேண்டும் என்றும் விரும்பினாள்.

ஆனால் அப்படிச் செய்வதற்கு அவன் மிகவும் கையால் ஆகாதவனாக அல்லவா இருந்தான்! அவனுக்குத் தன் கைகளையும் கால்களையும் இறுகக் கட்டிப் போட்டது போலிருந்தது. பருனுடன் அன்பாக ஒரு வார்த்தை பேசினால்கூட, அது ரேம்பலுக்குத் துரோகம் இழைப்பதாகத்தான் ஆகும் என்பது அவனுடைய அழுத்தமான அபிப்பிராயம். ஆகையினால் அவன் அந்தக் காரியத்தை மட்டும் மூவுலகத்திலும் முக்காலத்திலும் செய்யத் தயாராயில்லை. என்ன வந்தாலும் இந்த விஷயத்திலிருந்து பிறழக்கூடாது என்று அவன் முடிவு கட்டிவிட்டான். ஆகவே, அவன் வாய் திறந்து ஒரு வார்த்தைகூடப் பருனுக்குச் சொல்லவில்லை. 'மௌனம் சர்வார்த்த சாதனம்' என்பதற் கேற்ப மௌனத்தைக் கடைப் பிடித்தான். ஆனால் அவனுடைய முகம் போயிருந்த போக்கும் கண்களில் முட்டி நின்ற நீரும் 'குட்டை' உடைத்து விஷயம் அனைத்தையும் அப்பட்டமாக அறிவித்து விட்டன. அதைக் கண்ணுற்ற பருனின் முகம் குறுகிக் கடுகாக ஆகிவிட்டது. அவனுடைய தன்மானம் அனைத்தும் தவிடு பொடியாகி விட்டது. அவனுடைய உள்ளத்திலே உருவாகி 'கருகரு' வென்று வளர்ந்திருந்த நம்பிக்கைப் பயிர்மீது கல்ல பனி பெய்து நாசம் செய்துவிட்டது.

அவன் என்ன செய்வான், பாவம்! இதயத்தின் ஆழத்திலே இலை மறைவாய் காய் மறைவாயிருந்த நம்பிக்கை மொட்டு மலராமலே கருகிவிட்டால் யாருக்குத்தான் வருத்தமாயிராது! கண்களில் 'கரகர' வென்று நீர் பெருகி இமையளவு ஏறிவிட்டது. அடுத்த நிமிஷம் அது அவனுடைய கண்களை மறைத்தது. அவன் தொங்கிக் கொண்டிருந்த தன் துணியின் தலைப்பை எடுத்துக் கண்களைத் துடைத்துக் கொண்டான். அந்தச் சமயம் அங்கே யாராவது ஒரு சித்திரக்காரன் இருந்து பருனின் மனதைப் பார்த்துப் படம் பிடிக்கும் சக்தியும் பெற்றிருந்தால், துரதிர்ஷ்டத்துக்கு எடுத்துக்காட்டாகப் பருனின் இதயத்தையே படம் பிடித்துக் காட்டியிருப்பான். அதற்கப்புறம் எந்தச் சித்திரக்காரனுக்குமே உணர்ச்சியின் சிகரமாக விளங்கும் படம் பிடித்துக் காட்டுவதற்குக் கட்டமே நல்லதாகக் கிடைத்திருக்காது.

பருன் தன்னைக் கன கடுமையாகக் கோபித்துக் கொள்ளவேண்டும். தன்மீது எரிந்து விழவேண்டும். தனக்குக் கடுந்தண்டனை அளிக்க வேண்டும். தன்னுடைய மிருக பலத்தைக் காண்பித்துத் தன் கொட்டத்தை அடக்க வேண்டும் என்றெல்லாம் தியூனஸ் விரும்பினான். ஆனால் பருன் வாய் திறந்து அவனை ஒரு வார்த்தை கூடச் சொல்லவில்லை. எகிப்து நாட்டுச் சம்பிரதாயப்படி அவன் தியூனஸின் கையைத் தன் கையில் எடுத்து முத்தமிட்டுவிட்டு, வாய் திறந்து ஒன்றும் பேசாமல் அங்கிருந்து வெளியேறிவிட்டான். பருனுடைய அந்த தேவ பதவிக்கும் மிருக சுபாவத்துக்கும் நேர் முரண்பாடு உள்ளதான நல்லொழுக்கத்தையும், நயமான சுபாவத்தையும் கண்ணுற்ற தியூனஸ் மனம் பொருமினான். அவனுக்குத் தன் இதயமே வெடித்துச் சுக்கு நூறாகி விட்டது போலத் தோன்றியது. அப்படியே கட்டிலில் சாய்ந்து விசித்து விசித்து அழலானான். (தொடரும்)

★ ★ ★ ★ ★ ★ தமிழுக்கு யோகம் ★ ★ ★ ★ ★ ★



இனிமேல் தமிழுக்கு யோகந்தான். தமிழுக்காகவும் தமிழர் நலனுக்காகவும் இடைவிடாமல் தொண்டாற்றி வரும் சுவாமி சுத்தானந்த பாரதியார், இதுகாறும் தாம் தவமியற்றி வந்த புதுவை அரவிந்த ஆசிரமத்திலிருந்து வெளிப்பட்டு விட்டார். இருபத்திரண்டு ஆண்டுகள் மேற்படி ஆசிரமத்தில் மோனத் தவமிருந்த யோகியார் தற்சமயம் புதுவையிலுள்ள ஸ்ரீ சென்னியப்ப முதலியார் அவர்களின் பாரதி ஆலைக் கட்டிடத்தில் வீற்றிருக்கிறார்.

கடவுள், யோகம், கலை முதலிய விஷயங்கள் சம்பந்தமாகத்தான் சுவாமிகள் பேசுவார். மனித சமுதாயம் தெய்வ நிலைக்கு உயர வேண்டும் என விரும்பும் யோகி சுத்தானந்த பாரதியாரின் சேவையைத் தமிழகம் ஆவலோடு எதிர்பார்க்கிறது.

பாலும் பாவையும்

விந்தன்

5

'என்ன பயங்கரமான சோதனை!— பெண்மையை இழந்துவிட்ட அவளுக்காக நான் ஆண்மையை இழந்து விடுவதா? — முடியாது; முடியவே முடியாது!'—கனகலிங்கம்.

இன்றிரவு ஹோட்டலுக்குத் திரும்பும்போது கனகலிங்கம் கொஞ்சம் உற்சாகமாகவே திரும்பினான். காரணம் வேறொன்றுமில்லை; அன்று பஞ்சாங்கத்தில் அறுநூறு பிரதிகளும், தொடுகுறி சாஸ்திரத்தில் அறுபது பிரதிகளும் விற்றிருந்ததோடு, திருக்குறளிலும்கூட ஒரு பிரதி விற்றிருந்ததுதான்!

அவ்வளவு பெரிய திருவிழாவில் இந்தப் புத்தக விற்பனை அப்படியொன்றும் அதிகமில்லையென்றாலும், 'இவ்வளவாவது விற்றதே!' என்பதில் அவனுக்கு ஒரு திருப்தி இருந்தது. அந்தத் திருப்தியில் புத்தகக் கட்டைத் தூக்கி அநாயாசமாகத் தோளில் வைத்துக்கொண்டு, பை நிறையக் காசுகள் குலுங்க, அவன் பெருமிதத்தோடு நடந்து வந்துகொண்டிருந்தான்.

வழியில் அவனை நோக்கி "கூலி வேணுங்களா சாமி, கூலி?" என்று கேட்டான் ஒருவன்.

"எஜமானுக்குத்தான் கூலி வேண்டும்; கூலிக்குக் கூலி என்னத்துக்கு?" என்று சொல்லிக் கொண்டே அவனைப் பொருட்படுத்தாமல் சென்ற கனகலிங்கம், நாலு அடிகள் எடுத்து வைத்ததும் அகல்யாவை நினைத்துக் கொண்டு நின்றான்.

'ஒரு வேளை இன்று அவள் தன்னை எதிர்பார்த்து மாடி வராந்தாவில் நின்று கொண்டிருந்தாலும் நின்று கொண்டிருக்கலாம். அவளுக்கு எதிரில் தானே புத்தகக் கட்டைத் தூக்கிக் கொண்டு செல்வது அவ்வளவு நன்றாயிராதல்லவா? அதைவிட ஒரு கூலியுடன் செல்வது கொஞ்சம் கௌரவமாயிருக்குமல்லவா......?'

கனகலிங்கம் அந்தக் கூலியை நோக்கித் திரும்பினான். அவனுக்குச் சிரிப்பு வந்தது; சிரித்தான். வேறு யாரையும் பார்த்துச் சிரிக்கவில்லை; தன்னைத் தானே பார்த்துத் தான் சிரித்துக் கொண்டான்.

'நல்ல வேடிக்கை! இத்தனை நாட்களாக விரும்பாத போலிக் கௌரவத்தை இன்று தான் ஏன் விரும்ப வேண்டும்?— வேண்டாம்; வேண்டவே வேண்டாம். தனக்கென்று இருக்கும் கௌரவம் தனக்கு இருந்தால் போதும்......!'

கனகலிங்கம் மேலே நடந்தான்.

"உங்கள் ராஜாத்திக்கு ரோஜாப் பூ வாங்கிக் கொண்டு போகவில்லையா, ஐயா?" என்று அவனை நோக்கிச் சிரித்துக் கொண்டே கேட்டாள் ஒரு பூக்காரி.

"நான் ராஜாவும் இல்லை; எனக்கு ரோஜாப் பூ வைத்துக் கொள்ளும் ராஜாத்தியும் இல்லை!" என்று சொல்லிக் கொண்டே அவளைப் பொருட்படுத்தாமல் சென்ற கனகலிங்கம், நாலு அடிகள் எடுத்து வைத்ததும் அகல்யாவை நினைத்துக் கொண்டு நின்றான்.



'இன்று அவளுக்கு இரண்டு ரோஜாப்பூக்கள் வாங்கிக் கொண்டு போய்க் கொடுத்தால் என்ன? — அவற்றின் இதழ்களைப் போலவே அவளும் தன் அழகான இதழ்களை விரித்துச் சிரிப்பாளல்லவா......?'

கனகலிங்கம் அந்தப் பூக்காரியை நோக்கித் திரும்பினான்.

'இது என்ன, பைத்தியம்! யாருக்கு யார் பூ வாங்கிக் கொண்டு போய்க் கொடுப்பது? யாருக்காக யார் சிரிப்



பது? — வேண்டாம்; வேண்டவே வேண்டாம். நான் அந்த ஹோட்டலில் தங்கியிருக்கும் வரை தன்னால் இயன்ற உதவியை 'மனிதன் என்ற முறை'யில் அவனுக்குச் செய்தால் போதும் ......!'

கனகலிங்கம் மேலே நடந்தான்.

"ஓ, மச்சான்!... ஓ, மச்சான்!" என்ற குரல் எங்கிருந்தோ குழைந்து வந்து அவன் காதில் விழுந்தது. 'யாருடைய மச்சானை யார் இப்படி வருந்தி வருந்தி அழைக்கிறார்கள்?' என்று தனக்கு வேண்டாத கவலையை வேண்டுமென்றே வரவழைத்துக் கொண்டு அவன் கவனித்தான். அந்த அழைப்பு ஒரு டாக்கி இசைத் தட்டிலிருந்து வருகிறதென்றும், அந்த இசைத் தட்டை ரேடியோக்காரர்கள் ஒலி பரப்புகிறார்களென்றும், அந்த ரேடியோ ஒரு ஸலூனுக் குரியதென்றும் அவனுக்குத் தெரிய வந்தது.

'காலையில்தான் க்ஷவரமில்லை; இப்பொழுதாவது 'ஷேவிங்' செய்து கொண்டால் என்ன?' என்று தோன்றிற்று அவனுக்கு.

உடனே ஸலூனுக்குள் நுழைந்தான். புத்தகக் கட்டைக் கீழே இறக்கி வைத்துவிட்டு நாற்காலியில் உட்கார்ந்தான்.

'ஷேவிங்' செய்து முடிந்ததும் அவனுடைய தலையை வாரி விட்டுவிட்டு, "'ஸ்நோ' போடட்டுமா, ஸார்?" என்று கேட்டான் ஸலூன்வாலா.

"வேண்டாம்; நான் எப்பொழுதுமே 'ஸ்நோ' போட்டுக் கொள்வதில்லை" என்று சொல்லிக் கொண்டே நாற்காலியை விட்டுக் கீழே இறங்கிய கனகலிங்கம், அகல்யாவை நினைத்துக் கொண்டு மீண்டும் ஏறி நாற்காலியில் உட்கார்ந்தான்.

'இன்று மட்டும் 'ஸ்நோ' போட்டுக் கொண்டு சென்றால் என்ன? — பார்ப்பதற்குக் கொஞ்சம் வசீகரமாயிருக்குமல்லவா ......?'

கனகலிங்கம் ஸலூன்வாலாவை நோக்கித் திரும்பினான்; அவன் குறிப்பறிந்து 'ஸ்நோ பாட்டி'லுடன் கனகலிங்கத்தை நெருங்கினான்.

'என்றுமில்லாத வழக்கம் இன்று மட்டும் என்னத்துக்கு?—வேண்டாம்; வேண்டவே வேண்டாம். இருக்கிற அழகு இருந்தால் போதும் ......!'


கனகலிங்கம் நாற்காலியை விட்டு மறுபடியும் கீழே இறங்கினான்.

"'ஸ்நோ' வேண்டாமா?" என்று ஏமாற்றத்துடன் கேட்டான் ஸலூன்வாலா.

"வேண்டாம்; இந்தா காசு!" என்று அவனிடம் இரண்டணாவைக் கொடுத்து விட்டு, ஹோட்டல் நெருங்கி விட்டதால் புத்தகக் கட்டைக் கையிலேயே பிடித்துக் கொண்டு, கனகலிங்கம் மேலே நடந்தான்.

'கனாவிலா'வின் வாசலையடைந்ததும் அவனுடைய கண்கள் அவனையும் அறியாமல் மாடியை நோக்கின. அவன் எதிர்பார்த்தது வீண் போகவில்லை; அங்கே இரண்டு கண்கள் — சாதாரணக் கண்களல்ல;—கன்னங்கரேலென்று மை தீட்டிய கண்கள் — தங்கள் இமைகளால் சைகை காட்டி, விழிகளால் இன்பமூட்டி, அவனை 'வா, வா!' என்று வரவேற்றுக் கொண்டிருந்தன.

கனகலிங்கம் அந்தக் கண்களைப் பொருட்படுத்தாமல் உள்ளே நுழைய முயன்றான். முடியவில்லை— ஆமாம், முடியவேயில்லை!



அவன் வியப்பும் திகைப்பும் அடைந்தவனாய் நின்றது நின்றபடி யோசித்தான். அப்படி யோசித்துப் பார்த்ததில் 'இன்னொரு முறை அந்தக் கண்களை வெறுமனே பார்ப்பதில் அப்படி ஒன்றும் குற்றமில்லை' என்று தோன்றிற்று அவனுக்கு — பார்த்தான்!

அவ்வளவுதான்; வந்தது மோசம்! — அவன் உள்ளம் சலசலத்தது; உடம்பு கிறுகிறுத்தது.

'இது என்ன அதிசயம்!—தான் என்றும் காணாத—தான் என்றும் அனுபவிக்காத—உலக மகா அதிசயமாயிருக்கிறதே! இவ்வாறு தன் உடம்பைக் கிறுகிறுக்க வைப்பதற்கு அந்தக் கண்களில் என்ன கவர்ச்சி இருக்கிறது? என்ன காந்த சக்தி இருக்கிறது? என்ன மந்திர சக்தி இருக்கிறது? என்ன மாய சக்தி இருக்கிறது?'

கனகலிங்கத்துக்கு ஒன்றும் புரியவில்லை—ஆமாம், ஒன்றுமே புரியவில்லை!

இன்னொரு முறை பார்த்தாலாவது ஏதாவது புரியுமோ என்று அவன் மீண்டும் ஒரு முறை அவளைப் பார்த்தான்!

அவள் புன்னகை பூத்தவண்ணம் அவனைக் கடைக் கண்ணால் கவனித்துக் கொண்டே திரும்பினாள்!

அவன் எதிர்பார்த்தது போலவே அவளுடைய இரட்டைப் பின்னல்கள் அவனுடைய கவனத்தைக் கவர்ந்தன. அந்தப் பின்னல்களுக்கு மேலே நட்சத்திர வடிவில் மல்லிகை மொட்டுக்களை வைத்துத் தைத்திருந்த இரண்டு பட்டைகளை அவள் சூடிக் கொண்டிருந்தாள். வால் நட்சத்திரங்களை ஒத்திருந்த அந்தப் பின்னல்களைக் கண்டதும் அவனால் சிரிக்காமலிருக்க முடியவில்லை; சிரித்தான். அதே சமயத்தில் அவனை நோக்கித் திரும்பிய அவளும் சிரித்தாள்.

ஆனால் இம்முறை அவள் இதழ்கள் மட்டும் சிரிக்கவில்லை; கண்களும் சிரித்தன!

இந்தச் சமயத்தில், "ஸார், ஸார்!" என்று தன்னை யாரோ கூப்பிடுவதுபோலிருக்கவே, கனகலிங்கம் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தான். ஸஹான்வாலா அவனுக்கு எதிரே வியர்க்க விறுவிறுக்க வந்து நின்று கொண்டிருந்தான்.

"என்ன...?" என்று ஒன்றும் புரியாமல் அவனை நோக்கிக் கேட்டான் கனகலிங்கம்.

"இந்தாருங்கள், உங்களுடைய புத்தகக் கட்டு!—'ஷேவிங்' பண்ணும்போது 'ஸோப்'பை வழித்து வைப்பதற்கு உபயோகமாயிருக்கட்டுமென்று நான் பழைய 'பேப்பர்'களை யெல்லாம் சேர்த்து ஒரு கட்டாகக் கட்டி வைத்திருந்தேன். அதை எடுத்துக் கொண்டு வந்து விட்டீர்களே!" என்று சொல்லிக் கொண்டே, தான் கையோடு கொண்டு வந்திருந்த புத்தகக் கட்டைக் கனகலிங்கத்தினிடம் கொடுத்தான் ஸஹான்வாலா.

கனகலிங்கம் முகத்தில் அசடு வழியத் தன்னிடமிருந்த பழைய பத்திரிகைக் கட்டை அவனிடம் கொடுத்துவிட்டு, புத்தகக் கட்டை வாங்கிக் கொண்டு மேலே சென்றான். அப்படிச் செல்லும்போது, 'ரொம்ப மோசம்! ரொம்ப மோசம்! எனக்கு எப்படி இவ்வளவு பலஹீனம் ஏற்பட்டது என்று தெரியவில்லையே!' என்று அவன் தனக்குள் வியந்து சொல்லிக் கொண்டான். அது மட்டுமல்ல; அதற்கு ஏதாவது ஒரு மாற்றுக் கண்டு பிடித்தாக வேண்டும் என்றும் அவன் தனக்குள் நிர்மானித்துக் கொண்டான்.

மாடியை அடைந்ததும், "என்ன வேலையாயிருந்தாலும் அவரவர்களுடைய வேலையை அவரவர்களே செய்து கொள்ள வேண்டும் என்னும் காந்தி மகானின் கொள்கையை நீங்கள் அப்படியே பின்பற்றுகிறீர்கள் போலிருக்கிறது!" என்றாள் அகல்யா.

அவளுடைய பேச்சோடு அவள் சூடியிருந்த மல்லிகைப் பூவின் மணமும் கலந்து வந்து கனகலிங்கத்தின் மனத்தை மயக்கிற்று. அவன் அந்த மணத்தை விரும்பவுமில்லை; வெறுக்கவுமில்லை. இரண்டுங் கெட்டான் நிலையில், "ஏன் அப்படிச் சொல்கிறாய்?" என்று கேட்டுக் கொண்டே, புத்தகக் கட்டைக் கீழே வைத்து விட்டுத் தன் அறையின் கதவைத் திறந்தான்.

"இந்தப் புத்தகக் கட்டை யாராவது ஒரு கூலியின் தலையில் தூக்கி வைக்காமல் நீங்களே தூக்கிக் கொண்டு வருகிறீர்களே என்பதற்காகத்தான் சொல்கிறேன்......"

"ஓ, அதுவா?—'கூலி' என்றொரு தனி 'ஜாதி'யை நான் சிருஷ்டிக்க விரும்பவில்லை—அவ்வளவுதான் விஷயம்......"

"அப்படியானால் அந்தக் கூலிகள் எப்படிப் பிழைப்பதாம்?"

"பாம்புகள் தவளைகளை விழுங்கி வாழ வேண்டுமே என்பதற்காகத் தவளைகள் பிழைத்திருக்க வேண்டுமா, என்ன?—அவற்றை விழுங்கித் தாங்கள் வாழ ஏதாவது வழி இருக்கிறதா என்று முதலில் பார்ப்பது; இல்லையென்றால் செத்துத் தொலைவது!"

"என்ன இருந்தாலும் நம்மைப் போன்றவர்களுக்குக் கௌரவம் என்று ஒன்று இருக்கிறதே!" என்று சொல்லிவிட்டு, அகல்யா அவன் முகத்தை ஊடுருவிப் பார்த்தாள்.

"கௌரவம் தகுதியைப் பொறுத்தது. அது நம்மைத் தேடிக்கொண்டு வரவேண்டும்; நாம் அதைத் தேடிக் கொண்டு செல்லக் கூடாது. அப்படித் தேடிச் சென்று அடையும் கௌரவம் நிலைக்கவும் நிலைக்காது!" என்று சொல்லிக் கொண்டே, புத்தகக் கட்டைத் தூக்கி மேஜையின் மேல் போட்டு விட்டுக் கனகலிங்கம் திரும்பினான்

இருவருடைய கண்களும் நேருக்கு நேராக நோக்கின!

"அப்படிச் சொல்லுங்கள்; அதற்காகத் தான் நீங்கள் காந்தி மகாத்மாவின் கொள்கையைப் பின்பற்றுகிறீர்களோ!" என்றாள் அகல்யா எதையோ புரிந்து கொண்டவள் போல.

"ஆமாம்; ஆனால் அந்த கொள்கையைச் சிலர் தங்களுடைய கருமித்தனத்தைப் பிறருக்குத் தெரியாமல் மறைத்துக் கொள்வதற்காகவும் பின்பற்றுவதுண்டு......!"

"இப்பொழுது உங்களிடம் மட்டும் கருமித்தனம் இல்லையென்று எப்படிச் சொல்ல முடியும்......?"

"நான் ஏழை; என்னிடம் பணம் தேங்கிக் கிடக்கவில்லை. பணம் எங்கே தேங்கிக் கிடக்கவில்லையோ, அங்கே நீ கருமித்தனத்தைக் காணமுடியாது" என்று சொல்லிக் கொண்டே கனகலிங்கம் அறையை விட்டு வெளியே வர முயன்றான்.

"கருமித்தனத்தைக் காணா விட்டாலும் ஏழையிடம் அழகை அனுபவிக்கும் தன்மையைக் கூடவா காண முடியாது?" என்று ஏதோ ஒரு விதமான எரிச்சலுடன் கேட்டுக் கொண்டே அகல்யா ஒரு தினுசாகச் சிரித்தபடி அவனை வழிமறித்து நின்றாள்.

"அவன்தான் வயிற்றுக்குச் சோறு தேடுவதிலேயே தன்னுடைய நேரத்தையெல்லாம் கழித்து விடுகிறானே, அவனால் எப்படி அழகை அனுபவிக்க முடியும்?" என்றான் கனகலிங்கம்.

"நான் அந்த ஏழையைச் சொல்லவில்லை......" என்று வாசற்படியின் மேல் கட்டைத் தன் இரு கைகளாலும் பற்றிக் கொண்டே சொன்னாள் அகல்யா.

"அப்படியானால் நீ இந்த ஏழையைச் சொல்கிறாயாக்கும்?" என்று சொல்லிச் சிரித்துக் கொண்டே, தன்னை அவளுக்குச் சுட்டிக் காட்டினான் கனகலிங்கம்.

அவன் சிரித்தானோ இல்லையோ, "அது கிடக்கட்டும்; நீங்கள் இங்கே வாருங்களேன்!" என்று அவனுடைய கரத்தைப் பற்றிக் கரகரவென்று இழுத்துக் கொண்டே தன் அறைக்குச் சென்றாள் அகல்யா.





எங்கேயாவது பெண்ணுக்குப் பெண் ஒற்றுமைகூட இருப்பதுண்டா, என்ன...?"

"நீங்கள் சொல்வது ஒரு விதத்தில் உண்மைதான்!— ஆனால் என் சிநேகிதி அப்படிப்பட்டவ ளல்ல; அவளுக்கு எப்பொழுதுமே என்னிடம் அன்பும் அனுதாபமும் உண்டு. நான் இங்கே வந்ததும் அவளுக்கு ஒரு கடிதம் எழுதினேன். உடனே அவள் சந்தோஷம் தாங்காமல் என்னுடைய காதல் கல்யாணத்துக்குப் பரிசாக இவற்றையெல்லாம் வாங்கி அனுப்பி வைத்திருக்கிறாள்...."

"போயும் போயும் இவற்றை வாங்கி அனுப்பியிருக்கிறாளே, இவற்றால் என்ன பிரயோஜனம்?" என்று கேட்டான் கனகலிங்கம்.

"என் பிரயோஜனமில்லை? உங்களுக்குப் பிடித்தமான முறையில் நான் என்னை அழகுபடுத்திக் கொள்ளலாமல்லவா?" என்று நாணிக் கோணிக் கொண்டு சொன்னாள் அகல்யா.

"அது என்ன, எனக்குப் பிடித்தாற்போல! — அப்படியே இருந்தாலும் இந்த அழகுச் சாதனங்களைக் கொண்டு முகத்தைத்தானே அழகுபடுத்திக் கொள்ள முடியும்? அகத்தை அழகுபடுத்திக் கொள்ள முடியாதே!" என்றான் கனகலிங்கம்.

அகல்யாவுக்கு இது பிடிக்கவில்லை. அவள் 'சட்'டென்று கட்டிலில் உட்கார்ந்து, 'டபக்'கென்று முகத்தைத் தலையணையில் புதைத்துக் கொண்டாள்.

"அழுகிறாயா, என்ன?" என்றான் கனகலிங்கம்.

"ஆமாம், போங்கள்!—நீங்கள் சொல்லும் அழகுக்கு அழாமல் சிரிப்பார்களாக்கும்!" என்று காதலை ஒரு கணம் கைவிட்டு, ஊடல் புரிவதில் மூழ்ந்தாள் அகல்யா.

"என், என்ன விசேஷம்?" என்று ஒன்றும் புரியாமல் திருதிருவென்று விழித்துக் கொண்டே கேட்டான் அவன்.

"இந்த மேஜையின் மீது என்ன இருக்கிறதென்று பார்த்தீர்களா?" என்று தன் அறையிலிருந்த மேஜையைக் குழந்தையைப் போல் கும்மாளம் அடித்துச் சிரித்துக் கொண்டே அவனுக்குச் சுட்டிக் காட்டினாள் அவள்.

கனகலிங்கம் அந்த மேஜையைப் பார்த்தான். அதன் மீது கண்ணைக் கவரும் அழகுச் சாதனங்கள் பல வைக்கப்பட்டிருந்தன.

"இவையெல்லாம் உனக்கு ஏது?" என்று கேட்டான் கனகலிங்கம்.

"எனக்குச் சென்னையில் ஓர் அந்தரங்கச் சிநேகிதி இருக்கிறாள். அவளுக்கு என்னுடைய காதல் நாடகமெல்லாம் தெரியும்......" என்று மேலே ஏதோ சொல்ல ஆரம்பித்தாள் அகல்யா.

அதற்குள் கனகலிங்கம் குறுக்கிட்டு, "தெரிந்தும் அவள் சும்மாவா இருந்தாள்?" என்று வியப்புடன் கேட்டான்.

"சும்மா இல்லாமல் என்ன செய்வதாம்?"

"ஊர் முழுவதும் அவள் உன்னைப் பற்றிப் பறை சாற்றவில்லையா?"

"இல்லை ...."

"ஆச்சரியமாயிருக்கிறதே! — உலகத்தில்



"அழ அழச் சொல்பவர்கள்தான் நல்லவர்கள்; சிரிக்கச் சிரிக்கச் சொல்பவர்கள் கெட்டவர்கள்......!"

"நீங்கள் நல்லவராக இருக்க வேண்டாம்; கெட்டவராகவே இருங்கள், போதும்!"

"அப்படியானால் நானும் இந்திரனைப் பின் பற்ற வேண்டியதுதான்!"



இதைக் கேட்டதும் தலையணையிலிருந்து முகத்தை எடுத்துக் கொண்டு அகல்யா 'களுக்'கென்று சிரித்தாள். அந்தச் சிரிப்போடு கண்ணீரும் கலந்து வந்ததைக் கண்ட கனகலிங்கம், "உலகம் அகத்தைக் கண்டு மயங்குவதில்லை; முகத்தைக் கண்டுதான் மயங்குகிறது. ஆகவே, நீ உன் முகத்தை அழகுபடுத்திக் கொள்வதற்கு எத்தனை பவுடர் டப்பாக்களை வேண்டுமானாலும் வீணாக்கலாம்; தவறொன்றும் இல்லை — எழுந்து வா; சாப்பிடப் போவோம்!" என்றான்.

அகல்யா எழுந்து சென்று கண்ணாடிக்கு முன்னால் நின்றாள். முகத்தில் அப்பியிருந்த பவுடர் கலையாமல், கண்களில் தீட்டியிருந்த மை கலையாமல், சர்வ ஜாக்கிரதையாகக் கண்ணீரைத் துடைத்துக் கொண்டு அவள் கனகலிங்கத்துக்குப் பின்னால் சென்றாள்.

6

சிறிது நேரத்துக்குப் பிறகு இருவரும் சாப்பிட்டுவிட்டு, மெல்ல அடிமேல் அடி எடுத்து வைத்து, மாடிப்படி ஏறி வந்தார்கள். அகல்யா, கனகலிங்கத்தைக் கொஞ்சம் நெருங்கி, "மத்தியானம் அந்த ஹோட்டல்காரரைக் கண்டதும் நீங்கள் பயந்தே போய் விட்டீர்களல்லவா?" என்று கேட்டாள்.

கனகலிங்கம் கொஞ்சம் விலகி, "ஹோட்டல்காரரைக் கண்டு பயப்படவில்லை; உன்னுடைய கைத்துடுக்கைக் கண்டுதான் பயந்து போனேன்!" என்றான்.

"பொய் சொல்லாமல் சொல்லுங்கள்!" என்று சொல்லிக் கொண்டே, அகல்யா இன்னும் கொஞ்சம் அவனை நெருங்கினாள்.

"உண்மையைத்தான் சொல்கிறேன்!" என்று சொல்லிக்கொண்டே, கனகலிங்கம் இன்னும் கொஞ்சம் விலகினான்.

இப்படியாக அவள் நெருங்க, இவன் விலக — இவன் விலக, அவள் நெருங்க — இருவரும் படிகளைக் கடந்து மாடியை அடைந்தார்கள்.

"என்ன இருந்தாலும் ஒருவரையொருவர் இரகசியமாகக் காதலிப்பதில் ஒரு தனி இன்பம் இருக்கத்தான் செய்கிறது!" என்றாள் அகல்யா.

"எனக்கு அதில் அனுபவமில்லை!" என்றான் கனகலிங்கம்.

"அனுபவம் சும்மா வந்து விடுமா? பழகப் பழகத்தான் வரும்!" என்றாள் அகல்யா.

"யாரோடு யார் பழகுவது?" என்று கனகலிங்கம் கேட்டான்.

"என்னோடு நீங்கள் பழகுவது.........!"

"நாசமாய்ப் போச்சு!" என்று அலுத்துக் கொண்டே, கனகலிங்கம் தன் அறையின் கதவைத் திறந்து உள்ளே சென்றான்.

அகல்யா வழக்கம்போல் அன்று தன் அறைக்குச் செல்லவில்லை; கனகலிங்கத்தின் அறைக்குள் அவளும் சிரித்துக் கொண்டே நுழைந்தாள்!

"உன்னுடைய அறை இதுவல்ல; பக்கத்திலிருக்கிறது!" என்றான் கனகலிங்கம்.

"அது எனக்குத் தெரியும்" என்றாள் அகல்யா.

"தெரிந்தும் இங்கு வருவானேன்?"

"உங்களுக்குப் புரியாத விஷயத்தைப் புரிய வைப்பதற்காக!"

"உனக்குப் புரிந்து, எனக்குப் புரியாமலிருக்கும் விஷயம் எதுவும் இருப்பதாகத் தெரியவில்லையே......?"

"இருக்கிறது......!"

"இருந்தால் இருந்துவிட்டுப் போகட்டும்; நீ போய்த் தூங்கு!"

"தூங்குகிறேன்; என்னை உங்களுக்குப் பிடிக்கிறதா......?"

கனகலிங்கத்துக்குத் தர்ம சங்கடமாயிருந்தது. 'இன்னும் இரண்டு நாட்கள் இவளிடமிருந்து தன்னை எப்படிக் காப்பாற்றிக் கொள்வது?' என்று எண்ணி அவன் பெரிதும் கவலையடைந்தான். ஆனால் அந்தக் கவலையை அவன் வெளியே காட்டிக் கொள்ள விரும்பவில்லை. ஏனெனில், அதனால் அவள் மனம் புண்படுமல்லவா?

அவன் அவளை அனுதாபத்துடன் பார்த்தான். சாவோடு போராடும் அந்திய கால அழகு அவள் முகத்தில் பிரதிபலித்துக் கொண்டிருந்தது. பரிதாபத்துக்குரிய அந்த ஜீவன் பெண்மையையே இழந்துவிட்டிருந்தது!



'எவ்வளவு பயங்கரமான சோதனை! — பெண்மையை

இழந்துவிட்ட அவளுக்காக நான் ஆண்மையை இழந்து விடுவதா ......?'

கனகலிங்கம் யோசித்தான், யோசித்தான், யோசித்துக் கொண்டே இருந்தான். கடைசியில்......

அவனுடைய ஆண்மைதான் வென்றது; பலஹீனம் தோற்றது.......

'முடியாது; முடியவே முடியாது!'

அவன் அவளை வெறித்துப் பார்த்தான்.

அவள் ஒரு காரணமுமின்றிச் சிரித்தாள். — ஆம்; சிரித்தாள், சிரித்தாள், சிரித்துக் கொண்டே இருந்தாள்.

அவளுடைய சிரிப்பில் விஷம் தோய்ந்திருந்தது!

'இதைப் பருவகாலக் கோளாறு என்றும் சொல்வதற்கில்லை; 'நவீன கால இலக்கியங்களைப் படிப்பதன் காரணமாக உண்டாகும் கோளாறு என்று வேண்டுமானால் சொல்லலாம்! — இல்லையென்றால் ராஜாக்களிடத்திலும் ராணிகளிடத்திலும், அரண்மனைகளிலும் அந்தப்புரங்களிலும், மாடமாளிகைகளிலும் கூடகோபுரங்களிலும் வளரவேண்டிய காதலை இந்த அப்பாவிப் பெண் ஏன் கட்டிக் கொண்டு அழுகிறாள் ......?'

'அட, கஷ்டமே! இன்று ராஜாக்களைக் காணோம்; ராணிகளைக் காணோம். அரண்மனைகளைக் காணோம்; அந்தப்புரங்களைக் காணோம். மாட மாளிகைகளைக் காணோம்; கூட கோபுரங்களைக் காணோம் — அப்படியிருந்தும் இந்தப் பாழாய்ப் போன காதல் மட்டும் ஏன் இன்னும் உயிரை வைத்துக் கொண்டிருக்கிறது? ஏதும் அறியாத அபலைகளை ஏன் இப்படிப் பிடித்து வாட்டுகிறது...?'

கனகலிங்கத்துக்கு வெறுப்பு ஒரு பக்கம்; கோபம் ஒரு பக்கம் — இரண்டையும் மீறி அவன் சிரிக்க முயன்றான்.

'ஆம், சிரித்துப் புரம் எரித்த சிவனைத்தான் இவள் விஷயத்தில் தானும் பின்பற்ற வேண்டும்......'

இந்தத் தீர்மானத்துக்கு வந்ததும் அவன் அவளை மீண்டும் வெறித்துப் பார்த்தான்.

"என்னை உங்களுக்குப் பிடிக்கிறதா?" என்று அவள் மறுபடியும் அவனை நோக்கிக் கேட்டாள்.

"பிடிக்காமலென்ன? — பாலைப் பிடிக்காத பூனை உண்டா? பூனையைப் பிடிக்காத பால் உண்டா? பட்டாணிக் கடலையைப் பிடிக்காத குரங்கு உண்டா? குரங்கைப் பிடிக்காத பட்டாணிக் கடலை உண்டா? விளக்கு மாற்றைப் பிடிக்காத முறம் உண்டா? முறத்தைப் பிடிக்காத விளக்கு மாறு உண்டா......?"

"இது என்ன! — கேட்டதற்கு 'உண்டு, இல்லை' என்று பதில் சொல்லாமல் ஸினிமாவில் வரும் காதலன் மாதிரி ஏதேதோ உளற ஆரம்பித்து விட்டீர்களே ......?"

"பின் காதலென்றால் நீ என்னவென்று நினைத்துக் கொண்டிருக்கிறாய்? — அது ஒரு பைத்தியம்! பைத்தியம் உளறாமல் என்ன செய்யும்? — ஆனால் எனக்கும் ஸினிமாவில் வரும் காதலனுக்கும் ஒரே ஒரு வித்தியாசம்......"

"என்ன வித்தியாசம்?"

"அதே உளறலை அவன் ஆயிரக்கணக்கில் பணத்தை வாங்கிக் கொண்டு உளறுகிறான்; நான் ஒன்றும் வாங்கிக் கொள்ளாமலே உளறுகிறேன்."

"ரொம்ப அழகுதான்!"

"யார்? — நீயா, நானா?"

"இரண்டு பேரையும்தான் சொல்கிறேன்!"

"இதுவரை உனக்குக் கண்கள் இருக்கின்றன என்று நினைத்துக் கொண்டிருந்தேன். இப்பொழுதுதான் இல்லை என்று தெரிகிறது......"

"ஏன்?"

"போயும் போயும் என்னை அழகன் என்று சொல்கிறாயே?"

"எண்ணம் அழகானால் எல்லாம் அழகாகும்."

"அப்படியானால் இப்பொழுது உன்னுடைய எண்ணம் அழகாயிருக்கிறதாக்கும்?"

"ஆமாம்; அதனால்தான் நீங்கள் எனக்கு அழகனாகத் தோன்றுகிறீர்கள்......"

"ரொம்ப ஆபத்தான விஷயமாக வல்லவா இருக்கிறது, இது?"

"எது ஆபத்தான விஷயம்? ஒரு பெண்ணின் வாழ்க்கையை மலர வைப்பது ஆபத்தான விஷயமா?"

"நீ இப்பொழுது 'ஸினிமா பாஷை'யில் பேசுகிறாய் என்று நினைக்கிறேன்......"

"இல்லை; 'இலக்கிய பாஷை'யில் பேசுகிறேன்......"

"எந்தப் பாஷையாக வேண்டுமானாலும் இருக்கட்டும்; நானும் அதே பாஷையில் பேசட்டுமா? — மலர் இரு முறை மலர்வதில்லை; ஒரு முறைதான் மலர்கிறது!" — அவன் முகம் கடுகடுத்தது.

"நான் மலர் அல்ல; பெண்!" — அவள் முகம் சிடுசிடுத்தது.

"ஆமாம்; ஒரு காலத்தில் நீ பெண்ணாகத்தான் இருந்திருக்க வேண்டும்! — இப்பொழுது......"

அவள், தான் சொல்ல வந்ததைச் சொல்லி முடிக்கவில்லை; அதற்குள் அவன் பொறுமை

விழித்து, "பேயாகி விட்டேனா?" என்றான். அவள் கண்கள் கலங்கின; 'இதோ வந்து விட்டோம்!' என்று கண்ணீர்த் துளிகள் வேறு அவனைப் பயமுறுத்தின.

"இல்லை; பேய் கண்ணுக்குத் தெரியாமல்தானே ஆளைப் பிடித்து ஆட்டுகிறது?" என்றான் அவன், அவளுடைய முகத்தைப் பார்க்கப் பிடிக்காமல் எங்கேயோ பார்த்துக் கொண்டே.

"நான் கண்ணுக்குத் தெரிந்து உங்களைப் பிடித்து ஆட்டுகிறேனாக்கும்?" என்றாள் அவள், அவனைப் பார்க்கப் பிடிக்காமல் தலையைக் குனிந்து கொண்டே.

"ஆமாம்; ஆனால் அம்பலத்தில் ஆட்டி வைக்கவில்லை—அறையிலேயே ஆட்டி வைக்கிறாய்!" என்று சொல்லிக் கொண்டே, அவன் விறைப்புடன் அவள் இருந்த பக்கம் திரும்பினான்.

அவ்வளவுதான்; அகல்யா அதுவரை இழந்திருந்த பெண்மையை மீண்டும் பெற்றாள். அவளுக்கு அழுகை பொத்துக் கொண்டு வந்து விட்டது; 'குபுக்'கென்று அழுதே விட்டாள்!

இப்பொழுதுதான் 'சிவன் சிரித்து மட்டும் புரத்தை எரிக்கவில்லை; நெற்றிக் கண்ணையும் காட்டித்தான் எரித்தான்!' என்னும் விஷயம் கனகலிங்கத்துக்குப் புலப்பட்டது. அதே மாதிரி இப்பொழுது நாமும் நெற்றிக் கண்ணைத் திறந்து விட்டோமா, என்ன?

அவன் மௌனமானான். ஒரு கண நேர மௌனத்துக்குப் பிறகு அவன் மனம் வேறு திசையை நோக்கித் திரும்பிற்று — 'ஐயோ, பாவம்!' — இந்த உணர்ச்சிக்கு ஆளானதும், "அகல்யா! நான் உன்னுடைய மனதைப் புண்படுத்தி விட்டேனா, என்ன?" என்று அவன் குழைந்தான்.

'கலகல'வென்று கண்ணீரை உதிர்த்துக் கொண்டே அவள் அவனை ஒரு முறை ஏற இறங்கப் பார்த்தாள்.

"அழாதே, அகல்யா!" என்று கனகலிங்கம் அவளைத் தேற்றப் போனான்.

அந்தச் சமயத்தில் அகல்யாவுக்கு என்ன சொல்வது, என்ன செய்வது என்று ஒன்றும் தோன்றவில்லை. "ஆமாம், போங்கள்!" என்று அடித்துச் சொல்லிவிட்டு, அதே மாதிரி அந்த அறையின் கதவையும் அடித்துத் திறந்துகொண்டு, அவள் வெளியே வந்தாள்.

மணி ஒன்று, இரண்டு, மூன்று என்று பத்து அடித்து ஓய்ந்தது.

பேதை அகல்யா தன் அறையின் கதவைத் திறந்து கொண்டு உள்ளே சென்றாள். தலையணையைத் தூக்கி மடியின் மேல் வைத்துக் கொண்டு, முகத்தைக் கைகளால் பொத்திக் கொண்டு விம்மி விம்மி அழுதாள்.

அவளுடைய துக்கத்தைத் தாங்க மாட்டாமல்தானோ என்னவோ, அதே சமயத்தில் வானமும் அவளுடன் சேர்ந்து குமுறிக் குமுறி அழுதது!

அந்தப் பெருமழையின் சத்தத்தையும் மீறி அகல்யாவின் விம்மல் சத்தம் வந்து கனகலிங்கத்தின் ஆண்மையை மீண்டும் பரிசோதித்தது. 'ஹொய், ஹொய்' என்று சுழன்று சுழன்று அடிக்கும் ஆடிக் காற்றில் அகப்பட்டுக் கொண்ட துரும்பைப் போல அவன் ஒரு நிலைக்கு வரமுடியாமல் தவியாய்த் தவித்தான்.

(தொடரும்)

நாட்டிய அரங்கேற்றம்

நெல்லிக்குப்பம் ஆலை பர்ஸனல் அஸிஸ்டெண்டு ஸ்ரீ பி. சீனிவாசன் அவர்களின் புதல்வி குமாரி வஸந்த கோகிலத்தின் பரதநாட்டிய அரங்கேற்றம் விழுப்புரம் ஜோதி கிரவுண்டு தியேட்டரில் சென்ற ஆகஸ்டு மாதம் இருபத்திரண்டாந் தேதி சிறப்பாக நடந்தேறியது. அரங்கேற்ற வைபவ முடிவில் சபையின் சார்பாகப் பேசிய ஸ்ரீ இ. வி. சுந்தர ரெட்டியார், "எதிர் காலத்தில் மிகக் கீர்த்தியுடன் விளங்க வேண்டும்" என்று குழந்தையை ஆசீர்வதித்தார். இவ்வளவு அருமையாக பரதநாட்டியம் சொல்லிக் கொடுத்த நடன ஆசிரியை ஸ்ரீமதி ரத்னபாயின் திறமையைப் பாராட்டினார்.



எட்டாத பழம்

சரஸ்வதி

தங்கம் கூறுகிறாள் :

இன்று காலையில் நான் விழித்துக் கொண்ட வேளை என்ன வேளையோ தெரிய வில்லை. வாசலில் சென்று கோலம் போடு கையில் 'ஜல், ஜல்' என்ற ஒலியுடன் அடுத்த வீட்டில் வண்டி வந்து நின்றது. அதிலிருந்து ஒரு அழகிய வாலிபர் இறங்கினார். இறங்கியவுடன் அவர் என்னைப் பார்த்த பார்வை—அப்பா! இப்பொழுது நினைத்துக் கொண்டாலும் மயிர்க்கூச்சல் எடுக்கிறது!

"ஏன் அம்மா, தங்கம்! நம் வீட்டிலா வண்டி நின்றது?" என்று கேட்டாள் அம்மா.

"இல்லை அம்மா, பார்வதி மாமி அகத்திற்கு யாரோ ஊரிலிருந்து வந்திருக்கிறார்கள்" என்று கூறியபடி உள்ளே சென்றேன். "ஓகோ, இப்பொழுதுதான் எனக்கு ஞாபகம் வருகிறது. நேற்றுக் கூடப் பார்வதி மாமி என்னிடம் தன் நாத்தனார் பிள்ளை ஊரிலிருந்து வரப்போவதாகக் கூறினாள். அவன் டாக்டர் பரீட்சைக்குப் படிக்கிறானாம். அப்பா, அம்மா இல்லை. ஏராளமான சொத்து இருக்கிறதாம்!" என்று கூறினாள்.

மத்தியானம் என் தாயார் என்னைக் கூப்பிட்டு, "தங்கம், பார்வதி மாமி அகத்திற்குப் போய்க் கொஞ்சம் பச்சை மிளகாய் இருந்தால் வாங்கி வருகிறாயா?" என்றாள். எனக்கோ அவரை மறுபடியும் பார்க்க வேண்டுமென்று ஆசை. ஆனால் போவதற்கும் தயக்கம். என் மனதிலுள்ள போராட்டத்தை என் தாயார் அறியக்கூடாது என்பதற்காக "ஆகட்டும், அம்மா!" என்று அசிரத்தையாய்ப் பதிலளிப்பவள் போலக் கூறிவிட்டு, நெஞ்சும் மார்பும் படபடவென்று அடித்துக் கொள்ள, பார்வதி மாமியின் வீட்டிற்குச் சென்றேன். அங்கே அவர் கூடத்தில் ஊஞ்சல் பலகையின் மேல் உட்கார்ந்திருந்தார். நான் வெளியே தயங்கி நிற்பதைக் கண்ட பார்வதி மாமி, "யார், தங்கமா? உள்ளே வாயேன்! இவன் என் நாத்தனார் பிள்ளை ஸ்ரீதரன்தான்; வேறு யாருமில்லை" என்றாள். அதைக் கேட்கும்போதே எனக்கு வெட்கமாயிருந்தது.

நான் மிளகாயை வாங்கிக் கொண்டு வரும்போது அவர் ரேழியில் நின்றுகொண்டிருந்தார். அவர் எனக்கு வழி விடுவதற்காக நான் இருமிப் பார்த்தேன். அவர் வழி விடுகிறதாயில்லை. என்ன செய்கிறது? "கொஞ்சம் வழி விடுகிறீர்களா?" என்று கேட்டு விட்டேன். அப்பா! அவருக்குத்தான் என்ன துணிச்சல்! சிரித்துக் கொண்டே வழியை விட்டார். அது முதல் என் மனம் படும் பாட்டை அந்தக் கடவுள்தான் அறிய முடியும். 'செல்வவந்தரான அவர் அந்தஸ்து எங்கே? ஏழைக் குமாஸ்தாவின் பெண்ணாகிய உன் அந்தஸ்து எங்கே? மனமே வீணில் எட்டாத பழத்திற்குக் கொட்டாவி விடாதே!' என்று என்னதான் சொன்னாலும் பாழும் மனது கேட்கிறதா?

ஸ்ரீதரன் கூறுகிறான் :

மாமா கோடை விடுமுறைக்குக் கிராமத்துக்கு வரும்படி வருந்தி வருந்திக் கடிதம் எழுதினார். கிராமத்தில் எப்படிப் பொழுது போகப் போகிறதென்று அசிரத்தையாக இருந்தேன். கடைசியில் ஏதோ நான்கு நாட்கள் இருந்து மாமாவின் ஆசையைப் பூர்த்தி செய்து விட்டுப் போகலாமென்று வந்தேன். இப்பொழுது இந்த இடத்தை விட்டுப் போகவே மனம் வரமாட்டேன் என்கிறது! மாமா வீட்டு வாசலில் வந்து இறங்கியவுடனேயே ஒரு பெண் தெய்வம் காட்சி கொடுத்தது. என்ன இருந்தாலும் கிராமத்துப் பெண்களிடமே ஒரு அலாதியான சோபை இருக்கத்தான் இருக்கிறது. பட்டணத்துப் பெண்கள் என்னதான் முகத்தில் இரண்டு அங்குலத்துக்குப் பௌடரை அப்பிக் கொண்டு செயற்கை அலங்காரங்கள் செய்து கொண்டாலும் அவர்கள் முகத்தில் சோபை என்பது கடுகளவும் இல்லை—தங்கம்! அவளது தங்கம் போன்ற மேனிக்கு மிகவும் பொருத்தமான பெயர்தான்! பார்த்தால் மிகவும் எளிய குடும்பத்துப் பெண் போல் காணப்படுகிறாள். அவள் மேனியை அலங்கரிக்கப் பெயருக்குக் கூட ஒரு பொன் நகை கிடையாது. அதனால் என்ன? சுருண்டு நெற்றியில் புரளும் அவளது கருவண்டு போன்ற கூந்தலே போதும். அவள் கழுத்தில் அணிந்திருக்கும் கருகமணி மாலைக்கு அவள் அழகு செய்வது போல் இருக்கிறது. அவள் நெற்றியில் பளிச்சென்று பிரகாசிக்கும் குங்குமப் பொட்டே அவள் முகத்திற்கு அலாதியானதொரு களையைக் கொடுக்கிறது.

அன்று அவள் வந்தபோது வழியில் நின்று கொண்டிருந்தேனே — அவள் என்னுடன் பேசவேண்டும் என்பதற்காகத்தான் வேண்டுமென்றே அப்படிச் செய்தேன். அவள் என்னைப் பற்றி என்ன நினைக்கிறாளோ? — இந்த வரதட்சணை வாங்கும் வழக்கம் எனக்குக் கட்டோடு

பிடிப்பதில்லை. அந்தக் கொடுமையைப் பற்றி நான் என் நண்பர்களிடம் எத்தனையோ முறை அடித்துப் பேசி யிருக்கிறேன். இப்பொழுது எனது லட்சியம் நிறைவேறும் காலம் வந்துவிட்டதென நினைக்கிறேன். அவளைத் தனியே சந்தித்துப் பேச வேண்டுமென மிகவும் ஆவலாக இருக்கிறது. ஆனால் சந்தர்ப்பமே கிடைக்கவில்லை. மாமியிடம் அவளைப் பற்றிப் பேசவும் சங்கோஜமா யிருக்கிறது. கொஞ்சம் பொறுக்கலாம்......

தங்கம் :


என்னமோ தெரியவில்லை, காலையிலிருந்தே தலையை நச்சுநச்சென்று வலித்தது. அம்மா கோயிலுக்குப் போயிருந்தாள். அப்பா கடைக்குச் சென்றிருந்தார். கொஞ்சம் குளிர்ந்த ஜலத்தில் முகத்தைக் கழுவிக் கொண்டு காற்று வாங்கலாமென நினைத்துப் புழக்கடைப் பக்கம் சென்றேன். அடுத்த வீட்டுக் கொல்லையில் அவர் உட்கார்ந்து புத்தகம் படித்துக் கொண்டிருந்தார். நான் அவரைப் பார்க்காதவள் போலக் குடத்தைக் கட்டிக் கிணற்றில் விட்டுத் தண்ணீர் இழுக்க ஆரம்பித்தேன். ஆனால் விதிவசத்தால் கயிறு படீரென்று அறுந்து போகவே, இழுத்த வேகத்தில் அப்படியே கீழே சாய்ந்தேன். அதற்குப் பிறகு நடந்தது ஒன்றும் எனக்குத் தெரியாது. எனக்கு நினைவு வரும்போது என் தாயார் மடியில் நான் படுத்திருந்தேன். தலையில் பலத்த கட்டு போடப்பட்டிருந்தது.


நான் கண்ணை விழித்தவுடன் என் தாயார், "என் கண்ணே, என் வயிற்றில் பாலை வார்த்தாயே! நீ விழுந்தவுடன் தெய்வாதீனமாக அந்தப் பிள்ளை ஸ்ரீதரன் மாத்திரம் முதல் சிகிச்சை செய்திரா விட்டால் நீ இவ்வளவு நேரம் இறந்தே போயிருப்பாய்! அந்தப் பிள்ளை ஆயிரங் காலம் நன்றாக இருக்க வேண்டும்" என்று கூறி, ஆனந்த மிகுதியால் கண்ணீர் விட்டாள். இதைக் கேட்டவுடன் என் வலி கூட இருந்த இடம் தெரியாமல் பறந்து விட்டது.

ஏழு நாட்கள் ஏழு நிமிடங்களாக ஓடி விட்டன. புண் நன்றாக ஆறிவிட்டது. ஆனால் மனப்புண்ணுக்கு மருந்து ஏது? என்னை இரண்டாந் தாரமாக ஒருவருக்குக் கொடுக்க என் பெற்றோர் ஏற்பாடு செய்கின்றனர். பாவம், அவர்களைச் சொல்லி என்ன பயன்? என்னை மணக்க வேறு எவன் முன் வருவான்? ஆனால், ஐயோ! என் மனம் ஏன் இப்படிச் சஞ்சலப் படுகிறது?

ஸ்ரீதரன் :

அன்று அவள் கிணற்றடிக்கு வந்தாள். பேசுவதற்குச் சந்தர்ப்பம் கிடைத்ததென எண்ணினேன். ஆனால் துரதிருஷ்ட வசமாக அந்த விபத்து நேர்ந்தது. ஒரு விதத்தில் அதிர்ஷ்ட வசமாக அந்த





"சார்! நான் அமெரிக்கா போகப் போகிறேன். என்னை இந்திய அரசாங்கம் யு. என். ஓ. கமிஷனில் ஒரு அங்கத்தினராக நியமித்திருக்கிறது."

"பேஷ்! ரொம்ப சந்தோஷம். நீங்கள் போகும்போது இந்தக் கடியாரத்தையும் எடுத்துக் கொண்டு போய் அமெரிக்காவில் ரிப்பேர் செய்து கொண்டு வருகிறீர்களா?"

விபத்து நேர்ந்தது என்றும் கூறலாம். இல்லாவிட்டால் அவளைக் காப்பாற்றி எல்லாருடைய நன்மதிப்பையும் நான் பெற்றிருக்க முடியுமா? அவள் என்னைப் பற்றி என்ன நினைக்கிறாளோ! அவளை இரண்டாந் தாரமாகக் கொடுக்கப் போவதாக மாமி, மாமாவிடம் கூறிக் கொண்டிருந்தாள். இனியும் சும்மா இருக்கக் கூடாது. அவளைத் தனியே சந்தித்துத் தக்கன செய்ய வேண்டும். மாமியிடம் தோட்டத்தைப் பார்வையிடுவதாகச் சொல்லி விட்டுக் கொல்லைப்புறமே கதி என்று கிடக்கிறேன். எப்படியும் அவளைச் சந்தித்து விடலாம் என்ற நம்பிக்கையில் தான்!

நினைத்தபடி அவளைச் சந்தித்தும் விட்டேன். மெல்ல வேலியருகில் சென்று மனதைத் திடப்படுத்திக் கொண்டு, "ஏன் தங்கம், உன்னை இரண்டாந் தாரமாகக் கொடுக்கப் போகிறார்களாமே, உண்மையாகவா?" என்றேன்.

இதைக் கேட்டவுடன் அவள் கண்களில் நீர் முட்டியது. பேசவே முடியவில்லை. "ஆமாம்" என்பதற்கு அடையாளமாகத் தலையை அசைத்தாள். நான் உடனே அவள் கைகளைப் பற்றிக்கொண்டு, "தங்கம், என்னை மணந்து கொள்ள உனக்குச் சம்மதம்தானே?" என்றேன். இதைக் கேட்டவுடன் அவள் வியப்பு மிகுதியால் "என்ன, உண்மையாகவா கேட்கிறீர்கள்? உங்கள் அந்தஸ்து எங்கே? என் அந்தஸ்து எங்கே?" என்றாள்.

"தங்கம், உன் அந்தஸ்தைப் பற்றிக் கவலை இல்லை. உன் அழகே போதுமானது. மேலும் என் வாழ்க்கையின் லட்சியம் ஒரு ஏழைப் பெண்ணை மணப்பதுதான்!" என்றேன்.

அதற்குள் அவள் தாயார் அவளைக் கூப்பிடவே, "இன்று மாலை உன் தகப்பனாரை வந்து நான் பார்க்கிறேன்" என்று கூறினேன்.

அவள் போய் விட்டாள்.

தங்கம்:

தெய்வம் இன்றுதான் என் பிரார்த்தனைக்கு இரங்கியது. "என்னை மணந்து கொள்கிறாயா?" என்று அவர் கேட்டது வேதவாக்கு போல் எவ்வளவு இனிமையாக இருந்தது! கடவுள் என்னைக் காக்க அவர் உருவில் வந்தாரோ என்றுகூடத் தோன்றுகிறது. மாலையில் அவர் கூறிய படி வந்தார். என் தகப்பனார், "வா அப்பா, ஸ்ரீதரா! நீ செய்த உதவிக்கு என்ன கொடுத்தாலும் தகும். நீ மகாராஜனாய் ஆயிரங் காலம் நன்றாய் இருக்க வேண்டும்" என்று வாழ்த்தினார்.

"மாமா, அப்படியானால் உங்கள் தங்கத்தையே எனக்குக் கொடுத்து விடுங்கள்!" என்று அவர் கூறினார். இதைக் கேட்டதும் என் தகப்பனார் ஆச்சரியத்தால் அப்படியே ஸ்தம்பித்துப் போனார்.


"மாமா, நான் உண்மையாகத்தான் கூறுகிறேன்; என் மாமா, மாமியாரின் சம்மதத்தையும் பெற்றாகி விட்டது. இன்னும் என்ன வேண்டும்?" என்றார் அவர்.

என் தாயாரின் ஆனந்தத்தையோ அளவிட முடியாது. "தங்கம், என்ன இருந்தாலும் நீ அதிர்ஷ்டக்காரி!" என்று கூறி, அவள் என்னைக் கட்டியணைத்து ஆனந்தக் கண்ணீர் உகுத்தாள்.

மணமான பின்பு ஒருநாள் ஏதோ யோசித்தவாறு உட்கார்ந்திருந்தேன். அவர், "என்ன தங்கம், யோசனை பலமாக இருக்கிறது?" என்று சிரித்துக் கொண்டே கேட்டார்.

"ஒன்றுமில்லை; அன்றொரு நாள் என் உயிரைக் காப்பாற்றினீர்கள். இப்பொழுதோ என் வாழ்க்கையையே நீங்கள் காப்பாற்றி யிருக்கிறீர்கள். நீங்கள்தான் என் தெய்வம்" என்று உணர்ச்சி மிகுதியுடன் கூறினேன்.

அதற்கு அவர், "யாராவது ஓர் ஏழைப் பெண்ணை வரதட்சணை வாங்காமல் கல்யாணம் செய்து கொள்ள வேண்டும் என்ற என் லட்சியமும் உன்னால் நிறைவேறியதே, அதைச் சொல்லு!" என்றார்.


துணிகள்
வெண்மையாக
சலவை செய்யப்
பட்டுள்ளன...
துணிகள்
பிரகாசமாக
சலவை செய்யப்
பட்டுள்ளன...
ஸன்லைட்
சோப்பில்
தான்
SUNLIGHT SOAP
துணிகளை அடித்துத் துவைக்காமலே வெண்மையாகவும் பிரகாசமாகவும்
சலவை செய்கிறது!

★ பிரேமாவா அப்புவின் பேச்சில் மயங்குவாள்? அவள்தான் லேடீஸ் கிளப்பிற்குள்ளேயே சகல உலகத்தையும் கண்டு தெளிந்தவளாயிற்றே! இது முனுசாமிக்குத் தெரியாதா, என்ன? ★



மிஸ்டர் அப்பு

கோமல்

6. முனுசாமி விரித்த வலை!

சங்கரன் ஆழ்ந்த யோசனையோடு உட்கார்ந்திருந்தான். அந்தச் சமயத்தில் முனுசாமி மேஜை மீது ஒழுங்காக வைக்கப்பட்டிருந்த புத்தகம் முதலிய சாமான்களைக் கலைத்துவிட்டு மறுபடியும் தட்டிக் கொட்டி ஒழுங்காக வைத்துக் கொண்டிருந்தான். வேலை இல்லாத சமயங்களிலெல்லாம் இப்படி ஒழுங்காயிருப்பவைகளை யெல்லாம் ஒழுங்கீனமாக்கிவிட்டு மறுபடியும் சீர் செய்து வைப்பது முனுசாமியின் பழக்கம். சில சமயங்களில் வெளியே கிடக்கும் குப்பைகளைக்கூட உள்ளே கொண்டு வந்து கொட்டிவிட்டு மறுபடியும் அறையை அவன் சுத்தம் செய்வது உண்டு. 'எப்பொழுதும் அவன் அந்த வீட்டில் ஏதாவது வேலை செய்து கொண்டேதா னிருக்கிறான்' என்று பிறர் நினைக்க வேண்டுமென்பதற்காகத்தான் அவன் இப்படியெல்லாம் செய்வது வழக்கம்.

முனுசாமி ஒவ்வொரு புத்தகமாகத் தட்டி மேஜை மீது அடுக்கிக் கொண்டே மெதுவாகச் சங்கரோடு பேச்சுக் கொடுத்தான்.

"என்ன சின்ன எஜமான், இப்படி ஏக்கம் பிடிச்சாப்போல உட்கார்ந்திருக்கிறீங்க!"

சங்கரன் காதில் அவனுடைய வார்த்தைகள் தெளிவாக விழுந்தன. அவன் முனுசாமியை ஒரு தடவை ஏற இறங்கப் பார்த்து விட்டு, "ஹூம்! உன் வேலையைக் கவனி. எனக்கு ஏதோ கவலை..." என்றான் அலட்சியமாக.

"கவலையா....! அதைத்தானே கேட்டேன்! ஏதோ கப்பல் கவிழ்ந்துவிட்டாப்போல அப்படியே மக்குப் பொம்மை கணக்கா உட்கார்ந்திருக்கிறீங்களேன்னு!" என்றான் ஆச்சரியத்துடன் முனுசாமி.

'மக்குப் பொம்மை மாதிரி, குட்டிச்சுவர் மாதிரி' என்றெல்லாம் உதாரணம் காட்டிப் பேசுவது முனுசாமிக்கு எப்பொழுதும் சர்வ சகஜம். சில சமயங்களில் அவனுடைய உதாரணங்களைச் சங்கரன் சாதாரணமாகவே எடுத்துக் கொள்வான். ஆனால் சில சமயங்களில் அவைகள் அவனுக்கு அசாத்திய கோபத்தை உண்டாக்கி விடுவதும் உண்டு. அந்தச் சமயம் முனுசாமி மக்குப் பொம்மை என்று உபயோகித்த உதாரணம் சங்கரனுக்குச் சிறிது கோபத்தைத்தான் உண்டாக்கி விட்டது. "முனுசாமி! வர வர உனக்கு உடம்பிலே திமிர் அதிகமாகி விட்டது. மரியாதை மட்டில்லாமல் பேசுகிறாய். யாருடா மக்குப் பொம்மை!—மடையா!" என்று அதட்டினான்.

முனுசாமி கையிலிருந்த புத்தகத்தை மேஜை மீது வைத்துவிட்டு "என்ன சின்ன எஜமான், இவ்வளவு கோபம்! மக்குப் பொம்மைன்னு நீங்க மக்குப் பொம்மையா! ஒரு உதாரணத்துக்குச் சொல்ல வந்தேன். இப்படிக் கோபப் படுவாங்களா!" என்றான்.

"சரி, சரி! போதும், உன் உதாரணம். இப்போது மக்குப்பொம்மைன்னு சொல்லுவே; நாளைக்கு உதாரணமாய் எருமைக் கன்னுக்குட்டின்னு சொல்லுவே! இதையெல்லாம் என்னால் சகித்துக் கொண்டிருக்க முடியாது!" என்றான் சங்கரன் உரத்த குரலில்.

"ஆமாம் எஜமான்! சகிப்புத் தன்மையை இழந்தால்தான் உலகத்தில் புரட்சி ஏற்படும்ன்னு அன்னிக்கு நீங்க சொல்லலியா! — அது போகட்டும். உங்க மனசிலே இப்போ என்ன கவலைதான் இருக்கும்னு எனக்கு நல்லாத் தெரியும். நேத்திக்கு நானும் என் பெண்சாதியுங்கூட அதைப் பத்தித்தான் பேசிக்கிட்டிருந்தோம்...." என்றான் அசட்டுச் சிரிப்போடு முனுசாமி.

"என்ன பேசிக்கிட்டிருக்கே.....!"

"ஐயாவுக்குக் காசு பணத்திலே குறைச்சல் இல்லே. சட்டை துணியிலே குறைச்சல் இல்லே. ஆனால் வயசாயிடுச்சு; அவரு போக்கே ஒரு போக்காயிருக்கு பாருன்னு சொன்னேன்....."

"என் போக்கு என்ன ஒரு போக்கா யிருக்கு....!"

"இன்னும் விளக்கிச் சொல்லணுமா, எஜமான்! எல்லாம் எனக்குத் தெரியும். எல்லாம் தானே கைகூடி வந்துவிடும். கவலைப் படாதீங்க!"

"என்னடா கைகூடி வந்துவிடும்!"

"என்ன எஜமான், இன்னும் பரிகாசம் செய்யுறீங்க! நீங்க எதை நினைச்சு இப்படி கவலைப்படுறீங்களோ அது தானே கை கூடி வந்துவிடும். நீங்க எப்படி எங்கிப் போய் உட்கார்ந்திருக்கீங்களோ அப்படித்தானே அதுவும் இருக்கும்! அதுக்கும் இருதயம் இருக்காதா! ஆசை இருக்காதா! வயசு காலத்திலே இதெல்லாம் விடாது. இதைத்தான் நேற்று என் பெண்சாதிகிட்டே சொன்னேன்...."

"எதுடா எங்கிப் போய் உட்கார்ந்திருக்கும்!" என்றான் ஒன்றும் விளங்காதவன் போல் சங்கரன்.

"நான் கல்யாணம் செய்துக்கிறதுக்கு முன்னாலே என் பெண்சாதியைப் பார்த்ததும் இப்படித்தானே உருகினேன்! அவளும் அப்படித்தானே உருகினாள்! — ஹாம், அப்படி இரண்டு பேரும் உருகி உலர்ந்து போனதெல்லாம் ஒரு காலம். அது வான்னா இப்போ வருமா!"

"அப்படியானால் நான் யாரையோ பார்த்து உருகுகிறேன் என்று நீ சொல்லுகிறாய்; இல்லையா!"

"இதென்ன எஜமான், மறுபடியும் புதிர் போடுறீங்க! அப்படித்தான் எஜமான், அப்படித்தான்! நீங்க யாரைப் பார்த்துவிட்டு இப்படி உருகுறீங்கன்னுகூட எனக்குத் தெரியும்..."

"உனக்குத் தெரியுமா! எங்கே சொல்லு!"

"அப்படிக் கேளுங்க. நான் சொல்லிவிட்டால் எனக்கு என்ன இனாம் தருவீங்க!"

"பத்து ரூபாய் தருகிறேன்."

"பத்து ரூபாய்தானா! போகட்டும், என் பெண்சாதிக்கு!"

"அவளுக்குப் பத்து ரூபாய்."

"சரி, நீங்க அப்பு ஐயர் வீட்டுப் பக்கம் போயிருப்பீங்க. அவருடைய தங்கச்சி மீனா அம்மாவைப் பார்த்திருப்பீங்க. பார்த்தவுடனே அந்த அம்மா அழகிலே சொக்கி மனசை விட்டிருப்பீங்க—இல்லையா!" என்றான் மூனுசாமி.

இதைக் கேட்டதும் சங்கரனுக்கு ஆச்சரியத்தின்மேல் ஆச்சரியமாயிருந்தது. "அடடே! மூனுசாமி! இது உனக்கு எப்படித் தெரியும்!" என்றான் பரபரப்புடன்.

"இது தெரியாதா, எஜமான்! இந்த மூனுசாமியைச் சாதாரணமாய் நினைக்காதீங்க. ஒரு பட்சி ஆகாயத்திலே பறந்தா அது என்ன பட்சி! எங்கே இருந்து பறந்து வருகிறது! எங்கே போகிறது! அது எந்தத் தோப்பிலே, எந்த மரத்திலே கூடு கட்டி இருக்கிறதுன்னு எல்லாத்தையும் சொல்லிவிடுவேனே! அப்பு ஐயர் தங்கச்சி மீனா அம்மாவைப் பார்த்தவங்க யாருதான் கல்யாணம் செய்துக்கணும்னு நினைக்க மாட்டாங்க! ஒரு நாள் பார்த்தேன். அப்படியே இடிச்சு வைச்ச புளி மாதிரி நின்னுப்புட்டேன்....."

"அடடே! நீகூட அவளைப் பார்த்திருக்கிறாயா!"

"அந்தப் பெண்ணைப் பார்த்ததும் சட்டுன்னு உங்க நினைப்புதாங்க எனக்கு வந்தது. ஆஹா! நம்ப சின்ன ஐயாவுக்குத்தான் இது சரியான ஜோடின்னு நான் தீர்மானம் செய்துவிட்டேன்!" என்றான் மூனுசாமி.





பாட்டி :—எதற்காக என்னை இப்படிக் கறிச்சுக் கொட்டுகிறீர்கள்? வேணுமென்றால் என்னைத் தள்ளி வைத்து விட்டு வேறு கலியாணம் செய்து கொள்ளுங்கள்!

இந்தச் சமயத்தில் முனுசாமியின் பெண்சாதி காமாட்சியும் அங்கு வந்து சேர்ந்தாள். "வா! நல்ல சமயத்திலேதான் வந்தே. நேற்று நாம் பேசிக்கிட்டிருந்தோமே, அதைப் பற்றித்தான் சின்ன எஜமானோடே பேசிக்கிட்டிருந்தேன். சமயத்திலே நீயும் வந்துட்டே. போ! உன் பாடு அதிர்ஷ்டம்தான்! எஜமான் பத்து ரூபாய் கொடுப்பாரு; வாங்கிக்கோ!" என்றான் முனுசாமி.

"பணம் கிடக்குது. ஐயா மனசுப்படி அந்த அம்மாளையே கல்யாணம் செய்துக்கிட்டுக் கண்ணுக்குக் கண்ணா இருந்தா அதுவே நமக்குப் போதும்" என்றாள் காமாட்சி.

"அது சரி! ஆனால் ஐயா உனக்குப் பத்து ரூபாய் எனக்குப் பத்து ரூபாய் கொடுக்கும் போது வேண்டாம்னு சொல்ல முடியுமா! அதுவும் ஒரு நல்ல மங்களகரமான காரியத்தைச் செய்யத் தொடங்கும்போது கொடுக்கிறாரே!" என்றான் முனுசாமி.

சங்கரன் மெதுவாக எழுந்து மேஜை டிராயரைத் திறந்து இரண்டு பத்து ரூபாய் நோட்டுக்களை எடுத்து ஒன்றை முனுசாமியிடமும் மற்றொன்றைக் காமாட்சியிடமும் கொடுத்து விட்டு, "சரி! இது உங்கள் மனதிற்குள் இருக்கட்டும். காரியம் முடியும் வரையில் யாருக்கும் தெரிய வேண்டாம்" என்றான்.

"அது ஒருத்தருக்கும் தெரியாது. பயப்படாதீங்க!" என்றான் முனுசாமி.

இந்தச் சமயத்தில் பிரேமா அந்த அறையில் நுழைந்து கையிலிருந்த புத்தகத்தை மேஜை மீது எறிந்துவிட்டு ஆயாசத்துடன் சாய்வு நாற்காலியில் உட்கார்ந்தாள். சங்கரன் அந்த இடத்தை விட்டு வெளியே போனான். முனுசாமி துடைக்கும் துணியை எடுத்துக் கொண்டு அலமாரிக் கண்ணாடிகளையெல்லாம் துடைக்க ஆரம்பித்தான். காமாட்சி துடைப்பத்தை எடுத்துக்கொண்டு சுறுசுறுப்பாக அந்த அறையைக் கூட்டத் தொடங்கினாள். சிறிது நிமிஷ நேரம் மௌனம் நிலவியது. மெதுவாகக் காமாட்சி பேச ஆரம்பித்தாள்: "அந்த அப்பு ஐயா வருகிறாரே, அவர் ரொம்ப தங்கமான மனுஷர்!" என்றாள் பரிசோதனையான விமர்சனப் போக்கில் குனிந்து தரையைக் கூட்டிய வண்ணம்.

"அதிலே என்ன சந்தேகம்! தங்கம்னு சொன்னா மாத்திரம் போதாது. அவருடைய யோக்யதை என்ன! புத்தி என்ன! நடத்தை என்ன! என்ன இருந்தாலும் மூனு முறை உலகத்தையே சுற்றிப் பார்த்தவரில்லையா!" என்றான் முனுசாமி.

"சின்ன ஐயாவுக்கு அவர் சிநேகம் கிடைச்சது அதிர்ஷ்டம்தான்!" என்றாள் காமாட்சி.

"சின்ன ஐயாவுக்கு மாத்திரம் என்ன! இந்த வீட்டுக்கே ஒரு அதிர்ஷ்டம்தான்!" என்றான் முனுசாமி கைத் துணியை உதறிக்கொண்டே.

இதைக் கேட்டதும் "போதும்! நிறுத்துங்கள் உங்கள் பேச்சை! அந்த அரட்டைக் கல்லியினுடைய சிநேகிதம் கிடைத்தது அண்ணாவின் அதிர்ஷ்டமாகவே இருக்கட்டும். இந்த வீட்டிற்கு அந்த அதிர்ஷ்டம் வேண்டாம். அந்த அப்பு சொல்லுகிறதெல்லாம் வெறும் பொய்; பேத்தல். அவனுடைய வாயளப்பில் அண்ணா வேணுமானால் மயங்கலாம். நான் மயங்க மாட்டேன். அந்த அப்பு இப்படியே பேசி எல்லோரையும் ஏமாற்றிவிட்டுத் தன் காரியத்தைச் சாதித்துக் கொள்ளப் பார்க்கிறான். எனக்கு இது நன்றாகத் தெரியும்" என்றாள் பிரேமா.

முனுசாமியும் காமாட்சியும் திடுக்கிட்டனர். பிரேமாவுக்கு அப்புவிடம் நல்ல அபிப்பிராயம் இருக்குமென்று அவர்கள் நினைக்கப்போகக் கடைசியில் அவள் இப்படிப் பேசுவதைக் கேட்டு அவர்களுக்கே வியப்பாக இருந்தது. பிரேமாவின் வார்த்தைகளுக்கு அவர்களால் மறுப்புக் கூறமுடியுமா! தங்கள் அபிப்பிராயத்தை மாற்றிக் கொண்டு அவளை அனுசரித்தே பேசத் தலைப்பட்டனர்.

"நான்கூட ஆரம்பத்திலேயே நினைச்சேன். இந்த ஐயா இப்படி ஒரே அளப்பா அளக்கிறாரே, எல்லாம் உண்மையாய் இருக்குமா என்று!" என்று இழுத்தான் முனுசாமி.

"நான் கூடத்தான் ஆரம்பத்திலேயே உங்கிட்டே சொன்னேனே! இந்த அப்பு ஐயா சின்ன ஐயாவின் காலைக் கட்டின சனின்னு!" என்றாள் காமாட்சி துடைப்பத்தால் வெறும் தரையைத் துழாவியபடியே.

"அந்த அப்பு அண்ணாவின் காலைக் கட்டின சனியனாகவோ, கழுத்தைக் கட்டின சனியனாகவோ இருக்கட்டும். ஆனால் அந்தப் பித்துக் கொள்ளி மற்றவர் காலையோ, கழுத்தையோ கட்ட வராமல் இருந்தால்போதும்—முனுசாமி, எனக்கு அவனைக் கண்டாலே பிடிக்கவில்லை. அவன் இந்த வீட்டிற்கு வருவதே எனக்குப் பிடிக்கவில்லை. அவன் பேச்சிலேயே எல்லோரையும் பைத்தியமாக்கிவிட நினைக்கிறான்!" என்றாள் பிரேமா ஆத்திரத்தோடு.

"ஆ! நீங்களா பேச்சிலே மயங்குவீங்க? சின்ன ஐயா வேணுமான்னா மயங்குவாரு.

ருந்து, பத்து கைமாத்துக் கேட்டா கொடுத்துடுவாரு. நீங்க உங்க லேடீஸ் கிளப்பிலே இதுமாதிரி எத்தனை பேரோடு பேசியிருப்பீங்க! அந்த ஐயா மூணு தரம் உலகத்தைச் சுற்றிவிட்டு வந்து தானே இவ்வளவு பேசுறாரு! ஆனா நீங்க அந்த லேடீஸ் கிளப்புக் குள்ளாரயே ஈரேழு பதினாலு லோகத்தையும் கொண்டு வந்து சுற்ற வைச்சுட மாட்டீங்களா!'' என்றான் முனுசாமி.

''முனுசாமி! இனிமேல் அந்த அப்பு வந்தால் வீட்டிற்குள் விடாதே! அவன் நான் தனியாய் இருக்கும்போது இந்த அறையில் வந்து 'தொணதொண'வென்று ஏதாவது பேசித் தொலைகிறான்'' என்று கண்டிப்பாக உத்தரவு போட்டாள் பிரேமா.

''நான் என்ன செய்யட்டும், அம்மா! சின்ன ஐயா ஏதேனும் கோபப்பட்டால்! அவருடைய சினேகதாரச்சே!''

''சின்ன ஐயாவுக்கு உள்ள அதிகாரம் எனக்கும் இந்த வீட்டில் உண்டு. நீ அதற்காகப் பயப்பட வேண்டாம்.''

''சரி, நான் இருக்கிறபோது அவர் வந்தால் உள்ளே விடவில்லை. நான் இல்லாதபோது அவர் வந்து விட்டால் என் மேலே குற்றம் சொல்லாதீங்க.''

பிரேமா அதற்கு ஒன்றும் பதில் சொல்லவில்லை.

''நீங்க இல்லாதபோது அவர் வந்தால் நான் இருக்க மாட்டேனா! பங்களாவோடு வெளியே போ ஐயான்னு சொல்கிறேன்!'' என்றாள் காமாட்சி.

''அதுதான் சரி! நீ துளிக்கூடத் தயை தாட்சண்யம் பார்க்காதே!'' என்றான் முனுசாமி.

''நான் எதற்காகத் தாட்சண்யம் பார்க்கணும்! சின்னம்மா மனசுக்குப் பிடிக்காத ஒருத்தர் இந்த வீட்டிற்கு ஏன் வரணும்!'' என்று சொல்லிவிட்டுச் சிறிது நேரம் கழித்து, ''ரொம்ப நாளாய் உங்களைக் கட்டிக்க ஒரு நல்ல சேலை கொடுங்கன்னு கேட்டுக்கிட்டிருந்தேன்; மறந்தே போயிட்டீங்க...'' என்றாள் காமாட்சி மெதுவாக பிரேமாவிடம்.

''அடடே! புடவை துணியெல்லாம் கேட்க இதுவா நேரம்! அம்மா ஏதோ ஆழ்ந்த யோசனையிலே இருக்காங்க!'' என்றான் முனுசாமி.

''புடவைதானே! மறந்தே போய்விட்டேன். போன வாரம் நான் வாங்கின வாயில் புடவை அவ்வளவு நன்றாயில்லை என்று எங்க கிளப்பிலே எல்லோரும் சொன்னார்கள். அது வெளித் தாழ்வாரத்துக் கொடியிலே கிடக்கிறது. நீ வீட்டுக்குப் போகும்போது எடுத்துக் கொண்டு போ!'' என்றாள் பிரேமா.

''சரி, அம்மா!'' என்று சொல்லிக் கீழே கிடந்த குப்பையை ஒரு கையால் திரட்டி எடுத்துக் கொண்டு வெளியே போனாள் காமாட்சி. முனுசாமியும் தன் காரியம் முடிந்து விட்டதுபோல் அவளைத் தொடர்ந்து வெளியே போனான். (தொடரும்)

நானா இளிச்சவாயன்!

ஏ. கே. பட்டுசாமி

"ஏ புஷ்பா, இன்றைக்கு நம்ம வீட்டில் அடுப்பே புகையக் கூடாது!"

"ஏனோ?"

"எதிர் வீட்டில் கல்யாணம், தெரியுமோ, இல்லையோ?"

"இருந்தால்...? உங்களை யார் அழைச்சா? எதிர் வீட்டில் அவர்கள் குடித்தனம் வந்தே மூன்று மாசம்தானே ஆச்சு! அவர்களை உங்களுக்குச் சரியாகக் கூடத் தெரியாதே?"

"அவர்களை எனக்குத் தெரியாவிட்டால் அவர்களுக்கு என்னைத் தெரிந்திருக்கக் கூடாதோ! போய்ப் பார், மேஜை மேல் அழைப்பிதழ் இரண்டு நாளாகத் தூங்குகிறதை! முந்தாநாள் நம்ம பாலுவிடம் கொடுத்தனுப்பியிருக்கிறார் அந்த மனிதர்."

"எதிர் வீடுதானே, நீங்கள் வரவேண்டுமென்று இருந்தால் நேரில் வந்து ஒரு வார்த்தை சொல்லியிருக்க மாட்டாரா?"

"உனக்கென்ன, வாய்க்கு வந்ததையெல்லாம் சொல்லுவாய். ஒரு கல்யாணத்தைப் பண்ணிப் பார்த்தால் தெரியும் அதிலுள்ள சிரமம். எல்லாம் இன்னும் கொஞ்ச நாழியில் பார்! அவரே வந்து என்னை அழைத்துக் கொண்டு போவார்!"

"சரி, கூப்பிட்டால் நீங்கள் போய்ச் சாப்பிட்டுவிட்டு வாருங்கள். எனக்கும் குழந்தைகளுக்கும் நான் இங்கேயே சமைத்துக் கொள்கிறேன்."

நான் அவசர அவசரமாகக் குளித்தேன். தெருவில் யாரையோ யாரோ கூப்பிடும் போதெல்லாம் என்னைத்தான் எதிர் வீட்டுக்காரர் கூப்பிடுகிறார் என்று நினைத்துக் கொண்டு, "இதோ வந்துவிட்டேன்!" என்று குரல் கொடுத்துக் கொண்டிருந்தேன்.

எட்டுமணி வரையில் என்னை ஒருவரும் வந்து கூப்பிடவில்லை. புஷ்பா விஷமமாக என்னைப் பார்த்துச் சிரித்துக் கொண்டேயிருந்தது எனக்குப் பிடிக்கவில்லை.

எதிர் வீட்டில் வாத்திய முழக்கம் அமர்க்களப் பட்டது. பரதேசக் கோலத்திற்கு ஏற்பாடுகள் நடந்து கொண்டிருந்தன.

"என்ன இன்னும் உங்களை ஒருவரும் கூப்பிடவில்லையே! காப்பியையாவது சாப்பிடுங்கோ!" என்றாள் புஷ்பா.

"சரி, காப்பியை மட்டும் கொடு. சாப்பாட்டை அங்கேயே பார்த்துக் கொள்ளுகிறேன். இதோ பரதேசக் கோலம் ஆனதும் முகூர்த்த சமயத்தில் வந்து கட்டாயம் கூப்பிடுவார்" என்றேன் நான்.

காப்பியைக் குடித்த பிறகு தயாராக சரிகை வேஷ்டி அங்கவஸ்திர தாரியாக வீதித் திண்ணையில் போய் உட்கார்ந்து கொண்டேன். மாப்பிள்ளை காசி யாத்திரை கிளம்பினார். எதிர்வீட்டுக்காரர் இங்கும் அங்கும் ஓடிக் கொண்டிருந்தார். அவர் என்னைக் கவனிப்பதற்காக நிமிஷத்திற்கொருதரம் தொண்டையைக் கனைத்துக் கொண்டே, வாத்தியக்காரரின் பாட்டுக்குத் தாளம் போட்டுக் கொண்டிருந்தேன்.

பாவம்! அவர் அவசரத்தில் மறந்தே போய்விட்டார் போலும். நம்மைப் பார்த்துவிட்டால் உடனே ஞாபகம் வந்துவிடும் என்று நம்பிக்கை இழக்காமல் உட்கார்ந்திருந்தேன். அவர் ஒன்றிரண்டு தடவை என்னைப் பார்க்கவும் பார்த்தார். ஆனால் கூப்பிடவில்லை. ஒருவேளை பல தொல்லையில் மறந்து விட்டிருக்கலாமோ வென்று கல்யாண வீட்டுக்கு வந்த எனக்குத் தெரிந்தவர்களைப் பார்த்து, "என்ன மிஸ்டர் விசுவம்! ஓஹோ! கல்யாணத்திற்குப் போகிறீரா?...உம்...வாங்கோ! வாங்கோ! மிஸ்டர் சீனுவாசன்? எங்கே இவ்வளவு தூரம்?...ஓ...! கல்யாணத்திற்கா?" என்று எதிர்வீட்டுக்காரரின் காதில் விழும்படி விசாரித்தேன். இன்னும் எனக்குத் தெரிந்த வித்தைகளையெல்லாம் கையாண்டு பார்த்தும் எதிர் வீட்டுக்காரருடைய கவனத்தை என்னால் கவர முடியவில்லை. அவ்வளவு தொல்லை அவருக்கு. கல்யாணத்தைப் பண்ணிப் பார்த்தால் அல்லவா தெரியும்?

சிறிது நேரத்திற்கெல்லாம் நாயனக்காரர் முழக்கிய கெட்டிமேளம் முகூர்த்தம் தீர்ந்துவிட்டது என்பதை யறிவித்தது. சரி, முகூர்த்தம் போனாலும் சாப்பாட்டுக்குக் கட்டாயம் கூப்பிடுவார் என்று நம்பிக்கையுடன் நான் திண்ணையிலேயே உட்கார்ந்திருந்தேன். ஏனென்றால் முகூர்த்த கலாட்டா அடங்கி விச்ராந்தியாகச் சாப்பிடும் சமயத்தில் என் ஞாபகம் வந்துவிடுமல்லவா?

அப்படியே உட்கார்ந்து உட்கார்ந்து கொஞ்சம் களைப்பாக இருக்கவே, திண்ணை மேலேயே சாய்ந்து கொண்டு சிறிது நேரம் உறங்கிவிட்டேன். நான் கண்ணை விழித்துக் கொண்ட சமயத்தில் எதிர்வீட்டு வாசலில் எல்லோரும் சாப்பிட்டுவிட்டுக் கையலம்பிக் கொண்டிருந்தனர்.

நான் எழுந்து உள்ளே வந்தேன்.

"என்ன, கல்யாணச் சாப்பாடு பலம் தானா?" என்று விசாரித்தாள் புஷ்பா.

"சரி சரி, சமையல் பண்ணி யிருக்கிறாயல்லவா? இலையைப் போடு!" என்றேன்.

"நீங்கள் அங்கே சாப்பிடப் போவதாகச் சொல்லவே நாங்கள் எங்கள் வரையில் சமைத்துச் சாப்பிட்டாச்சே. வெளியிலே சொன்னா யாராவது சிரிக்கப்போறா! கொஞ்சம் உட்கார்ந்திருங்கோ, இதோ அடுப்பை மூட்டிச் சமைத்துப் போட்டு விடுகிறேன். எப்பவுமே நீங்கள் இளிச்சவாயர்தானே" என்றாள் அவள். எனக்குக் கோபம் பொத்துக்கொண்டு வந்தது.

* * *

பஸ் ஸ்டாண்டில் காத்திருப்பவர்களில் அத்தனை பேருக்கும் பஸ்ஸில் இடம் அகப்படும்; எனக்கு மட்டும் அகப்படாது என்பதென்னவோ வாஸ்தவந்தான். பண்டைக்கால அரசர்கள் கையாண்ட தர்மப்படி ஸ்திரீகள், குழந்தைகள், விருத்தர்கள் இவர்களெல்லாம் முதலில் ஏறிக் கொள்ளட்டும் என்று விட்டுவிடுவேன். பிறகு எஞ்சி நின்றவர்களும் ஏறிக் கொள்வார்கள். தப்பித் தவறி யாராவது "ஏறிக் கொள்ளுங்கள், ஸார்!" என்றால் கூட, "பரவாயில்லை ஸார்! நீங்கள்தான் முன்னே ஏறிக் கொள்ளுங்களேன்! வேண்டிய இடம் கிடக்கிறது" என்று மரியாதையாகச் சொல்லுவேன். மற்றவர்களும் ஏறிக்கொண்டவுடன் கடைசியாக நான் ஏறப் போகும் சமயத்தில் கண்டக்டர், "இடமில்லை ஸார்! அடுத்த பஸ்ஸில் வாருங்கள்!" என்று வினயமாகச் சொல்லி விடுவான்.

அப்படியாக மிஞ்சி என்றைக்காவது பஸ்ஸில் இடம் கிடைத்து விட்டாலும் ஸ்டாண்டுக்கு ஸ்டாண்டு ஏறும் பெண்மணிகளுக்கும் பெரியவர்களுக்கும் என் இடத்தைக் கொடுத்துவிட்டு நான் 'பாரீஸ் கார்னர்' வரையில் தோல் பட்டையைப் பிடித்துத் தொங்கிக் கொண்டுதான் போவேன். இந்த அற்ப விஷயங்களினாலும் என்னை இளித்தவாயன் என்று நிர்ணயிக்க முடியுமா?

முக்கால்வாசி நாளும் புஷ்பா எனக்காகக் கஷ்டப்பட்டுத் தயாரித்துக் கொடுத்தனுப்பும் டிபனையும் காப்பியையும் சாப்பிட எனக்குக் கொடுத்து வைக்காதுதான். நான் டிபன் பொட்டலத்தைப் பிரிக்கும் சமயத்தில் எனது ஆபீஸ் நண்பர்களுக்கு எப்படியோ நாக்கில் வேர்க்கும்! நண்பர்களை விட்டு விட்டு எப்படி ஸார் சாப்பிட முடியும்? கேவலம் காகம்கூட அல்லவா தனது நண்பர்களுடன் 'கலந்து' உண்ணுகிறது!

"மிஸ்டர் ராமச்சந்திரன், கொஞ்சம் எடுத்துக் கொள்ளுங்கள்! சீனு, கொஞ்சம் சாப்பிட்டுப்பார்!.........ஸார்! நம்ம வீட்டு டிபன்! கொஞ்சம் 'டேஸ்ட்' பண்ணிப் பாருங்கோ!......பரவாயில்லை ஸார்! கொஞ்சம் எடுத்துக் கொள்ளுங்கள்!" என்று உபசரிப்பேன் நான். அடுத்த நிமிஷம் என் டிபன் பொட்டலத்தையும் காப்பி 'பிளாஸ்க்'கையும் அவர்கள் 'ருசி' பார்ப்பார்கள். எனக்குக் கர்தல் பேப்பரும் காலி பிளாஸ்கும்தான் மிஞ்சும்! இதைக் கொண்டு என்னை இளித்த வாயன் என்று எப்படிச் சொல்ல முடியும்?

இந்தப் புஷ்பாவுக்குத்தான் என் மதிப்புத் தெரியவே யில்லை. அக்கம் பக்கத்தில் எனக்கு எவ்வளவு கௌரவ மென்கிறீர்கள்! பக்கத்து வீட்டுப் பாட்டியம்மாளுக்குத் தாம்புக் கயிறு முதல்,' குடித்தனக்காரக் கிழவருக்குப் பட்டணம் பொடி வரையில் என் கையால் வாங்கிக் கொண்டு வந்து கொடுத்தால்தான் திருப்தி ஏற்படுகிறது. மற்றவர்கள் மீது அவர்களுக்கு நம்பிக்கையே கிடையாது. 'ஸெலெக்ஷனில்' நான் 'மணி!'

"ஆபீசுக்குப் போகும் போது அவரைத் தயவு செய்து இந்த லெட்டரைக் கொஞ்சம் தபாலில் போட்டு விடச் சொல்லு!" என்று ஊருக்குப் போயிருக்கும் தன் கணவனுக்கு எழுதும் அந்தரங்கக் கடிதத்தையும் அதன் மேல் ஒட்டியிருக்கும் இரண்டணா தபால் தலையையும் என்னிடம் நம்பிக்கை வைத்து பாலு மூலமாகக் கொடுத்து அனுப்புவாள் ஒரு குடித்தனக்கார அம்மாள்.

"ஸார்! நம்ம இவர் கிட்ட கொடுங்களேன்! ஆரஞ்சுப் பழம் வாங்குவதில் இவருக்கு மிஞ்சிதான்! விலையும் மலிவாக இருக்கும்; பழமும் கற்கண்டு போல் இருக்கும்" என்று பக்கத்து வீட்டுக்காரர் தமது நண்பருக்கு எனது பெயரைச் சிபார்சு பண்ணுவார். நம்மைப் பற்றி அவ்வளவு உயர்வான அபிப்பிராய மிருக்கும்போது, டஜன் மூன்று ரூபாய்க்கு வாங்கி 'ஒன்றே கால் ரூபாயாக வாங்கினேன்' என்றுதானே சொல்லத் தோன்றுகிறது! நீங்களே சொல்லுங்கள்!

எனது நண்பர்களுக்கு எப்போதாவது வாரத்தில் இரண்டு முறை பணத்தட்டு ஏற்பட்டால் அவர்கள் என்னைத் தவிர வேறெங்கேயும் போக மாட்டார்கள். ஏனென்றால் அவர்களுக்குத் தெரியும்; மற்றவர்களைப் போல் கடன் கொடுத்து விட்டுக் 'கொடுத்தேன், கொடுத்தேன்!' என்று தம்பட்டம் அடிக்கும் வழக்கம் என்னிடமில்லை என்று! நம் வீடு தேடி இவ்வளவு மதிப்பு வைத்து வருபவர்களை எப்படி வெறுங்கையோடு அனுப்புவது? ஒரு ஐந்தோ, பத்தோ கடனாகக் கொடுத்து ஒரு 'கப்' காப்பியும் கொடுத்து அனுப்புவேன். கையில் வைத்துக் கொண்டு 'இல்லை' என்று பொய் சொல்ல எனக்குத் தெரியாது ஸார்! இப்படிச் செய்து விட்டு வாராந்திர ரேஷனுக்குப் பணமில்லாமல் சில சமயம் நான் திண்டாடியிருக்கிறேன் என்பதென்னவோ உண்மைதான். என்ன பண்ணுவது? நான் போய்க் கடன் கேட்டால் மற்றவர்கள் என்னவோ கொடுப்பதில்லை. எல்லாரும் குடும்பஸ்தர்கள்தானே? அவரவர்களுக்கு எத்தனைக் கஷ்டங்கள் என்கிறீர்கள்! இந்தப் பச்சாத்தாபமும் பரோபகாரமும் இளிச்சவாய்த்தனமா?

கடைத்தெருவில் நுழைந்து கொஞ்சம் முற்றிப் பழுத்துப் போனதும், வாடியதுமான காய்கறிகளைச் சில ஏழைகள் கேட்பாரின்றி அப்படியே கடையோடு வைத்திருப்பதைப் பார்த்ததும் என் மனம் என்ன பாடுபடுகிறது, தெரியுமா? மற்றக் கடைக்காரர்களைச் சுற்றி அத்தனை ஜனங்கள் வாங்கும்போது அந்த ஏழைக் கடைக்காரி மாத்திரம் அவளுடைய கத்திரிக்காயைப் போலவே வாடிய முகத்துடன் உட்கார்ந்திருப்பதைக் காண என் மனம் சகிப்பதில்லை. உடனே ஓடிச் சென்று அவளிடம் மார்க்கெட் விலையை விட ஒரு அணாவோ இரண்டணாவோ அதிகமாகவே கொடுத்து இரண்டு மூன்று வீசை வாங்கி விடுவேன். புஷ்பாவுக்கு என் இரக்க சுபாவத்தை ரஸிக்கத் தெரியவில்லை. "நீங்கள் இளித்தவாயர், உங்கள் தலையில் கட்டிவிட்டாள்!" என்கிறாள்.

'இளித்த வாயன்' என்று சொல்லாமல் 'இளித்த வாயர்!' என்று மரியாதையாகச் சொல்லுகிறாளாம்! எப்படி இருக்கிறது? என்ன இருந்தாலும் இன்றைக்குப் புஷ்பாவை சும்மா விடக்கூடாது!

* * *


"ஏ புஷ்பா, இதோ பார்!......"

இதற்குள் வாசலில் என்னை யாரோ "ஸார்!" என்று கூப்பிடுகிறார்கள்.

ஆம்; வீதியில் இரண்டு தபால் பியூன்கள் நிற்கிறார்கள். அவர்களது சம்பாஷணை என் காதுகளில் தெளிவாக விழுகிறது!

"எய், முனுசாமி! அதோ ஐயா வாராரு பாருடா! இவரைக் கேட்டாலும் புண்ணியவான் இரண்டு ரூபாயாவது பொங்கல் இனும் கொடுப்பாரு! மத்தக் கருமிகளைப் போய்க் கேட்டுக்கிட்டிருந்தாயே! நீ ஒருத்தன்......சாமி, நமஸ்காரமுங்க!......"

என்ன ஸார்! பார்த்தீர்களா? என்னைப் பற்றி இவர்களுக்குத் தெரிந்ததுகூட புஷ்பாவுக்குத் தெரியவில்லையே! இப்போது நீங்களே சொல்லுங்கள், நானா இளித்தவாயன்?



○●○

டென்னிஸ் கண்ணன்

தியாகராயநகர், ராமகிருஷ்ண மிஷன் ஹைஸ்கூலில் ஐந்தாவது பாரத்தில் படிக்கும் ஆர். கிருஷ்ணன் என்ற இப் பதின்மூன்று வயதுச் சிறுவன் டென்னிஸ் பந்தாட்டத்தில், சென்னையிலுள்ள சட்டக் கல்லூரி, இன்ஜினீரிங் கல்லூரி, வைத்தியக் கல்லூரி போன்ற பதினொரு கல்லூரிகளைத் தோற்கடித்து 'ஸ்டான்லி கப்' பெற்றிருக்கிறான். இதை வியந்து பாராட்டி லயோலா கல்லூரி ரெக்டர் ரெவரண்ட் ஓ. கார்டன் தனிப்பட்ட முறையில் ஒரு கோப்பையும், பீத்தாபுரம் யுவராஜா ஒரு பரிசும் அளித்திருக்கிறார்கள்.

○●○



கம்பர் தரும் காட்சி

டி. கே. சி.

306. எரிகிற வீட்டுக்குள் நின்றவர் போலத்தான்!

அரக்க வீரன் கும்பன் சுக்கிரீவனது கைக் குத்தால் மாண்டான்.

சுக்கிரீவன் அதைப் பார்த்துக் கொண்டு நின்றான்.

அந்த வேளை நிகும்பன் என்ற அரக்கன் சுக்கிரீவனை எதிர்ப்பதற்காக ஓடி வந்தான். அப்படி ஓடி வருவதைப் பார்த்த அங்கதன் குறுக்கிட்டு அந்த நிகும்பனை எதிர்த்தான்.

இருவரும் கடும்போர் புரிந்தார்கள்.

அக்கா லை
நிகும்பன் அனல்ச்சொரி
கண் ணன்

புக்கான், ' இனி
எங்(கு)அட போகுவ(து)
என் று ;—

மிக்கான் எதிர்
அங்கதன் உற்று
வெகுண் டான்,

எக்கா லமும்
இல்லதோர் பூசல்
இழைத் தார்.

[அக்காலை நிகும்பன் அனல்ச் சொரி கண்ணன் : அந்த வேளை நிகும்பன் என்ற நிப் பறக்கும் கண்களை உடையவனான அரக்கன் ; புக்கான் : இடையே வந்து புகுந்தான் ; இனி எங்கு அட போகுவது என்று : சுக்கிரீவனைப் பார்த்து நீ எங்கேடா போய் விடுவாய், பார்க்கலாம் என்று சொல்லிக் கொண்டு—புக்கான் ; மிக்கான் எதிர் : மோத வந்தவனை நிகும்பன் எதிரே : அங்கதன் உற்று வெகுண்டான் : அங்கதன் குறுக்கிட்டு கோபத்தோடு எதிர்த்தான் ; எக்காலமும் இல்லதோர் பூசல் இழைத்தார் : எக்காலத்திலும் யாரும் பார்த்திராத விதமாய் யுத்தம் செய்தார்கள்.]


* * *

நிகும்பன் கடைசியில் மாண்டான். இந்த விதமாக வானர வீரர்களால் அரக்கப் படை வீரர்களான கும்பன், நிகும்பன் மற்றும் பலர் மாய்கிறார்கள்.

இப்படியெல்லாம் பல பல சில்லறை யுத்தங்கள் நடந்து கொண்டிருக்கையில் லக்ஷ்மணனது காரியம் தொடு பிடியாய் நடந்து கொண்டிருக்கிறது.

அதிகாயனைக் கொன்றதோடு நிற்கவில்லை.

அரக்கர் சேனைகள் நின்ற நின்ற இடமெல்லாம் லக்ஷ்மணனது பெரிய பெரிய பாணங்கள் எவ்வளவோ தூரம் எட்டி வந்து ஹதம் செய்கின்றன. அந்தக் கொடுஞ் செயலைப்



எம். எல். ஏ. :— என்னப்பா! உனக்கு மூளையிருக்கிறதா? உத்தரவு இன்றி உன்னை வரக் கூடாது என்று எழுதிப் போட்டிருக்கிறதே?

சலவைத் தொழிலாளி :— ஐயா! உங்களுக்கு 1947 ஆகஸ்டு மாதம் வெளுத்துக் கொடுத்த உருப்படிகளுக்குப் பணம் இன்னும் தரவில்லை. அதைக் கொடுத்து விட்டால் உங்கள் வீட்டுப் பக்கம் காலடி கூட எடுத்து வைக்க மாட்டேன்!

யுத்த கேந்திரம்

ஜெயமணி

சயாம் (தொடர்ச்சி)

கல்வியிலும் மதத்திலும் சயாமியர்களுக்கு உள்ள பற்றுதலைப்போல் வேறு எந்த நாட்டினருக்கும் இராது என்பது மிகைபடக் கூறும் விஷயமல்ல. கிழக்கு ஆசியா நாடுகள் எல்லாம் கல்வியில் மிகவும் பிற்போக்காக இருந்த காலத்தில் கூட சயாம் கல்வித்துறையில் முன்னேற்றம் அடைந்திருந்தது அந்த நாட்டின் விசேஷ அம்சம் ஆகும். இன்று கல்வியில் அபரிமிதமாக முன்னேற்றம் அடைந்திருக்கும் பிரிட்டன் முதலிய மேல் நாடுகளில் இலவசக் கல்வி முறை ஏற்படாத காலத்திலே சயாமில் மாத்திரம் சகலருக்கும் இலவசக் கல்வி அளிக்கப்பட்டு வந்தது. இந்த ஒரு விஷயமே சயாமியர்களுக்குக் கல்வியில் உள்ள விசேஷப் பற்றுதலைக் காட்டப் போதுமானது. சயாமில் சர்வ கலாசாலைகளும் இருக்கின்றன.

இந்தியாவின் மொத்த விஸ்தீரணத்தில் பத்தில் ஒன்றுகூட இராத சயாம் நாட்டில் இருபதாயிரத்துக்கு மேல் புத்தர் ஆலயங்கள் இருக்கின்றன; இரண்டு லட்சம் பௌத்த புரோகிதர்கள் இருக்கிறார்கள். எனவே, ஆசியாவிலுள்ள மற்ற நாட்டினரைப் போல சயாமியர்களும் பண்டைய பழக்க வழக்கங்களில் அதிகப் பற்றுதல் உடையவர்களாக இருப்பதைக் குறித்து ஆச்சரியப் படுவதற்கில்லை.

அந்த நாட்டில் ஒன்றரைக் கோடிக்கு மேற்பட்ட பௌத்தர்களும் சுமார் பத்து லட்சம் முஸ்லிம்களும் இருக்கிறார்கள். சீனர்களும் பத்து லட்சம் பேர் வரையில் இருக்கிறார்கள். ஆனால் மற்றச் சமூகத்தினரின் தொகை மிகக் குறைவாகும்.

★

சயாமில் நவரத்னங்கள் கிடைக்கும் சுரங்கங்கள் இருப்பதால் நவரத்னங்களின் தராதரத்தை அறிவதில் பெரும்பாலான சயாமியப் பெண்களும் திறமை வாய்ந்தவர்களாக இருக்கிறார்கள். எனவே நவரத்னங்களால் இழைக்கப்பட்ட நகைகளை அணியும் வழக்கம் சயாமியர்களிடையே இக் காலத்தில்கூட அதிகமாக இருந்து வருகிறது.

சயாம் நாட்டிலுள்ள நதிகள் அதன் வர்த்தகப் போக்குவரத்துக்கு மிகவும் உதவியாக இருக்கின்றன. பல சயாமியர்களும் நதியில் படகுகளில் இருந்து கொண்டே வியாபாரம் செய்யும் விசித்திர வழக்கம் அந்த நாட்டில் அனுஷ்டிக்கப்படுகிறது. அவர்கள் படகுகளையே கடைகளாக மாற்றி விடுகிறார்கள். படகுகளைத் தங்களுடைய வீடாகக்கொண்டு எப்போதும் அவைகளில் வசிக்கும் குடும்பங்களும் அந்த நாட்டில் ஏராளமாக இருக்கின்றன. அந்தப் படகுகளை மிதக்கும் வீடுகள் என்று சொல்லுகிறார்கள்!

சயாமிலுள்ள பல நகரங்களிலும் விமான நிலையங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. சயாம் தலைநகரான பாங்காக்கிலுள்ள விமான நிலையம், ஐரோப்பாவிலிருந்து கீழ்த்திசை நாடுகளுக்குச் சென்று வரும் பிரிட்டிஷ், பிரஞ்சு, டச்சு விமானங்களுக்கு முக்கிய ஜங்ஷனாக இருக்கிறது.

இந்தியாவிலிருந்து சயாமுக்கு ஏராளமாகப் பருத்தியும் கோணிப் பைகளும்

சயாம் நாட்டைச் சேர்ந்த சிப்பாய்கள்



ஏற்றுமதியாகின்றன. சயாமிலிருந்து இந்தியாவில் ஏராளமாக அரிசியும் தேக்கு மரங்களும் இறக்குமதியாகின்றன.

அந்த நாட்டில் ஒருவித விசித்திர மீன்கள் இருக்கின்றன. பல தேசங்களிலும் பந்தயத்துக்குக் கோழிகளைச் சண்டையிட விடுவதுபோல, சயாமியர்கள் மேற்படி மீன்களைச் சண்டைபோட விட்டு வேடிக்கை பார்ப்பது வழக்கம். அந்த மீன்களுக்குக் கோபம் வந்தால் அவைகளின் உடல் சிவப்பு, பச்சை, மஞ்சள், நீலவர்ணங்களாக மாறும் அபூர்வமான தன்மை வாய்க்கப் பெற்றதாக இருக்கிறது.

★

சில மாதங்களுக்கு முன் சயாம் மன்னராகச் சிம்மாசனம் ஏறிய பூமிபாணுவுக்கு இருபத்து மூன்று வயதாகிறது. அவருடைய பெயர் பூமிபாலா என்றும் வழங்கப்படுகிறது. பூமிபாணுவும் அவரது மூத்த சகோதரரான ஆனந்தாவும் மேல் நாட்டில் வளர்ந்தவர்கள். பூமிபாணுவுக்கு முன் ஆனந்தாவே சயாம் மன்னராக இருந்தார். அவ்விருவரும் ஸ்விட்ஜர்லாந்தில் கல்வி பயின்று வந்தார்கள்.

சகோதரர்கள் இருவரும் 1946ம் வருஷம் சயாமுக்கு வந்தபோது, ஆனந்தா மன்னரின் சமத்துவக் கொள்கை பலரையும் திடுக்கிடச் செய்தது. சயாம் மன்னராகப் பட்டத்துக்கு வருவோரை தெய்வப் பிறவியாக எண்ணிச் சயாமியர்கள் மரியாதை செய்வது வழக்கம். எனவே, ஆனந்தா மன்னர் கிராமங்களுக்கு விஜயம் செய்து ஏழைகளுடன் சமத்துவமாக அளவளாவிப் பேசியதைக் கண்டு ஜனங்கள் திடுக்கிட்டுப் போனார்கள். ஆனந்தா மன்னரின் எளிய வாழ்க்கை, பரந்த நோக்கம் இவற்றின் உயர்வை 'அவர்களால் அறிந்து கொள்ள முடியவில்லை.

அங் கிலையில் திடீரென்று ஒரு நாள் ஆனந்தா மன்னர் தமது படுக்கையில் இறந்து கிடந்தார். அவருடைய தலையில் ஒரு தோட்டா பாய்ந்திருந்தது. அவருக்குப் பக்கத்தில் துப்பாக்கியும் கிடந்தது.

சயாமியர்கள் சகலரும் தீவிர ராஜ பக்தி உள்ளவர்கள் ஆதலால், ஆனந்தா மன்னரின் மரணம் அவர்களை மிகுந்த துக்கத்தில் ஆழ்த்தியது. தேச மெங்கும் கண்டனப் புயல் உண்டாயிற்று. ஆனந்தா சதிகாரர்களால் கொலையுண்டிருக்க வேண்டும் என்ற சந்தேகம் சயாம் மக்களுடைய மனதில் எழுந்தது.

ஆனந்தா மன்னர் மரணம் காரணமாக சயாம் மந்திரி சபை வீழ்ச்சியுற்றது. அந்தக் கோரச் சம்பவத்தை விசாரித்து, அது கொலையா அல்லது தற்கொலையா என்பதை முடிவு செய்ய ஒரு கமிஷனும் நியமிக்கப்பட்டது. மேற்படி விசாரணை ஆரம்பமாகி ஒரு வருஷத்துக்கு மேல் ஆகிறது. எனினும் மிகச் சிக்கலான அந்த விசாரணை முடிய இன்னும் பல வருஷங்கள் செல்லும் என்று சயாமியர்கள் கருதுகின்றனர்.

ஆனந்தா மன்னர் இறந்த இரண்டு மாதங்களுக்குப் பிறகு அவரது இளைய சகோதரரும் மன்னர் பட்டத்துக்கு வாரிசுமான பூமிபாணு தமது படிப்பைப் பூர்த்தி செய்வதற்காக ஸ்விட்ஜர்லாந்துக்குப் புறப்பட்டுச் சென்றார். அப்போது இருபது லட்சம் சயாமியர்கள் விமான நிலையத்துக்குச் செல்லும் ரஸ்தாவின் இருபுறத்திலும் நின்று கண்ணீர் பெருக பூமிபாணுவுக்கு விடை கொடுத்து அனுப்பினார்கள். பூமிபாணு ஸ்விட்ஜர்லாந்திலிருந்து திரும்பிவரும் வரையில் ஆனந்தா மன்னரின் சவ அடக்கம் ஒத்திவைக்கப் பட்டது.

நாலு வருஷங்களுக்குப் பிறகு சென்ற மார்ச்சு மாதம் பூமிபாணு சயாமுக்குத் திரும்பி வந்தபோது லட்சக்கணக்கான சயாமியர்கள் அவரை ஆரவாரத்துடன் வரவேற்றார்கள். அவர் திரும்பிய சில நாட்களுக்குப பிறகு ஆனந்தா மன்னரின் தகனக் கிரியை முதலியவை சயாம் மன்னர் குடும்ப வழக்கப்படி பண்டைய சம்பிரதாயங்களை அனுசரித்து நடைபெற்றன.

பிறகு சென்ற மே மாதம் புதிய மன்னர் பூமிபாணுவுக்கு முடி சூட்டு விழா பிரமாத ஆடம்பரத்துடன் நடந்தது.



சயாமியர் குடும்பம் வசிக்கும் மிதக்கும் வீடுகள்

நகைப் பைத்தியம்

எஸ். சங்கரன்

மணி ஒன்பதரை ஆகிவிட்டது. ஜகதீசன் அவசர அவசரமாக ஆபீஸுக்குக் கோட்டை மாட்டிக் கொண்டு புறப்பட்டான். புறப்படும்போது கோட்டுப் பையைப் பார்த்தான். பையில் பேனாவைக் காணவில்லை. எரிச்சலாக வந்தது அவனுக்கு.

“இந்த வீட்டில் ஏதாவது வைத்த இடத்தில் இருந்தால் தானே? வஸந்தா பேனாவைப் பார்த்தாயா?” என்று கத்தினான்.

கையில் டிபன் பொட்டலத்துடன் உள்ளேயிருந்து வந்தாள் வஸந்தா. “நானா பேனாவை எடுத்தேன்? எங்கேயாவது வைத்துவிட்டு என்மேல் ஏன் எரிந்து விழவேண்டும்?” என்று பதிலுக்குக் கூச்சல் போட்டாள்.

நல்லவேளையாக மேஜை டிராயரிலேயே பேனா இருந்து அகப்பட்டு விட்டது. டிபன் பொட்டலத்தைக் கோட்டுப் பையில் திணித்துக் கொண்டு கிளம்பினான் ஜகதீசன்.

“சாயந்திரம் சீக்கிரமாகத் திரும்பி வரேளா?” என்ற வஸந்தாவின் உத்தரவைக் கேட்டு வாசற் படியில் நின்று திரும்பிப் பார்த்தான். அவன் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தது.

“சீக்கிரமாக வந்து எந்தக் கோட்டையைப் பிடிக்கப் போக வேண்டும், மகாராணிக்கு!” என்று பாதி கோபமும் பாதி பரிகாசமும் நிறைந்த குரலில் இரைந்தான்.

“புடவை வாங்கணும்” என்றாள் வஸந்தா சாவதானமாக.

“தினம் ஒரு புடவை வாங்க இங்கு கொட்டியா வைத்திருக்கிறது?” என்று வெறி பிடித்தவன் போல் கத்திவிட்டு ‘விர்’ரென்று போய் விட்டான் ஜகதீசன்.

அவன் போன வழியைப் பார்த்துக் கொண்டே வெகுநேரம் நின்று கொண்டிருந்தாள் வஸந்தா. அவளுக்கு அழுகை அழுகையாக வந்தது. துக்கம் நெஞ்சையடைத்தது. பலவிதமான எண்ணங்கள் அவள் மனதைத் தாக்கின. உள்ளே சென்று கட்டிலில் ‘தொப்’பென்று விழுந்தாள். தன்னைவிட அதிர்ஷ்டக் கட்டையான ஜென்மம் வேறு இருக்க முடியுமா என்று எண்ணி ஏங்கியது அவள் மனம்.


* * *

அட்வோகேட் ஆத்மநாதய்யர் என்றால் மதுரை ஜில்லாவிலேயே வெகு பிரசித்தம். ‘பெரிய புள்ளி’ என்று எல்லோராலும் மதிக்கப்பட்டவர். ஏராளமான சொத்திருந்தது. அவரது கடைசிப் பெண்தான் வஸந்தா. முதலிரண்டு பெண்களுக்கும் தனது அந்தஸ்துக்கேற்ற இடத்தில் கல்யாணம் செய்து கொடுத்த அவர், வஸந்தாவுக்குச் சாதாரண இடமாக இருந்தாலும் தனக்கு அடங்கியவனாக, தம் வீட்டோடு இருக்கக் கூடிய பிள்ளையாகப் பார்த்தார். இந்த நோக்கத்துடன் சாதாரண கம்பெனியொன்றில் உத்தியோகத்தில் இருந்த ஜகதீசனைத் தமது மாப்பிள்ளையாக்கிக் கொண்டார்.

பணக்காரர்களின் உறவே கூடாதென்று சொல்லி வந்த ஜகதீசன் அவனது பெற்றோர்களின் வற்புறுத்தலின் பேரிலேயே இந்தக் கல்யாணத்துக்குச் சம்மதித்தான். மணம் செய்து கொண்டவுடன் முதல் காரியமாகச் சென்னையிலிருந்த கம்பெனியின் தலைமைக் காரியாலயத்துக்குத் தன்னை மாற்றிக்கொண்டான். இதைக் கண்டு அட்வோகேட் ஆத்மநாதய்யர் திடுக்கிட்டார். எவ்வளவோ மாப்பிள்ளைக்குச் சொல்லிப் பார்த்தார். எவ்வளவு முயன்றும் தமது திட்டம் வெற்றி பெறாமல் போகவே ஆத்மநாதய்யர் ஜகதீசனுடைய போக்குப்படியே விட்டு விட்டார்.

கணவனுடன் தனிக் குடித்தனம் செய்ய வஸந்தா புறப்பட்ட பொழுது, அவளையே பறிகொடுத்து விடுபவரைப் போல் மனங் கலங்கினார் ஆத்மநாதய்யர். வாழ்நாள் முழுவதும் தனக்குப் பற்றுக் கோலாக விளங்கப் போகிறவன் ஜகதீசன்தான் என்பதை வஸந்தா உணராமல் இல்லை. உடம்பில் தூசிப்படாமல் சீரும் சிறப்புமாக இருந்து விட்டுப் போகிற இடத்தில் எப்படியிருக்குமோ என்று பயந்தது அவள் மனம். ஜகதீசனிடம் அவளுக்கு அன்பு இல்லையென்று சொல்லிவிட முடியாது. சிலரைப்போல் ஒரு ஏழைக் குமாஸ்தா என்பதற்காக அலட்சியமாக நினைக்கவில்லை அவள்.

தனிக் குடித்தனம் வைத்த சில மாதங்கள் வரை யாதொரு சலனமுமின்றியே கழிந்தது. ஜகதீசன் சினிமா கதாநாயகர்களைப் போல் நடந்து கொள்ளாவிட்டாலும், உண்மை அன்பு பாராட்டினான். ஆனால் ஒரே ஒரு குறை அவனிடமிருந்தது. சாமர்த்தியமாகப் பேசவோ நடிக்கவோ, அவனுக்குத் தெரியாது. எதையும் ‘பட்’ ‘பட்’டென்று சொல்லி



மானேஜர்:—ஏன் அப்பா! வான நிலைக் கருவிகளைப் பார்க்காமலே இன்று மழை நிச்சயம் வரும் என்று எழுதியிருக்கிறாயே?

குமாஸ்தா:—பார்க்க வேண்டிய அவசியமில்லை, ஸார்! என் பாட்டி இன்று கருவடாத்திற்கு நனைத்திருக்கிறாள், கட்டாயம் மழை கொட்டப் போகிறது!

விடுவான். 'உம்' மென்பதற்கு முன்பு பொத்துக் கொண்டு வந்துவிடும் கோபம் அவனுக்கு.

வயது இருபதாகியும் விவரம் தெரியாத சிறு குழந்தையைப் போலவே இருந்தாள் வஸந்தா. முன் கோபியான ஜகதீசனை அனுசரித்துக் கொண்டு போகத் தெரியவில்லை அவளுக்கு. இங்கிதம் தெரியாமல் அவள் நடந்து கொண்டதே ஜகதீசன் அடிக்கடி எரிந்து விழுந்ததற்குக் காரணம் என்று கூடச் சொல்லலாம். ஆபீஸுக்கு நேரமாகிவிட்டதென்று பறந்து கொண்டிருக்கும்போதும், குழம்பில் உப்புப் போடவில்லை என்று கோபித்துக் கொண்டிருக்கும்போதும் 'புடவை வேண்டும், நகை வேண்டும்' என்று நச்சரித்து எரிகிற நெருப்பில் எண்ணெயை ஊற்றி ஜகதீசனின் வெறுப்பைச் சம்பாதித்துக் கொண்டு விட்டாள் வஸந்தா.

வேளைக்கொரு புடவையும் நாளைக்கொரு நகையும் கேட்டபோதெல்லாம் கிடைத்து வந்தது பிறந்த வீட்டிலே அவளுக்கு. இதையே தன் கணவனிடமும் அவள் எதிர் பார்த்தாள். ஜகதீசனுக்கு வாங்கிக் கொடுக்கக் கூடாதென்ற எண்ணம் கிடையாது. தினம் ஒன்று வாங்கிக் கொடுக்கா விட்டாலும், தன் சக்திக் கியன்றதை யாவது செய்திருப்பான். ஆனால் வஸந்தா தன் கோரிக்கையைச் சமர்ப்பிக்கும் சமயம் தான் சரியாக இருப்பதில்லை.

முதுகெலும் பொடிய உழைத்து விட்டுச் சோர்வுடன் வீடு திரும்பும்போது அன்புடன் வரவேற்று ஆச்வாசப்படுத்தா விட்டாலும், அது வேண்டும், இது வேண்டும் என்று தொண தொணக்காமலிருந்தாலாவது ஜகதீசனுக்கு வாழ்க்கையில் வெறுப்பேற்படாமல் இருந்திருக்கும். இயற்கையான உணர்ச்சிகளும் விருப்பு வெறுப்புகளும் மரத்து விடும் அளவுக்குப் புடவை மோகமும் நகைப் பைத்தியமும் வஸந்தாவுக்குப் பிடித்திருந்ததைக் கண்டு அவன் மிகவும் வருந்தினான்.

ஜகதீசனுடைய சக்திக்கு மீறியதைக் கேட்கிறோ மென்பதையோ, அது அநியாய மென்பதையோ வஸந்தா உணரவே இல்லை. வேண்டுமென்றே தன்னை அவன் உதாசீனம் செய்வதாக எண்ணி மனம் புழுங்கினாள். புதுப் புது புடைவைகளையும் நகைகளையும் அணிந்து கொண்டு அவைகளைக் காட்டிவிட்டுப் போவதற்காக ஏதாவது சாக்கு வைத்துக் கொண்டு வந்து விட்டுப் போகும் சிநேகிதிகளைக் காணும் போதெல்லாம் அவளுக்கு நெஞ்சு வேதனையால் வெடித்துவிடும் போலிருக்கும். தலையணையில் முகத்தைப் புதைத்துக் கொண்டு ஒரு குறை அழுது தீர்த்த பின்னரே அது அடங்கும்.

ஆறுமாத காலமாக அவளும் தான் கேட்டு வருகிறாள், ஒரு 'மாங்காய் மாலை' வேண்டுமென்று. இன்றைக் கெல்லாம் இருந்தால் நான்கு பவுன்கள் ஆகும். இதைக் கூடச் செய்து தர மறுப்பதைக் கண்டு அவளுக்குத் துக்கம் குமுறிக் கொண்டு வந்தது. தன் வயதை யொத்த பெண்கள் விதம் விதமான உடையுடுத்துக் குதூகலமாகப் பல இடங்களுக்குப் போய் வருவதைப் பார்த்துப் பொறாமையால் புழுங்கியது அவள் மனம். தான் இருந்ததையும் இப்பொழுது இருப்பதையும் நினைத்துப் பார்த்தபோது அவளுக்கு வாழ்க்கையிலேயே வெறுப்பு ஏற்பட்டு விட்டது. காலேஜ் படிப்பையும் எட்டிப் பார்த்தவள்தான். ஆனாலும் அவசியமில்லாத எதை யெல்லாமோ அலசி ஆராய்ந்து படித்துத் தெரிந்து கொண்ட அவள், தான் சந்தோஷமுடன் வாழ்க்கை நடத்துவதற்கு என்ன வேண்டு மென்பதைத் தெரிந்து கொள்ளாதது அவளுடைய தவறென்று எப்படிச் சொல்ல முடியும்?

ஜகதீசனே தனது வாழ்வே கசந்து போகும்படி செய்து விட்டவள் வஸந்தா தான் என்றெண்ணினான். ஜகதீசனாலேயே

தன் வாழ்வு சூன்யமாகிவிட்டதாக எண்ணிப் பொருமிக் கொண்டிருந்தாள் வஸந்தா. "கமலாவின் கணவரும் அவரைப் போன்ற வேலையிலிருப்பவர் தானே. அவர் மட்டும் கமலாவுக்கு 'மாங்காய் மாலை' வாங்கிக் கொடுக்கவில்லையா? இவரால் மட்டும் ஏன் முடியாதாம்? கொஞ்சமாவது அன்பிருந்தால்தானே?" என்று தனக்குத்தானே நொந்து கொண்டாள். இப்படிப் பலவிதமாக எண்ணி எண்ணிக் கண் கலங்கினவள், அப்படியே சற்று நேரத்தில் தூங்கிப் போனாள்.

* * *

என்றுமில்லாத திருநாளாக "வஸந்தா, வஸந்தா" என்று வாய் நிறைய மனசில் சந்தோஷம் பொங்கக் கூப்பிட்டுக் கொண்டே உள்ளே நுழைந்த ஜகதீசனைக் கண்டு வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்திருந்தாள் வஸந்தா. காலையில் கோபத்துடன் படுத்தவள்தான். மத்தியானம் சாப்பிடக் கூட இல்லை. அழுதழுது அவள் கண்கள் கோவைப் பழம்போல் சிவந்திருந்தன. கன்னத்தில் கண்ணீர் வழிந்து கரை இட்டிருந்தது.

"வெகு நாட்களாகக் கேட்டுக் கொண்டிருந்தாயல்லவா, இந்தா!" என்று சொல்லிக் கையிலிருந்த அழகிய சிறு பெட்டியை அவளிடம் கொடுத்தான் ஜகதீசன்.

மெள்ள அதை வாங்கித் திறந்து பார்த்த வஸந்தாவின் முகம் ஒரேயடியாக மலர்ந்தது. மனம் உவகையால் துள்ளியது. புது மெருகுடன் மள மள வென்று விளங்கும் 'மாங்காய் மாலை'யை எடுத்துக் கழுத்தில் அணிந்து கொண்டாள். அவள் துக்கமெல்லாம் இருந்த இடம் தெரியாமல் ஓடிவிட்டது. குதித்துப் பாட வேண்டும்போலிருந்தது அவளுக்கு.

நகையைக் கொடுத்து விட்டு, சற்று நேரத்துக்குள் அடுத்த வீட்டுக்குச் சீட்டாடப் போய் விட்டான் ஜகதீசன். வேலையெல்லாம் முடிந்து விச்ராந்தியாகப் படுக்கையில் படுத்த போதுதான் நகையை வாங்க ஜகதீசனுக்கு எப்படி முடிந்தது என்ற எண்ணம் ஏற்பட்டது வஸந்தாவுக்கு. 'என் தொந்தரவு பொறுக்காமல் எங்கேயாவது கடன் வாங்கியிருப்பாரோ?' என்றும் எண்ணினாள். இப்படிப் பலவிதமாக ஓடியது அவள் சிந்தனை.

இந்தச் சமயத்தில் "வஸந்தா, விஷயத்தைக் கேட்டாயா?" என்று பதட்டத்துடன் கமலா ஓடி வந்ததைக் கண்டு பயந்து விட்டாள் வஸந்தா.

"உங்கள் வீட்டுக்காரர், கம்பெனிப் பணத்தைக் கையாடி விட்டாராமே? போலீஸில் வந்து பிடித்துக் கொண்டு போயிருக்கிறார்களாம். இப்போ என்னடி அவருக்கு அவ்வளவு பணமுடை?" என்று கேட்டாள் கமலா.

அதற்குமேல் எதுவும் வஸந்தாவின் காதுகளிலே விழவில்லை. உலகமே வெடித்துத் தன் தலையில் விழுந்தாற்போலிருந்தது அவளுக்கு. 'இப்பொழுது என்ன பணமுடை?' என்ற கமலாவின் கேள்வி மீண்டும் மீண்டும் வந்து அவள் எண்ணத் திரையிலே வட்டமிட்டது. 'எனக்கு நகை வாங்கத்தான் இக் காரியத்தைச் செய்து விட்டாரா?' என்ற சந்தேகமே திரும்பத் திரும்ப அவள் உள்ளத்தில் எழுந்தது.

"தப்பவே வழியில்லை! குற்றத்தை அவர் ஒப்புக் கொண்டு விட்டாராம்" என்று தொடர்ந்து கமலா சொல்லிக்



கொண்டு போனதைக் கேட்டு அவள் நெஞ்சம் வெடித்து விடும்போலிருந்தது.

ஜகதீசன் திருடிய வழக்கு கொஞ்ச நாட்களில் கோர்ட்டுக்கு வந்தது. ஊரெல்லாம் அமர்க்களப்பட்டது.

கோர்ட்டிலே குற்றத்தை ஒப்புக் கொண்டு விட்டான் ஜகதீசன். "என் மனைவியின் தொல்லையைப் பொறுக்காமல்தான் இதைச் செய்தேன்" என்றான் ஜகதீசன். ஆறுமாதக் கடுங்காவல் எனத் தீர்ப்புக் கூறினார் நீதிபதி. உடனே போலீஸ்காரர்கள் கையில் விலங்குடன் கட்டி இழுத்துக் கொண்டு போனார்கள் ஜகதீசனை......அப்போது, அவளுக்குத் தன்னைச் சுற்றியுள்ள எல்லாமே சுழல்வது போலிருந்தது!

"உனக்காகத்தானே இதை அவர் செய்தார், புடவை, நகை என்று பிச்சுப் பிடுங்கி எடுத்தாயல்லவா? உனக்கு வேண்டும்! இதுவும் வேண்டும்; இன்னமும் வேண்டும்!" என்று விடாமல் சொல்லிக் கொண்டு போனாள் கமலா.

"ஐயையோ எனக்காகச் செய்தாரா? எனக்கு நகை வேண்டவே வேண்டாம்" என்று வெறி பிடித்தவள் போல் கதறினாள் வஸந்தா. "உன்னால் தானே இந்தக் கதி" என்ற சொற்கள் இடைவிடாது அவள் காதுகளிலே வந்து ஒலித்தன. அதிர்ச்சி தாங்காது எழுந்து உட்கார்ந்தாள். கண்களைக் கசக்கி அகல விழித்து எதிரே நோக்கினாள்......எல்லாம் பிரமை. எல்லாம் கனவு. ஆம்; அவள் இத்தனை நேரம் கண்டதெல்லாம் கனவு! அவளுடைய கணவன் நகை வாங்கி வந்தது, களவாடியது, கோர்ட்டில் ஏறியது, கைது செய்யப்பட்டது—யாவும் கனவு. காலையில் கோபித்துக்கொண்டு ஆபீஸுக்குப் போன கணவன் இன்னும் திரும்ப வில்லையே. அதற்குள் எவ்வளவு கெட்ட சொப்பனம். எனினும் அவ்வளவும் சொப்பனம்தானே. உண்மையல்ல என்பதில் அவளுக்குச் சற்று ஆறுதல் ஏற்பட்டது.



"ஸார்! ஸார்! உங்கள் தொப்பியை வைத்துவிட்டு, முறத்தைத் தலையில் வைத்துக்கொண்டு போகிறீர்களே!"

* * *

ஆனால் அன்று மாலை வீட்டுக்குள் ஜகதீசன் எதிர்பாராத விதமாக உண்மையிலேயே கையில் நகைப் பெட்டியுடன் நுழைந்தான். எதிரே வந்த வஸந்தா "இதை முதலில் திருப்பிக் கொடுத்துவிட்டு மறுவேலையைக் கவனியுங்கள்!" என்று உத்திரவிட்டாள். இதைக் கண்டு அப்படியே ஸ்தம்பித்து நின்று விட்டான் ஜகதீசன். விவரிக்கமுடியாத பயம் அவனைச் சூழ்ந்து கொண்டது. உடம்பு 'குப்' பென்று வியர்த்து விட்டது. "ஏன்? என்ன?" என்று நாக் குழறக் கேட்டு வைத்தான்.

"இதற்கு எவ்வளவு பணம் கொடுத்தீர்கள்?" என்று கேட்டாள் வஸந்தா.


தன்னை 'சுதாரித்'துக் கொள்ளச் சற்று நேரம் பிடித்தது அவனுக்கு. மெல்ல மென்று விழுங்கினான். "இல்லை...வந்து முன்னூறு ரூபாய் என்று பேசி முடித்தேன். இன்னும் பணம் கொடுக்கவில்லை. மாதா மாதம் ஐம்பது ரூபாய் தருவதாக ஏற்பாடு" என்றான்.

தன் பாரமனைத்தும் நீங்கியதைப் போன்று நீண்ட பெருமூச்சு விட்டாள் வஸந்தா. "பணம் கொடுக்காத வரை நல்லதாகப் போயிற்று. போங்கள்! உடனே போய் இதை வேண்டாமென்று திருப்பிக்கொடுத்துவிட்டு வந்துவிடுங்கள்" என்று விரட்டாத குறையாகக் கூறினாள்.

ஜகதீசனுக்கு ஒன்றுமே புரியவில்லை. "ஏன், அது உனக்கு வேண்டாமா......? பிடிக்கவில்லையா?" என்றான்.

"எனக்கு இனிமேல் நகையே வேண்டாம். என்னைப் பிடித்திருந்த பைத்தியம் இன்றோடு விட்டது. உடனே போய் திருப்பிக் கொடுத்துவிட்டு வாருங்கள்" என்று பெட்டியை அவன் கையிலே திணித்தாள்.

ஜகதீசன் நிம்மதியாக நீண்டதொரு பெருமூச்சு விட்டான். ஆனாலும் வஸந்தாவின் நகைப் பைத்தியம் தெளியக் காரணமாக இருந்தது என்னவென்பது மட்டும் அவனுக்குப் புரியவில்லை. அதைக் கேட்டுக் கொண்டிருக்கவுமில்லை. அந்த மாங்காய் மாலை வெறும் 'இமிடேஷன்' என்பதையும், அதன் விலை இருபத்தைந்து ரூபாய்தான் என்பதையும் வஸந்தா தெரிந்து கொள்ளவில்லையென்பதைக் கண்டு பெரிதும் ஆறுதலடைந்தான். அது மட்டுமல்ல; போன உயிரே திரும்பிவந்தது போலவுமிருந்தது ஜகதீசனுக்கு!


SPECIAL CONCESSION
FOR 2 WEEKS ONLY
AT LESS THAN HALF PRICES
EACH GTD. 10 YEARS
ALARM TIME PIECE
605 ப்ளைன் 30/- 12/-
605 சுபீரியர் 36/- 16/8
606 15 ஜுவல் க்ரோம் 76/- 38/-
606 15 ,, ரோல்டுகோல்டு 86/- 43/-
606 15 ஜுவல் சுபீரியர் 100/- 48/-
607 5 ஜுவல் க்ரோம் 60/- 29/8
607 5 ,, ரோல்டு கோல்டு 70/- 34/8
608 க்ரோம் கேஸ் 25/- 13/-
608 உயர் ரகம் 32/- 15/-
தபால் செலவு தனி. இரண்டாக ஆர்டர் செய்வோருக்கு இலவசம்
PIONEER WATCH Co
POST BOX NO 11428 CALCUTTA


ஜல தோஷம், மார்-சளி உடம்பு வலிகளுக்கு நிவாரணமளிக்கிறது
'ஜீவான்ஜன்'
சரீரத்தின் மேல் தடவி தேய்ப்பதற்கும் ஆவியாக சுவாசிப்பதற்கும் உபயோகரமானது ரஸாயனக் களிம்பு, மிருக கொழுப்பு சேராதது
தயாரிப்பவர்கள்
ஜீவான்ஜன் லாபொரட்டரீஸ் லிட்.
மதராஸ்-14
ஜீவான்ஜன்
ஸேல் ஏஜெண்டுகள்
கே.கே.பிள்ளை & கோ
ராயப்பேட்டை, மதராஸ்-14
ஜீவான்ஜன்


இருமல்களுக்கு
ஸிரோலின்
உட்கொள்ளுங்கள்!
SIROLIN
ஒரு 'ரோச்'
தயாரிப்பு


எக்ஸிமா
சரும வியாதிகளுக்கு, முக்கியமாக எக்ஸிமாவுக்கு ஸைமாக்ஸ் மிகவும் சிறந்தது. சருமத்தின்மேல் ஏற்படும் எரிச்சலை மாயமாய்ப் போக்குகிறது. சருமத்தை இயற்கை நிறத்துக்கும் தன்மைக்கும் கொண்டுவருகிறது. என்றும் ஒரு பாட்டில் உங்கள் வசம் இருக்கட்டும்
ZIMAX
AN ECZEMA CURE


தந்த சுகாதாரம்
சொத்தையான பற்கள் சீரான தேக ஆரோக்கியத்தைப் பாதிக்கின்றன. தைமோசினால் பற்களையும் ஈறுகளையும் பாதுகாருங்கள். பயோரியா நோய்களையும் சுவாசத்தில் துர்நாற்றத்தையும் தவிர்க்கிறது. உங்கள் குடும்பத்துக்கு மிக அவசியமானது
THYMOCIN
FOR DENTAL HYGEINE

ஆரோக்கியமும் சந்துஷ்டியுமுள்ள குழந்தைகளுக்கு

அவர்கள் செலவழித்த சக்தியைத் திரும்பப் பெற <u>அதிகப்படி</u> உணவு அவசியம்.



குழந்தைகளின் விளையாட்டிலும், படிப்பு வேலையிலும் அதிகமாக ஜீவசக்தி விரயமாகி விடுவதால், ருசி மிகுந்த ஒவல்டின் இழந்த சக்தியைப் புதுப்பிக்க உதவும்.

ஒவல்டின் இளங் குழந்தைகளுக்கும் சுலபமாக ஜீரணமாகும். விவேகமுள்ள தாய்மார் அவர்களது குடும்பத்தினருக்கு காலையிலும், இரவில் படுப்பதற்கு முன்பும் ஒவல்டினைக் கொடுக்கின்றனர்.

குழந்தைகள் "ஒவல்டின்" மணத்தை விரும்புகின்றனர். அதில் பழுத்த பார்லி மால்டிலிருக்கும் புஷ்டி, ஜீவ சக்தியளிக்கும் குணங்களும், சுத்தமான ஏட்டுப்பால், விசேஷமாகத் தயாரித்த கோக்கோ, மதிப்பு வாய்ந்த இயற்கை பாஸ்படைட்கள், விடமின்கள் முதலியவை நிறைந்த அளவில் அடங்கியுள்ளன.

இளம் உடல் வளரவும், எதிர்கால ஆரோக்கியத்தை உறுதிப்படுத்தவும் உங்கள் குழந்தைகளுக்கு "ஒவல்டின்" கொடுங்கள். இப்பெயர் கொண்டது இது ஒன்றுதான்.

'OVALTINE'



ஒவல்டின்

உலகில் மிகப் பிரசித்தி பெற்ற உணவு பானம்

விநியோகஸ்தர்கள்: கிறஹாம்ஸ் டிரேடிங் கம்பெனி (இந்தியா) லிட்.

OV. 301.

Edited, Printed and Published by R. Krishnamurthy at the "Kalki" Press
116-119, Sladens Garden, Poonamallee High Road, Kilpauk, Madras

கல்கி



ALKI செப்டம்பர் 17, 1950 4 அண

REGD. No. M. 4392



RP. 63-172 TM